# குடியியற் கல்வி

# தரம் 6

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்



சகல பாட நூல்களையும் இலத்திரனியல் ஊடாகப் பெற்றுக் கொள்வதற்கு
**www.edupub.gov.lk** வலைத்தளத்தை நாடுங்கள்.

முதலாம் பதிப்பு - 2014
இரண்டாம் பதிப்பு - 2015
மூன்றாம் பதிப்பு - 2016
நான்காம் பதிப்பு - 2017
ஐந்தாம் பதிப்பு - 2018
ஆறாம் பதிப்பு - 2019
ஏழாம் பதிப்பு - 2020

எல்லா உரிமையும் இலங்கை அரசினர்க்கே

ISBN 978-955-25-0083-1

இந்நூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்
அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தில்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

Published by: Educational Publications Department
Printed by: State Printing Corporation

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே.

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழும் இல்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல - அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ.

**ஆனந்த சமரக்கோன்**
கவிதையின் பெயர்ப்பு.

## முன்னுரை

*உலகம் நாளுக்கு நாள் விருத்தி அடைந்து செல்கின்றது. அதற்கேற்பக் கல்வித் துறையும் எப்போதும் புதுப்பொழிவு பெறுகின்றது. அதனால், எதிர்காலச் சவால்களுக்குச் சிறப்பாக முகங்கொடுக்க முடியுமான மாணவர் சமுதாயமொன்றை உருவாக்க வேண்டுமாயின், எமது கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளும் வினைத்திறன் மிக்கதாக அமைய வேண்டும். அதற்கு வலுவூட்டி நவீன உலக அறிவை வழங்கும் அதேவேளை உலகிற்கு நற்பண்புகள் நிறைந்த பிரசைகளை உருவாக்குவதற்கு உதவுவதும் எமது பொறுப்பாகும். தேசத்தின் பிள்ளைகளின் அறிவுத் தீபத்தை ஏற்றும் உன்னத நோக்கத்துடன் எமது திணைக்களம் கற்றல் சாதனங்களை உருவாக்கும் செயற்பாட்டில் செயலூக்கத்துடன் ஈடுபட்டு அதற்குப் பங்களிப்பு வழங்குகின்றது.*

*பாடநூல்கள் அறிவு நிறைந்த களஞ்சியங்களாகும். அவை சில வேளைகளில் எங்களை இரசனை உலகிற்கு அழைத்து செல்வதுடன் தர்க்கரீதியாகச் சிந்திக்கும் ஆற்றலையும் வளர்க்கின்றது. மறைந்துள்ள ஆற்றல்களை வெளிக்கொணர்கின்றது. எதிர்காலத்தில் எப்போதாவது, இந்தப் பாடநூல்கள் தொடர்பான சில ஞாபகங்களை மீட்கும்போது அவை உங்கள் மனதுக்கு இதமானதாக அமையும். இந்தப் பெறுமதி வாய்ந்த கற்றல் சாதனத்தின் மூலம் சிறந்த பயன்பெறும் அதேவேளை மேன்மேலும் சிறந்த அறிவு மூலங்களை நெருங்குவதும் உங்களுக்குப் பயனுள்ளதாக அமையும். இலவசக் கல்வியின் பெறுமதிமிக்க ஒரு பரிசாக இப்பாடநூல் உங்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றது. பாடநூல்களுக்காக அரசாங்கம் செலவிட்டுள்ள பெருந் தொகைப் பணத்திற்கு, உங்களால் மாத்திரமே பெறுமதி சேர்க்க முடியும். இப்பாடநூலை சிறப்பாகப் பயன்படுத்தி சிறந்த அறிவும் பண்பாடும் கொண்ட பிரசைகளாகி நாளைய உலகிற்கு ஒளியூட்டுவதற்கு உங்கள் அனைவருக்கும் ஆற்றலும் தைரியமும் கிடைக்க வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.*

*இப்பாடநூலை உருவாக்குவதில் அளப்பரிய பங்களிப்பு வழங்கிய எழுத்தாளர் மற்றும் பதிப்பாசிரியர் குழுக்களின் அங்கத்தவர்களுக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

**பீ. என். அயிலப்பெரும**
*கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்*
*கல்வி வெளியீட்டுத் திணைக்களம்*
*இசுருபாய*
*பத்தரமுல்ல*
2020. 06. 26

## கண்காணிப்பும் மேற்பார்வையும்

**பீ. என். அயிலப்பெரும**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## வழிகாட்டல்

**டபிள்யூ. ஏ. நிர்மலா பியசீலி**

ஆணையாளர் (அபிவிருத்தி)
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## இணைப்பாக்கம்

**யூ. எல். உவைஸ்**
உதவி ஆணையாளர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## பதிப்பாசிரியர் குழு

**வீ. தியாகராஜா**
சிரேஷ்ட ஆலோசகர்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவல.

**விசாகா சூரிய பண்டார**
சிரேஷ்ட விரிவுரையாளர்
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்,

**ஏ. எச். டீ. தக்ஷிலா ஜயமிணி**
உப பீடாதிபதி
றுஹுணு தேசிய கல்வியியற் கல்லூரி.

**யூ. ஐ. கே. த சில்வா**
விரிவுரையாளர்
தேசிய கல்வி நிறுவகம்.

**ஆர். எம். பீ. ஏ. குணதிலக**
சிரேஷ்ட விரிவுரையாளர்
சியன தேசிய கல்வியியற் கல்லூரி.

**பாலித அரவிந்த வீரகொடி**
உதவி ஆணையாளர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**யூ. எல். உவைஸ்**
உதவி ஆணையாளர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## எழுத்தாளர் குழு


**ஹிமாராணி மாசிலாமணி**
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்
வலயக் கல்வி பணிமனை, ஹொரண.

**என். நாகேந்திரன்**
ஆசிரியர்
எருவில் கண்ணகி மகாவித்தியாலயம், களுவாஞ்சிக்குடி.

**எம்.ஏ.எம். ஹூவைஸ்**
ஆசிரியர்
அல் - சபா மகா வித்தியாலயம், வத்தேகெதர, பொல்கொல்ல.

**சீ. எஸ். ஜயசிங்ஹ**
ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளர் (ஓய்வு)
வலயக் கல்வி பணிமனை, ஹொரண.

**எம். கே. கிங்ஸ்லி பிரியந்த**
சிரேஸ்ட விரிவுரையாளர்
ஸ்ரீ ஜயவர்தன பல்கலைக்கழகம்

**எச். எச். அருண இந்திரசேன**
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்
வலயக்கல்வி பணிமனை, பலாங்கொட

**கே. கே. எஸ். குணதிலக்க**
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்
வலயக்கல்வி பணிமனை, கம்பஹா.

**அனோமா கருணாநாயக்க**
சேவைக்கால ஆசிரியர் ஆலோசகர்
வலயக் கல்விப் பணிமனை, கொழும்பு.

**எம். கே. கிங்ஸ்லி பிரியந்த**
சிரேஷ்ட விரிவுரையாளர்
றுஹூணு தேசிய கல்வியியற் கல்லூரி.

**ஜே. எம். எம். ஜயசுந்தர**
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்.


## மொழிப் பதிப்பாசிரியர்


**ஏ. எம். எம். ஸியாத்**
ஆசிரியர்
அல் - அஷ்ரப் மத்திய கல்லூரி, இறக்காமம்.

## சரவை நோக்கு

**எம். ஏ. நூருல் பரீஹா**
ஆசிரியர்
குமாரி முல்ல முஸ்லிம் மகா வித்தியாலயம், பூகொட.

## கணினி வடிவமைப்பு

**சதாசிவம் நந்தினி**
கணினி வடிவமைப்பாளர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

**பரமநாதன் உஷாநந்தனி**
கணினி வடிவமைப்பாளர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

## சித்திரம், அட்டைப் படம்

**சகுந்தலா வேஹல்ல**
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (ஓய்வு)
வலயக் கல்வி பணிமனை, கொழும்பு.

**டீ.எல். அமித்து புத்திக்க**
கணினி உதவியாளர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

# உள்ளடக்கம்

பக்கம்


1. எமது பாடசாலை 1

2. நாம் வாழும் பிரதேசம் 52

3. நற்பிரசை 77

# 1 எமது பாடசாலை

## அறிமுகம்

எமக்கு வீடு தவிர்ந்த மிகவும் பரீட்சயமான சூழல் பாடசாலை ஆகும். எம்மைச் சிறந்த நற்பண்புமிக்க, ஒழுக்கமுடைய, நற்குணமுடைய நற்பிரசைகளாக மாற்றுவதற்கு பாடசாலை அளப்பரிய சேவையாற்றுகின்றது.

பாடசாலையானது தனி மனிதனின் விருத்திக்கு மட்டுமன்றி சமூக விருத்திக்கும் பங்களிப்புச் செய்கின்றது. சமூக அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வதற்குத் தேவையான அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றைக் கொண்ட செயற்றிறன் மிக்கவர்களை உருவாக்குமிடம் பாடசாலை அல்லவா? சமூகத்திற்குத் தேவையான சிறந்த நற்பண்புள்ள பிரசைகளை பாடசாலை உருவாக்குவதன் காரணமாக நாம் பாடசாலைக்கு எமது நல்லபிமானத்தையும் மனப்பூர்வமான கௌரவத்தையும் வழங்குகின்றோம்.



உரு 1.1

# பாடசாலையை அறிந்து கொள்வோம்

## 1.1 எமது பாடசாலை வரலாறு

உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் உங்கள் கிராமத்துக்கும் வரலாறு ஒன்று உண்டு. அவ்வாறே உமது பாடசாலைக்கும் வரலாறு ஒன்று உண்டு. வரலாறு என்பது கடந்த காலங்களில் வாழ்ந்த மக்கள் மற்றும் அவர்கள் செய்தவைகள், சொன்னவைகள் தொடர்பான தகவல்களை தேடியறிந்து அவற்றை தெளிவுபடுத்துவதாகும்.

பாடசாலையின் வரலாறு என்பதனால் கருதப்படுவது பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து இன்று வரை காணப்படும் மாற்றங்கள் பற்றிய தகவல்களாகும்.

வரலாறு பற்றிய தகவல்களை அறிந்து கொள்வதற்குப் பயன்படுகின்ற எல்லாவற்றையும் மூலாதாரம் என்று சொல்வோம்.

உமது பாடசாலையின் வரலாறு பற்றிய தகவல்களை அறிந்து கொள்வதற்கு உதவியாக இருக்கும் மூலாதாரங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- பாடசாலையில் பல இடங்களில் காணப்படும் நினைவுப் பலகைகள்
- கிராமத்தின் அல்லது, நகரத்தின் நூலகங்களில் இருக்கும் புராதன நூல்கள், ஆவணங்கள், படங்கள் மற்றும் புகைப்படங்கள்.
- ஓய்வு பெற்ற அதிபர்கள், ஆசிரியர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய தகவல்கள்
- பாடசாலையில் பயன்படுத்துப்படும் ஆவணங்கள் (பாடசாலைச் சம்பவதிரட்டுப் புத்தகம் (Logbook), மாணவர் சேர்வு இடாப்பு, புள்ளிவிபர அறிக்கைகளிலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய தகவல்கள்.)
- சமயத் தலைவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய தகவல்கள்.
- பழைய மாணவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய தகவல்கள்.

தரம் 6 மாணவர்கள், தமது பாடசாலை பற்றிய தகவல்களை அறிந்து கொள்வதற்கு முடிவெடுத்தார்கள். இதற்காக பாடசாலையில் முதலாவதாக சேர்ந்த பழைய மாணவரொருவரைப் பாடசாலைக்கு அழைத்து, அவரின் மூலமாக தகவல்களை அறிந்து கொள்ளத் தீர்மானித்தனர்.

ஆசிரியரின் உதவியோடு தமது பாடசாலை பற்றிய வரலாற்றுத் தகவல்களை அறிந்து கொள்ள மாணவர்கள் அதிபரைச் சந்தித்தனர். அதிபரும் மாணவர் சேர்வு இடாப்பினை மாணவர்களின் பரிசீலனைக்காகக் கொடுத்தார். அப்புத்தகத்தில் பாடசாலைக்குச் சேர்ந்த முதல் மாணவனின் விபரம் பின்வருமாறு காணப்பட்டது.

| சேர்விலக்கம் (சுட்டிலக்கம்) | பாடசாலைக்கு அனுமதிக்கப்பட்ட தினம் | மாணவர் பெயர் | பிறந்த திகதி |
|---|---|---|---|
| *1* | *1935.01.09* | *எம். ஏ. சிவானந்தன்* | *1930.01.30* |

பாடசாலையின் பழைய மாணவர் மற்றும் பெற்றோரின் ஒத்துழைப்போடு எண்பது வயதையும் கடந்த நிலையிலிருக்கும் திருவாளர் எம். ஏ. சிவானந்தன் அவர்களைப் பாடசாலைக்கு அழைத்துவரப் பாட ஆசிரியர் உடன்பட்டார். ஆசிரியரின் வேண்டுகோளுக்கிணங்க பாடசாலைக்கு வருகைதந்த எம். ஏ. சிவானந்தன் அவர்களை மாணவர்கள் மிக்க மகிழ்வுடனும் மரியாதையுடனும் வரவேற்றனர்.



உரு 1.2

மாணவர்களின் கரகோஷங்களுக்கு மத்தியில் வருகை தந்த அதிதியை அதிபர், அறிமுகப் படுத்தினார். எம். ஏ. சிவானந்தன் அவர்களை வரவேற்றதன் பின்னர், பாடசாலையின் வரலாற்றினை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்து மாறு அவர்களை வேண்டிக் கொண்டார்.

சிவானந்தன் அவர்கள் பாடசாலையின் கடந்தகாலத் தகவல்களைச் சுவைபடக் கூறினார். ''பிள்ளைகளே! இன்று பாடசாலைக்கு வந்தது எனக்கு மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறது. உங்களைப் போன்று சிறுவனாக இப்பாடசாலைக்கு வந்த முதல் நாள் இன்னும் என் நினைவிலிருக்கின்றது''.

‘‘இப் பாடசாலை 1935 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டபோது இது ஓர் அரச பாடசாலையாக இருந்தது. நகர்ப்புறப் பாடசாலைக்குச் செல்ல முடியாத கிராமப்புறப் பிள்ளைகளுக்கு இப்பாடசாலை வசதியாக இருந்தது. அக்காலத்தில் இரு பாடசாலைகளே நகரத்தில் இருந்தன. அவற்றுள் ஒன்று மிஷனரி பாடசாலை. மற்றையது பௌத்த பாடசாலை. அப்போது கிராமத்தில் ஏறத்தாள இருபது குடும்பங்களே இருந்தன. கிராம மக்களில் பெரும்பாலானோரின் தொழில் விவசாயமாகவிருந்தது. மட்பாண்டத் தொழிலில் ஈடுபட்டவர்களும் இருந்தனர்.’’

எனது அப்பா வியாபாரம் செய்தார். இவை தவிர மாட்டு வண்டித் தொழில், சேனைப் பயிர்ச் செய்கை போன்ற தொழில்களிலும் பலர் ஈடுபட்டனர். பல பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லாது வீட்டில் இருந்தனர். ஊரிலுள்ள செல்வந்தர்களின் பிள்ளைகள் நகர்ப்புறப் பாடசாலைக்குச் சென்று கல்வி கற்றனர். நகரத்திற்குச் சென்று வருவது சிரமமாக இருந்தது. கரடு முரடான பாதையில் மாட்டுவண்டியில் நீண்ட நேரம் செல்ல வேண்டும். அதிகமான மக்கள் கால் நடையாகவே சென்று வருவர்.’’

‘‘இப்பாடசாலையை ஆரம்பித்தவர், திருவாளர் எஸ். எம். தம்பிமுத்து ஆவார். இது என் தந்தைக்குச் சொந்தமான கடைக்குப் பக்கத்திலிருந்த ஒரு சிறிய காணியில் மண்ணால் கட்டப்பட்டு தென்னோலைகளால் வேயப்பட்ட ஒரு சிறிய அறையாகும். இப்பாடசாலையின் ஆசிரியராக திரு. விஸ்வநாதன் அவர்கள் பணிபுரிந்தார். அதிபர் அறைக்கு சிறிய இடமொன்றை ஒதுக்கி விட்டு, மிகுதி இடமெல்லாம் வகுப்பறையாகப் பயன்படுத்தப்பட்டது. நான் இப்பாடசாலையின் முதல் மாணவன். அதன் பிறகு சுமார் பதினான்கு மாணவர்கள் இடையிடையே வந்து சேர்ந்தனர். அதோ, அங்கே தூரத்தில் சிறிய கட்டடமொன்று தெரிகிறதே! அவ்விடத்தில் தான் இப் பாடசாலை முதன்முதலில் அமைந்திருந்தது.’’

‘‘என்னோடு ஒன்றாக சிவா, சண்முகம், அகமது, உமா, றியாஸ், பியசேனன் போன்றவர்கள் கல்விகற்றனர். பிற்பட்ட காலத்தில் பல தனவந்தர்கள் காணி,கட்டடங்களை அன்பளிப்புச் செய்தனர். எங்களுக்கு கதிரை மேசைகள் கிடைத்தன. அது வரை நாங்கள் தரையில் உட்கார்ந்தே கற்றோம். சில நாட்களில் பிள்ளைகளினதும் ஆசிரியர்களினதும் தொகை

அதிகரித்தது. பிற்பட்ட காலத்தில் எமது பாடசாலை மத்திய கல்லூரியாகத் தரமுயர்த்தப்பட்டது. அதன் பின்னரே மாடிக் கட்டடங்கள், விஞ்ஞான ஆய்வுகூடம் உட்பட ஏனைய பல வசதிகளும் கிடைத்தன.

''இப் பாடசாலைக்கு கிராமத்துப் பிள்ளைகள் மாத்திரமன்றி வெளி இடங்களிலிருந்தும் திறமையான மாணவர்கள் கல்வி கற்பதற்கு வருகை தந்தார்கள். நானும் பல்கலைக்கழகத்துக்குச் சென்றேன். உயர் கல்வி கற்று நாட்டிற்குப் பயனுள்ள சேவைகள் புரியும் பலர் இப்பாட சாலையில் இருந்து உருவானார்கள். பல்கலைக்கழகக் கல்வியை நிறைவு செய்த எனக்கு இப் பாடசாலைக்கே ஆசிரியர் நியமனமும் கிடைத்தது. நான் வேலைக்குச் சென்ற முதல்நாள் காலைக்கூட்டத்தில் அதிபர் என்னை மாணவர்களுக்கு அறிமுகம் செய்துவைத்தார். என்னை இப் பாடசாலையில் கற்ற சிறந்த மாணவன் என்று குறிப்பிட்டார். பிற்பட்ட காலத்தில் நான் இப்பாடசாலையின் அதிபரானேன். எங்களுடைய காலத்தை விடவும் இப்போது இப் பாடசாலை குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை கண்டிருக்கின்றது. நான் உங்கள் அனைவரிடத்திலும் கேட்டுக்கொள்வது என்னைப் போன்று, எதிர்காலத்தில் உங்களையும் இப் பாடசாலை விருப்பத்துடன் போற்றிப் பேசக்கூடியளவு சிறந்த ஒழுக்கக் கட்டுப்பாடுள்ளவர்களாக மிளிர வேண்டும்'' என்று கூறி திருவாளர் சிவானந்தன் அவர்கள் தனது பேச்சை நிறைவு செய்தார்.

மறுநாள் குடியியற்கல்விப் பாட வேளையின் போது, பாடசாலையைப் பற்றிச் சிவானந்தன் அவர்கள் கூறிய விடயங்களை மாணவர்கள் ஆசிரியரோடு கலந்துரையாடினர். அதற்கு மேலதிகமாக இன்னும் பல தகவல்களை பாடசாலையில் காணப்படும் ஆவணங்களில் இருந்து அறிந்து கொள்ளலாம் என்று ஆசிரியர் ஆலோசனை வழங்கினார். மாணவர்கள் அதிபரிடம் அனுமதி பெற்று அக் குறித்த ஆவணங்களைப் பார்வையிட்டனர். எல்லாத் தகவல்களும் சரியாகவே இருந்தன. மாணவர் களுக்கும் தமது பாடசாலையைப் பற்றிய நல்லெண்ணமும் மரியாதையும் மேலும் அதிகரித்தது.

## செயற்பாடு - 1

1. மேலே கூறப்பட்ட பாடசாலைக்கு ஒரு வரலாறு இருந்தது போன்று, உங்கள் பாடசாலைக்கும் ஒரு வரலாறு உண்டு. உங்கள் பாடசாலையின் வரலாற்றினை அறிந்து கொள்வதற்கு உதவியாகவுள்ள மூலாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு, பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
   i. உங்களது பாடசாலை உருவாக்குவதற்கு அடிப்படையாக அமைந்த காரணி யாது?
   ii. உங்கள் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?
   iii. உங்கள் பாடசாலையை ஆரம்பிப்பதற்குக் காரணமாக இருந்தவர்களின் பெயர்களை எழுதுக.

2. உங்கள் பாடசாலையை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| | அன்று | இன்று |
|---|---|---|
| பாடசாலையின் பெயர் | | |
| காணியின் பரப்பளவு | | |
| அதிபரின் பெயர் | | |
| கட்டிடங்களின் எண்ணிக்கை | | |
| ஆசிரியர்களின் எண்ணிக்கை | | |
| மாணவர் எண்ணிக்கை | | |

3. i. உங்கள் பாடசாலையில் கற்று வெளியேறி பாடசாலைக்குப் பெருமை சேர்க்கின்ற பழைய மாணவர்கள் சிலரின் பெயர்களை எழுதுக.
   ii. அவர்களில் ஒருவரைக் குறிப்பிட்டு, அவர் நாட்டிற்குச் செய்த சேவையை மதிக்கும் வண்ணம் காட்சிப் பலகைக்கு ஆக்கமொன்றை எழுதுக.
4. வரலாற்றினைக் கற்றுக் கொள்வதற்குத் தேவையான மூலாதாரங்களைப் பற்றி அறிந்து கொண்ட நீங்கள் உங்கள் பாடசாலையின் வரலாறு பற்றி சுவர்ப்பத்திரிகைக்கு பொருத்தமான கடிதமொன்று எழுதுக.

## 1.2 பாடசாலையின் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பின் மாதிரியினை அறிந்து கொள்வோம்

பாடசாலையின் ஒழுங்கமைப்புமாதிரி என்பது, பாடசாலையின் நிருவாகம், அபிவிருத்திச் செயற்பாடுகள் என்பன ஒழுங்கமைக்கப்பட்ட முறையாகும். பாடசாலையின் மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இவ் ஒழுங்கமைப்பு முறை வேறுபடலாம். உங்களது பாடசாலையிலும் அவ்வாறான ஒழுங்கமைப்பு முறையொன்று உண்டு.

**பாடசாலை ஒழுங்கமைப்புக் கட்டமைப்பின் மாதிரி**

மாணவர்கள்

↑

வகுப்புத் தலைவன் / தலைவி

↑

மாணவத் தலைவன் / தலைவி

↑

வகுப்பாசிரியர் / வகுப்பாசிரியை

↑

பிரதி அதிபர்


↑

பழைய மாணவர் சங்கம் → அதிபர் ← பாடசாலை அபிவிருத்திக் குழு

**செயற்பாடு - 2**

1. உங்கள் பாடசாலையின் நிருவாக ஒழுங்கமைப்பினை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
   i. பாடசாலை நிருவாகத்துடன் தொடர்புடைய பிரதான பதவிகள் யாவை?
   ii. பாடசாலைக்கு நிருவாக ஒழுங்கமைப்பு ஏன் அவசியம் என்பதற்கு இரு காரணங்கள் தருக.
2. உங்கள் பாடசாலையின் நிருவாக ஒழுங்கமைப்பு மாதிரியை வரைக.

## பாடசாலை ஒழுங்கமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் பல்வேறு நபர்கள்




உரு 1.3

## பாடசாலை அங்கத்தவர்களின் பொறுப்புகளும் கடமைகளும்

### அதிபரின் கடமைகள்

- கல்விச் செயற்பாடுகளின் தலைவராகச் செயற்படுதல்.
- பாடசாலையின் அனைத்து செயற்பாடுகளையும் மேற்பார்வை செய்தல்.
- பிள்ளைகளைச் சேர்த்தல், அவர்களது வகுப்புகளை ஒழுங்குபடுத்தல், வகுப்புகளுக்கு ஆசிரியர்களை நியமித்தல்.

- நேரசூசியைத் தயாரித்தல் மற்றும் அதன் பிரகாரம் வகுப்பறைக் கற்பித்தல் செயற்பாடுகளுக்கான ஏற்பாடுகளைச் செய்தல்.
- ஆசிரியர் குழாத்தின் அபிவிருத்திக்காகச் செயற்படுதல், ஆசிரியர் நலன்புரி விடயங்களை மேம்படுத்தல்.
- கலைத்திட்டத்தை அமுல்படுத்துவதும் அபிவிருத்தி செய்வதும்
- கற்றல், கற்பித்தற் செயற்பாட்டினை மேற்பார்வை செய்தல், உள்ளக மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொள்ளல்.
- மாணவர் ஒழுக்கச் செயற்பாடுகள் தொடர்பான விடயங்களைக் கண்காணித்தல்.

**பாடசாலைத் தலைவர் என்ற வகையில் அதிபர்**

- திணைக்களச் சட்டதிட்டங்கள், சுற்றுநிருபங்களை அமுல்படுத்தலும் திணைக்களத்துக்குப் பொறுப்புக்கூறலும்.
- பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், அரசசார் மற்றும் அரசசாரா நிறுவனங்களின் உதவியோடு பாடசாலையை அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் செல்லல்.
- பாடசாலைக் கற்றல் - கற்பித்தலுக்குத் தேவையான கருவிகள், விளையாட்டு உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளலும் அவற்றைப் பயன்படுத்துவதற்குரிய சந்தர்ப்பங்களை மாணவர்களுக்கு வழங் குதலும்.

## ஆசிரியர்களின் கடமைகள்

- மாணவர்களுக்கு நல்வழிகாட்டுதலும் அவர்களிடம் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்துதலும்.
- பாடசாலைப் பயனாளிகளின் ஒத்துழைப்புடன் செயலாற்றுதல்.
- மாணவர்களிடத்தில் அறிவு, திறன், மனப்பாங்கு விருத்தியை ஏற்படுத்துதல்.
- விழுமியங்களுக்கு ஏற்ப செயற்படுதல்.
- பாடசாலையின் கல்வி மற்றும் பௌதீக வள விருத்திக்கு உதவுதல்.
- பாடசாலையில் தவணைப் பரீட்சைகளை நடத்தி புள்ளிகளை வழங்கள்.
- பாடசாலை மட்டக் கணிப்பீடுகளை நடாத்துதல்.
- வகுப்பறையை விருப்புக்குரிய கற்றல் சூழலாக மாற்றுதல்.
- அனைத்து மாணவர்களையும் சமமாகக் கணித்தல்.
- நற்பண்புள்ள மாணவர் சமூகத்தினை உருவாக்குதல்.

## கல்வி சாரா ஊழியர்களது கடமைகள்

- பாடசாலைச் செயற்பாடுகளை நடாத்திச் செல்வதற்கு அதிபர், ஆசிரியர்களுக்கு உதவுதல்.
- பாடசாலை மாணவர்கள் கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தலும் அதற்கு உதவுதலும்.
- பாடசாலை சூழலை அழகாகவும் துாய்மையாகவும் பேண உதவுதல்
- பாடசாலையின் பாதுகாப்புக்கு உதவுதல்.
- மாணவர்களோடு ஒத்துழைப்புடனும் நற்பண்புடனும் நடந்து கொள்ளல்.

## மாணவர்களின் கடமைகள்

- தினந்தோறும் பாடசாலைக்கு சமுகமளித்தல்.
- கல்வியை விருப்புடன் கற்றல்.
- அதிபர் உட்பட ஆசிரியர்களை மதித்தல்.
- பாடசாலையின் ஏனைய மாணவர்களுடன் ஒத்துழைப்பாகவும் ஒற்றுமையாகவும் செயலாற்றுதல்.
- பாடசாலையின் கௌரவத்திற்குப் பாதிப்பு ஏற்படாத வண்ணம் நடந்து கொள்ளல்.
- பாடசாலையின் சட்டதிட்டங்கள், சம்பிரதாயங்களை மதித்து நடத்தல்.
- பாடசலையின் பௌதீக வளங்களைப் பாதுகாத்தல்.
- பாடசாலைச் சுற்றாடலை துாய்மையாகவும் ஒழுங்காகவும் பேணுவதற்கு உதவுதல்.

மேற்குறிப்பிட்ட பொறுப்புகளையும் கடமைகளையும் நாம் ஒவ் வொருவரும் தனித்தனியாகவும் கூட்டாகவும் நிறைவேற்றுவோமாயின், பாடசாலையின் பண்புசார் விருத்தி மேலோங்கும்.

## செயற்பாடு - 3

கீழ் குறிப்பிடப்படும் பதவி வகிப்போரைச் சந்தித்து, கலந்துரையாடி அவரவர் பதவிக்குரிய பொறுப்புகள் மூன்றினைக் குறிப்பிடுக.

i. அதிபர் அல்லது பிரதி அதிபர்
ii. பகுதித் தலைவர்
iii. வகுப்பாசிரியர்
iv. மாணவத் தலைவர், தலைவி

## செயற்பாடு - 4

1. கீழே காட்டப்பட்டுள்ள உரு 1.4 ஐ அடிப்படையாகக் கொண்டு உங்கள் பாடசாலை ஒழுங்கமைப்பிற்கு உதவும் சங்கங்கள், அமைப்புகளைப் பட்டியல்படுத்துக.
2. அவற்றினால் ஆற்றப்படும் பணிகள் மூன்று வீதம் எழுதுக.





1. விளையாட்டுக் குழு
2. நலன்புரிக் குழு
3. மாணவத் தலைவர் குழு
4. சுற்றாடல் குழு
5. சமயக் குழு
6. ஒழுக்காற்றுக் குழு
7. சாரணர் குழு
8. பாடசாலைச் சுற்றுலாக் குழு
9. பாடசாலை முகாமைத்துவக் குழு

உரு 1.4

## 1.3 என்னைப் பற்றி நானே சுய விசாரணை செய்கிறேன்

பாடசாலை மாணவனாக உங்களை நீங்கள் சரியாகப் புரிந்து கொள்வதற்கு, படத்தில் காட்டப்பட்டுள்ள தகவல்கள் உதவி புரியக் கூடும்.




உரு 1.5

### நான் யார்?

ஒவ்வொரு பிரசைக்கும் தனித்துவமான அடையாளம் உண்டு. பாடசாலை மாணவ / மாணவியர் ஆகிய உங்களது தனித்துவ அடையாளத்தைத் தெரிந்து கொள்வதற்குப் பின்வரும் வினாக்களுக்கு விடையளியுங்கள்.

**செயற்பாடு - 5**

*01.*

1. உங்களது முழுப் பெயர் :........................................................
2. உங்கள் வயது :..............................................................
3. உங்கள் முகவரி :...........................................................
4. நீங்கள் பாடசாலைக்குச் சேர்ந்த ஆண்டு :..................................
5. உங்களது சேர்விலக்கம் :..................................................

**02. சரியான விடைக்கு முன்னாலுள்ள கூட்டினுள் (✓) என அடையாளமிடுக.**

1. உங்களது முழுப் பெயர் சரியானது என்பதை உறுதி செய்து கொண்ட முறை

| | |
|---|---|
| தாயிடமிருந்து | |
| தந்தையிடமிருந்து | |
| பாதுகாவலரிடமிருந்து | |
| பிறப்புச் சான்றிதழிலிருந்து | |
| வகுப்பாசிரியரிடமிருந்து | |

2. உங்களது வயதைச் சரியாக உறுதிப்படுத்திக் கொண்ட முறை

| | |
|---|---|
| தாயிடமிருந்து | |
| தந்தையிடமிருந்து | |
| பாதுகாவலரிடமிருந்து | |
| பிறப்புச் சான்றிதழிலிருந்து | |
| வகுப்பாசிரியரிடமிருந்து | |
| குடும்ப அங்கத்தவர்கள்/ உறவினர்களிடமிருந்து | |
| கணக்கிட்டுப் பார்த்து | |

3. உங்கள் முகவரி சரியானதா என உறுதி செய்து கொண்டது

| | |
|---|---|
| தாயிடமிருந்து | |
| தந்தையிடமிருந்து | |
| குடும்ப அங்கத்தவர்களிடமிருந்து | |
| பாடசாலையிலிருந்து | |
| தேர்தல் இடாப்பிலிருந்து | |
| கிராம அதிகாரியிடமிருந்து | |

4. நீங்கள் பாடசாலைக்குச் சேர்ந்த திகதியை உறுதி செய்தது

| | |
|---|---|
| தாயிடமிருந்து | |
| தந்தையிடமிருந்து | |
| பாதுகாவலரிடமிருந்து | |
| மாணவர் சேர்வு இடாப்பிலிருந்து | |
| வகுப்பாசிரியரிடமிருந்து | |

5. உங்களது சேர்விலக்கத்தை உறுதிப்படுத்திக் கொண்டது

வகுப்பாசிரியரிடமிருந்து ☐
மாணவர் சேர்வு இடாப்பிலிருந்து ☐
மாணவர் வரவு இடாப்பிலிருந்து ☐

**செயற்பாடு - 6**

உங்கள் தனிப்பட்ட விபரங்களை உள்ளடக்கிய சுய விபரக் கோவை ஒன்றை தயார் செய்க.

**சுய விபரக் கோவை**

1. முதலெழுத்துக்களுடன் பெயர் : .........................................

2. பிறந்த திகதி : .........................................

3. இவ்வருடத்தில்
ஜனவரி 01 ஆம் திகதியன்று வயது
வருடம் ☐ மாதம் ☐ நாள் ☐

4. தனிப்பட்ட முகவரி : .........................................

5. தொலைபேசி இலக்கம் : .........................................

6. அவசர சந்தர்ப்பத்தில் தகவல் கொடுக்க வேண்டியவரின்
பெயரும் முகவரியும் : .........................................
அவருடைய தொலைபேசி இலக்கம் (இருந்தால் மட்டும்)
: .........................................

7. உங்கள் பாடசாலையின் பெயர் : .........................................

*8. முகவரி* : ........................................

*9. பாடசாலைக்குச் சேர்ந்த திகதி* : ........................................

*10. பாடசாலையிலிருந்து வதிவிடத்திற்குள்ள தூரம்* : ........................................

....................... ..........................

திகதி கையொப்பம்

*நீங்கள் மிகச் சிறப்பானதோர் மனிதர்; உங்களுக்குச் சமமாக நீங்களே இருக்க வேண்டும்; அதுவே உமது தனித்துவமாகும்.*

## உங்களிடம் காணப்படுகின்ற சிறந்த நற்பண்புகள்

பாரதி கனிஷ்ட வித்தியாலயத்தில் 6ம் தரத்தில் கல்வி கற்கும் செவ்வந்தி என்ற மாணவி தம்மிடமுள்ள நற்பண்புகளைப் பின்வருமாறு எழுதிக் காட்டியுள்ளார்




உரு 1.6

## செயற்பாடு - 7

1. மேலே காட்டப்பட்டுள்ளவாறு உங்களிடம் காணப்படுகின்ற நற்பண்புகளை இனங்கண்டு பெயரிடுக.

2. உங்களிடமுள்ள குறித்த நற்பண்புகளை வெளிப்படுத்திய சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.
   உதாரணமாக; உண்மை பேசுதல் என்ற வகையில் பாடசாலைக்கு வருகை தருவதற்கு நேரம் பிந்திய நாளொன்றில், உண்மையான காரணத்தை ஆசிரியரிடத்தில் கூறுதல்.

## செயற்பாடு - 8

- உங்களிடம் காணப்படும் திறமையினை வெளிக்கொண்டு வரும் வகையில் ஆக்கமொன்றை நிர்மாணியுங்கள். உ+ம் கழிவுப் பொருள், களி, கணினி மூலமாக
- உங்களிடம் காணப்படும் திறமையை அறிந்து கொள்வதற்காக கீழ்வரும் விடயங்கள் பற்றி நினைத்துப் பாருங்கள்

1. நீங்கள் வெளிப்படுத்தியிருக்கும் திறமைகள் எவை ?
2. உங்களுக்கு வெற்றி கிடைத்தது எதற்காக ?
3. நீங்கள் என்னென்ன ஆக்கங்களைச் செய்துள்ளீர்கள் ?
4. மற்றவர்களின் திறமைகளைத் தெரிந்து வைத்துள்ளீர்களா ?
5. அந்தத் திறமைகளை மதிப்பதற்காக நீங்கள் பயன்படுத்திய வார்த்தைகள் எவை ?
6. உங்களிடம் காணப்படுகின்ற மற்றவர்களைக் கவரும் செயற்பாடுகள் எவை ?
7. உங்களது எத் திறமைக்காக மற்றவர்கள் உங்களைப் பாராட்டுகிறார்கள் ?
8. மற்றவர்கள் உங்களைப் பாராட்டும் போது, உங்களுக்கு எவ்வாறான உணர்வு ஏற்பட்டது ?

## எனது திறமைகள்



உரு 1.7 கற்றலில் திறமை காட்டிய சந்தர்ப்பம்



உரு 1.8 மாகாண விளையாட்டுப் போட்டியில் உயரம் பாய்தலில் வெற்றி பெற்ற மாணவன்



உரு 1.9 அழகியல் செயற்பாடுகளில் மாணவர்கள்



உரு 1.10 வகுப்பறைச் செயற்பாடுகள்



உரு 1.11 ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு தரம் 6 மாணவர்கள் உதவிசெய்யும் சந்தர்ப்பம்

சிறுவயதிலே வெளிப்பட்ட அல்லது அறிந்து கொண்ட திறமைகளை எதிர்காலப் பயணத்திற்குப் பயன்படுத்தியவாறு வாழ்க்கையை வெற்றி கொண்ட இலங்கையர் ஒருவரின் வாழ்க்கைக் குறிப்புகள் பக்கம் உங்கள் கவனத்தை செலுத்துங்கள்.


**கலாநிதி** C.W.W **கன்னங்கர**


உரு 1.12

கலாநிதி C.W.W. கன்னங்கர அவர்களது முழுப் பெயர் கிறிஸ்டோபர் வில்லியம் விஜேகோன் கன்னங்கர ஆகும். அம்பலன்கொட மற்றும் பலப்பிட்டிய நகரங்களுக்கிடையிலுள்ள ரன்தொம்பே என்ற கிராமத்தில் 1884 ஐப்பசி மாதம் 13 ஆம் திகதி பிறந்தார். அவரது ஆறாவது வயதில் தாய் இறந்ததும் அவரது சிறிய தாய் அவரை நன்றாக வளர்த்தார். சிறுவயதிலேயே மிகவும் அறிவாற்றலை வெளிப்படுத்தி அவர் ஆரம்பக்கல்வியை ரன்தொம்ப வெஸ்லியானு மிஷனரி பாடசாலையில் கற்றார். அங்கு நடைபெற்ற பரிசளிப்பு விழாவொன்றுக்கு பிரதம அதிதியாக வருகை தந்த காலி ரிச்மன்ட் கல்லூாி அதிபர் J.H. டெரல் பாதிரியார் அவர்களினால் வழங்கப்பட்ட பரிசில்களில் அதிகமானவற்றை பெற்றவர் கன்னங்கர ஆவார். சிறுவனான கன்னங்கர அவர்களுக்குத் தனது 14 ஆவது வயதில் ரிச்மன்ட் கல்லூரியில் கல்வி கற்பதற்கு புலமை பரிசில் கிடைத்தது. கல்வி கற்பதற்கான வசதி, உணவு, உடை அனைத்தும் இலவசமாகக் கிடைத்தன. இவ்வசதிகளைத் திருப்தியோடு ஏற்றுக்கொண்டார். இதற்கு மேலதிகமாக எந்த சலுகையினையும் அவர் கேட்கவில்லை. எந்தச் சலுகைகளும் கிடைக்காத பிள்ளைகளுக்குச் சலுகைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு தனது உள்ளத்தைத் திடம்படுத்திக் கொண்டார். அவர் அப்போது எதிர் நோக்கிய கசப்பான அனுபவங்கள்தான் இம்மனவுறுதிக்குக் காரணமாக இருந்திருக்கலாம். C.W.W. கன்னங்கர கல்வி கற்பதில் திறமையானவர். 1903 ஆம் ஆண்டு நடைபெற்ற பிரித்தானிய கேம்பிரிஜ் ஜூனியர் (கனிஷ்ட) பரீட்சையில் கணிதப்பாடத்தில் முழுப்பிரித்தானிய இராச்சியத்திலும் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றார். பாடங்களைப் படிப்பதில் கவனம் செலுத்தியதோடு விளையாட்டு, நாடகம் ஆகிய துறைகளிலும் ஈடுபாடு கொண்டார். இவர் ரிச்மன்ட்

கல்லூரியில் ஆசிரியராக சேவையாற்றியதோடு பின்னர் சட்டக் கல்வியை மேற்கொள்ளும் போது மொரட்டுவ வேல்ஸ் ஒப் பிரின்ஸ் கல்லூரி மற்றும் வெஸ்லி கல்லூரிகளில் ஆசிரியராகப் பணியாற்றினார்.

1910 ஆம் ஆண்டில் சட்டத்தரணி தொழிலில் பிரவேசித்த இவர் சமூக மற்றும் அரசியல் விடயங்களிலும் ஈடுபாடு கொண்டார். 1923 ஆம் ஆண்டு காலி மாவட்டத்தை பிரதிநிதித்துலப்படுத்தி அரசியலமைப்பு சபைக்குத் தெரிவாகிய கன்னங்கர அவர்கள் 1931 இல் இலங்கை தேசிய சங்கத்தின் தலைவராக செயற்பட்டார். அரசியலமைப்பு சபையில் கல்வி தொடர்பான நிறைவேற்றுக்குழு தலைவராக செயற்பட்ட இவர் 1931 இல் இலங்கையின் முதலாவது கல்வி அமைச்சராகவும் விளங்கினார். ஆரம்பக் கல்வி தொடக்கம் பல்கலைக்கழகம் வரையிலும் இலவசக் கல்வியை வழங்குவதற்கு முன்னின்ற இவர் தாய் மொழியில் கல்வியை வழங்கல் மற்றும் மத்திய மகா வித்தியாலயங்களை உருவாக்கி இலங்கையில் இலவசக் கல்வி ஆரம்பமாவதற்குப் பாரிய பங்களிப்பை வழங்கினார். இதனால் இவர் இலவசக் கல்வியின் தந்தை எனப் போற்றப்படுகின்றார்.




உரு 1.13

## செயற்பாடு - 9

1. தனது திறமையால் வாழ்க்கையை வெற்றி கொண்ட சிலருடைய பெயர், விபரங்களைத் தொகுத்து, ஆசிரியரின் உதவியோடு அவர்கள் திறமை காட்டிய துறைகள், திறமை என்பவற்றை அட்டவணையில் உள்ளவாறு பூர்த்தி செய்க.

| பெயர் | திறமை காட்டிய துறைகள் | திறமைகள் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |
| 6 | | |
| 7 | | |

2. நீங்கள், அட்டவணையில் குறிப்பிட்ட ஒருவரின் வாழ்க்கைக் குறிப்புகளை உள்ளடக்கிய, சிறு நூலொன்றை ஆக்குக.
3. பாடசாலை மாணவர் என்ற வகையில் உம்மிடமுள்ள திறமைகளை எழுதுக.
4. உங்கள் நண்பன் அல்லது நண்பியிடம் இனங்கண்ட திறமைகளை வகுப்பில் முன்வைக்குக.

**நீங்கள், உங்களது திறமைகளை இனங்கண்டு கொண்டீர்களா? அந்தத் திறமைகளை மேலும் வளர்த்துக் கொள்ள உங்களால் என்ன செய்ய முடியும்?**

- தனக்கு இயலுமான, தனக்கு விருப்பமானதைத் தெரிந்து அதனைத் திறம்படச் செய்தல்.
- உங்கள் திறமைகளை சந்தர்ப்பத்திற்கேற்றவாறு வெளிப்படுத்தி அதன் மூலம் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளல்.
- தனது திறமை, சமூகத்தின் முன்னேற்றத்திற்குத் தேவை என்பதை உணர்ந்து அவற்றை மேலும் விருத்தி செய்து கொள்ளல்.

**உங்கள் ஆற்றல், திறமைகளை அறிந்து அதற்கேற்ப வாழ்க்கையின் நோக்கத்தைக் கட்டியெழுப்புவோம்**

## தனது பலவீனங்கள்

தரம் 6 இல் கல்விகற்கின்ற மாணவர்கள் ஆசிரியரின் அறிவுறுத்தலுக்கமைய தத்தமது பலவீனங்களைக் கரும்பலகையில் பின்வருமாறு எழுதினார்கள்.

- பொறுமையின்மை
- கோபப்படுதல்
- பொய்பேசுதல்
- நண்பர்களைக் கேலிசெய்தல்
- ஆவேசப்படுதல்
- சண்டை பிடித்தல்
- சுயநலம்
- சந்தேகப்படுதல்
- பிறருக்கு உதவுவதற்கு விரும்பாமை
- பிறரைத் துன்புறுத்தல்
- தனது வேலையில் ஒழுங்கின்மை

**பொய் பேசுவதை பொழுதுபோக்காகக் கொண்ட ஒரு பிள்ளையின் கதை**

ஓர் ஊரில் மாடு மேய்க்கும் சிறுவன் ஒருவன் இருந்தான். பொய் பேசுவதைப் பொழுது போக்காகக் கொண்ட இச்சிறுவன் தனது மாடுகளைப் புல்மேய விடுவதற்காக காட்டின் மத்தியிலே உள்ள புற்றரைக்கு ஓட்டிச் சென்றான். ஒரு நாள் மாடுகள் புல் மேய்ந்து கொண்டிருக்கும் பொழுது ''புலிவருது... புலிவருது... என்னைக் காப்பாற்றுங்கள்'' என்று கூக்குரலிட்டான். காட்டிற்கு விறகு வெட்டுவதற்காக வந்தவர்கள் சிறுவனின் ஒலி கேட்ட பக்கமாக ஓடிச் சென்றார்கள். அவ்வேளையில் அந்தச் சிறுவன் சத்தம் போட்டுப் பரிகாசமாகச் சிரித்துக் கொண்டு இவ்வாறு கூறினான்.

''ஐயோ ... நீங்கள் ஏமாந்து விட்டீர்கள்... நீங்கள் ஏமாந்து விட்டீர்கள்...''

சில நாட்களின் பின்னர் காட்டின் மத்தியில் முன்பு கூறியது போலவே ''புலி வருது... என்னைக் காப்பாற்றுங்கள்...'' என்று கூக்குரலிட்டான். அன்றும் அவனுடைய அந்த சத்தம் கேட்டு ஓடிச் சென்றார்கள் மீண்டும் தாம் ஏமாந்ததை எண்ணி வெட்கப்பட்டார்கள்.

மீண்டும்மொரு நாள் இச்சிறுவன் மாடுகளை மேய்த்துக் கொண்டிருக்கையில் புலி நிஜமாகவே உறுமிக் கொண்டு சிறுவனின் பக்கமாகவந்தது.

''புலி வருது... என்னைக் காப்பாற்றுங்கள்'' என்று தொடர்ந்து கூக்குரலிட்டான். சிறுவனின் கூக்குரல் கேட்டும் எவரும் அந்தப் பக்கம் செல்லவே இல்லை. மறுநாள் ஊர் மக்கள் உண்மையிலேயே அந்தச் சிறுவன் புலிக்கு இரையாகிய செய்தியை கேள்விப்பட்டனர்.

**''பொய் பேசுபவன் உண்மையைப் பேசினாலும் எவரும் நம்பமாட்டார்கள்.''**

மேற்குறிப்பிட்டவாறு உங்களுக்குள்ளும் பலவீனங்கள் இருக்கலாம். மற்றவர்கள் சுட்டிக்காட்டுவதற்கு முன் அப்பலவீனங்களை நீங்களே கண்டறிந்து திருத்திக் கொள்ளுங்கள்.

**தனது பலவீனங்களைக் குறைத்துக் கொள்ளப் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் :-**

- தன்னுடைய பலவீனங்களை இனங்காணுதல்
- தன்னிடம் காணப்படும் பலவீனங்களை இயன்றளவு குறைத்துக் கொள்வேன் என்று உறுதி கொள்ளல்.
- தன்னுடைய பலவீனங்களை பிறர் சுட்டிக்காட்டும்போது அதனைப் பெருந்தன்மையோடு ஏற்றுக் கொள்ளல்.
- தான் அறிந்து கொண்ட தவறுகள் மீண்டும் ஏற்படாத வண்ணம் பார்த்துக் கொள்ளல்

### செயற்பாடு - 10

1. பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க. அதற்கு ஆசிரியரின் உதவியைப் பெற்றுக் கொள்க.

| தன்னிடமுள்ள பலவீனங்கள் | | அதனை குறைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |

2. உமது பலவீனத்தால் உமக்கு ஏற்பட்ட பாதகமான விடயங்களை எழுதிக் காட்டுக.

### நாம் எதிர்கொள்ளும் இடையூறுகளும் சவால்களும்


*பாடசாலை மாணவராகிய உங்களுக்கு கல்விச் செயற்பாடுகளின் பொழுது பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிடும். பொருளாதாரப் பிரச்சினை, பிறர் உங்களை மதிக்காமை, தலைமைத்துவம் கிடைக்காமை, ஏனையோர் உங்களை ஏற்றுக்கொள்ளாமை, குழப்பக்கார மாணவர்களின் தொந்தரவு எனப் பல்வேறு சவால்கள் ஏற்படலாம்.*

*ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்க்கையில் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிடலாம். அனைத்துச் சவால்களையும் வாழ்க்கையை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கான படிக்கட்டுகளாக மாற்றிக் கொள்ளலாம் என்று உறுதிபூண வேண்டும். உலகில், சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுத்த மனிதர்கள் வாழ்வில் உயர்நிலையை அடைந்துள்ளார்கள்.*

**பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து வாழ்க்கையில் வெற்றி பெற்ற ஒரு மனிதரைப் பற்றிய செய்தியின் பக்கம் கவனத்தைச் செலுத்துங்கள்.**

### பேராசிரியர் சேனக பிபிலே

*சேனக பிபிலே என்பவர் கி.பி 1920 ஆம் ஆண்டு மாசி மாதம் 13 ஆம் திகதி பிறந்தார். தென் மாகாண காலி மாவட்டத்தின் அஹங்கமவிலுள்ள கதளுவ என்பதே அவரது கிராமமாகும். ஆரம்பக் கல்வியை கண்டி திரித்துவக் கல்லூரியில் கற்றார். பல்வேறு பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு மத்தியில் தனது ஆரம்பக் கல்வியையும், இடைநிலைக் கல்வியையும் நிறைவு செய்தார். பின்னர் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் வைத்திய பீடத்துக்குத் தெரிவானார். சிறுவயது முதலே கற்பதில் திறமையுள்ளவராக இருந்தார். வைத்தியத் துறைக்கு வழங்கப்படும் தங்கப்பதக்கமும் அறுவைச் சிகிச்சை விஞ்ஞானத்துக்கு வழங்கப்படும் தங்கப் பதக்கமும் இவருக்கு கிடைத்தமையானது விசேட அம்சமாகும். கொழும்பு பல்கலைக்கழக வைத்திய பீடத்தில் கி.பி 1954 ஆம் ஆண்டு முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட மருந்தகவியலாளர் கல்விப் பிரிவின் தலைவரானார். மருந்தகவியல் தொடர்பான முதலாவது பேராசிரியரும் இவரே ஆவார். நோயாளர்களுக்கு அவசியமான மருந்துகளைக் குறைந்த விலையில் பெற்றுக்கொடுத்தலே இவரது வாழ்வின் நோக்கமாக இருந்தது.*



உரு 1.14

இந் நோக்கத்தை நிறைவேற்றவே ''அரச ஒசுசல'' நிலையங்களை நிர்மாணித்தார். அரச அனுசரணையுடன் மருந்துகளை இறக்குமதி செய்து அவற்றை ''அரச ஒசுசல'' மூலமாக குறைந்த விலையில் நோயாளர்களுக்கு விநியோகிப்பதைக் கொள்கையாகக் கொண்டிருந்தார். மருந்துகளின் வியாபாரப் பெயரைப் (commercial name) பயன்படுத்தாது அதன் பொதுப் பெயரைப் (generic name) பயன் படுத்த வேண்டும் என்று மிக்க கடுமையாக இருந்தார். இவர் அறிமுகப்படுத்திய மருந்துக் கொள்கையை உலக சுகாதார தாபனம் (W.H.O) மிக உயர்தரத்தில் அங்கீகரித்துப் பாராட்டியது. அவரது வாழ்வின் கடைசித்தறுவாயில் தன்னுடைய அனைத்து அனுபவங்களையும் முன்னிலைப்படுத்தி அத்தியாவசிய மருந்துகள் சாதாரண விலைக்கு நோயாளர்களைச் சென்றடைய வேண்டும் என்ற கொள்கையை மூன்றாம் உலக நாடுகள் சிலவற்றில் பிரபல்யப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் கானா நாட்டில் தனது இறுதி மூச்சை விட்டார்.

### செயற்பாடு - 11

நீங்கள் எதிர்கொள்ளும் இடையூறுகளையும் சவால்களையும் அறிந்து கொள்ளுங்கள். அவற்றிலிருந்து மீளுவதற்கு நீங்கள் மேற்கொள்ளுகின்ற நடவடிக்கைகளை எழுதுங்கள்.

## செயற்பாடு - 12

தரப்பட்டுள்ள உதாரணத்தைக் கருத்திற் கொண்டு கீழுள்ள அட்டவணையைப் பூர்த்தி செய்க

| உங்களுக்கு ஏற்பட்ட சவால்கள் | அதனை எதிர் கொண்ட முறை | அதன் பெறுபேறு | | |
|---|---|---|---|---|
| | | உங்களுக்கு | உங்கள் குடும்பத்தினருக்கு | பாடசாலைக்கு |
| வகுப்புத் தலைமைத் துவம் கிடைக்காமை | தலைமைத் துவத்திற் குரிய பண்புகளை வளர்த்துக் கொள்ளல் | தன்னம் பிக்கை உருவானது | உங்களைப் பற்றிய நல்லெண்ணம் உருவானது | இயல்பாகவே தலைமைத்து வப் பண்பு களுடைய மாணவர்கள் உருவாகியமை |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

**அனைத்து சவால்களுக்கம் முகங்கொடுக்கக் கூடிய பல்வேறு வழிகள் காணப்படுவதோடு நாமும் அவற்றைப் பின்பற்றி நடக்க வேண்டும். தன்னுடைய அபிவிருத்திக்காக பாடசாலையினால் கிடைக்கப்பெறும் வாய்ப்புகள் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.**

பாடசாலையில் நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு, திறமை, மனப்பாங்கு என்பன சிறந்த நற்பிரசையாக வாழ்வதற்குப் பேருதவியாக அமையும். பாடசாலையினால் உங்களுக்கு விடய அறிவும் அது பற்றிய விளக்கமும் கிடைக்கிறது. அவ்வாறே, தனது திறமைகளை வெளிப்படுத்தக்கூடிய சந்தர்ப்பங்களும் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றன. அத்துடன் கூட்டாகச் செயற்படுவதற்குரிய பயிற்சியும் வழங்கப்படுகின்றது.

## தன்னுடைய அபிவிருத்திக்காக பாடசாலையினால் கிடைக்கப்பெறும் வாய்ப்புகள்



உரு 1.15 சிரமதானப் பணியில் ஈடுபடும் சந்தர்ப்பம்



உரு 1.16 வகுப்பறைக் கற்றலில் ஈடுபடுதல்




உரு 1.17 ஆசிரியரின் வழிகாட்டலில் சுதந்திரமாக செயற்பாடொன்றில் ஈடுபடுதல்



உரு 1.18 விளையாட்டுப் போட்டியில் மாணவர்கள்

### செயற்பாடு - 12

மேலே தரப்பட்டுள்ள படங்களை அவதானித்து, பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக? (இதற்காக பாடப் பொறுப்பாசிரியரின் உதவியை பெற்றுக் கொள்ளுங்கள்)

1. இப்படங்களின் மூலம் காட்டப்படுகின்ற செயற்பாடுகளில் கலந்து கொள்வதன் மூலம் பாடசாலை மாணவர் என்ற வகையில் உமக்கு கிடைக்கும் பயன்கள் எவை?

2. பாடசாலை மாணவனாகிய உங்களது நடத்தை மாற்றத்திற்கு பாடசாலை வழங்கியுள்ள பங்களிப்புப் பற்றி சுவர்ப் பத்திரிகைக்குக் கடிதம் ஒன்று எழுதுக.
3. ''பாடசாலை தன்னைப் பாதுகாக்கும் தாய் போன்றது'' என்பதைத் தலைப்பாகக் கொண்டு பாடசாலைச் சஞ்சிகைக்குக் கடிதம் ஒன்று அல்லது கவிதை ஒன்றை எழுதுக.

பாடசாலை மாணவனாகிய உங்களது வாழ்க்கையின் முன்னேற்றத்தைக் கருத்திற் கொண்டு உயர் நோக்கங்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அந்நோக்கங்கள் சிறந்தவையாகவும் பயனுடையதாகவும் இருப்பது மிக முக்கியமானதாகும். நல்ல நோக்கங்களை ஏற்படுத்திக் கொள்வது உங்களினதும் சமுகத்தினதும் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். தரம் 06 மாணவராகிய நீங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்காக எவ்வாறான நல்ல நோக்கங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதனை இங்கு நோக்குவோம்.

- அனைத்துப் பாடங்களிலும் 80 புள்ளிகளுக்கு மேல் பெறல்.
- தலைமைத்துவத் திறமையை வளர்த்துக் கொள்ளல்.
- பாடசாலை சார்பாக விளையாடுவதற்குச் சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொள்ளல்.
- ஆங்கிலப் பேச்சுத் திறமையை விருத்தி செய்துகொள்ளல்.
- கணினியைக் கையாள்வதற்கான பயிற்சியினைப் பெற்றுக்கொள்ளல்.

இவைபோன்று, உங்களுக்கென்று குறிப்பிட்ட இலக்கொன்று இருக்கும். அந்த இலக்கை அடைவதற்குச் சிரமமாக இருப்பின், மாற்று வழிகளைப் பயன்படுத்த வேண்டும். ஒரு பாதை மூடப்பட்டிருந்தால் மற்றுமொரு பாதை திறந்திருக்கும். நீங்கள் செய்ய வேண்டியது அவை பற்றி விழிப்புடன் இருப்பதேயாகும். சில சமயங்களில் குறிப்பிட்ட இலக்கொன்றை நாடிச் செல்கின்ற போது, சவால்களை எதிர்கொள்ளல், தவறுகள் ஏற்படல் என்பனவும் நிகழலாம். அவற்றுக்கு முகங்கொடுப்பதற்காகத் தன்னம்பிக்கை, மனஉறுதி, முயற்சி, அர்ப்பணிப்பு போன்றவற்றோடு தமது பலவீனங்களைக் குறைத்துக்கொள்வதுடன் நற்பண்புகளை வளர்த்துக்கொள்ள முயலவும் வேண்டும்.

**தமது இலக்கை அடைந்து கொள்வதற்கும் அதனை விருத்தி செய்து கொள்வதற்குமுரிய சந்தர்ப்பங்களை உருவாக்கிக்கொள்ளல்**

- *பாடத்திற்குப் பொருத்தமான மேலதிக நூல்களை வாசித்தல்.*
- *கல்வி நிகழ்ச்சிகளைப் பார்வையிடல்.*
- *பாட நூல்களை முறையாகப் பாவித்தல்.*
- *விளையாட்டு மற்றும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் புறத்தேர்ச்சிகளைக் கூட்டிக் கொள்ளல்.*
- *அறிவு மற்றும் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளல்.*


## 1.4 நாம் திட்டமிட்டுப் பணியாற்றுவோம்

*திட்டமிடலானது வாழ்க்கைக்கு மிகவும் அத்தியவாசியமானது. திட்டமிடல் என்பது, ஏதாவதொரு விடயத்தில் உச்சப் பயனைப் பெறும் வகையில் அதனைப் பகுதிபகுதியாக, முறையாக குறித்த காலப்பகுதிக்குள் செய்து முடிப்பதாகும். வீட்டிலும் பாடசாலையிலும் தன்னுடைய கருமங்களை முறையாகச் செய்து கொள்ளப் பழகுதல் பாடசாலை மாணவனுக்கு மிகவும் முக்கியமானதாகும்.*

*காலையில் விழித்தெழுந்து குறிப்பிட்ட நேரத்திற்கு முன் பாடசாலை செல்வதற்கு நீங்கள் எவ்வாறு திட்டமிட்டடுச் செயற்படுவீர் என்பதைக் குறிப்பிடுக.*

*உதாரணம் : நேரகாலத்துடன் துயில் கொள்ளல், அதிகாலையில் நித்திரை விட்டெழுதல்.*

''யார் திட்டமிடத் தவறுகின்றாரோ
அவர் தவறு செய்யத் திட்டமிடுகின்றார்''




உரு 1.19

## செயற்பாடு - 13

பாடசாலை மாணவர் என்ற ரீதியில் நேரத்தை வினைத்திறன் மிக்கதாகப் பயன்படுத்தும் வகையில் அன்றாட கால அட்டவணையொன்றைத் தயாரிக்குக ?

திட்டமிட்டுச் செயற்படும் மாணவனுக்கும் திட்டமிடாது செயற்படும் மாணவனுக்கும் இடையிலான இலட்சணங்கள் பின்வருமாறு.

| திட்டமிட்ட மாணவன் | திட்டமிடப்படாத மாணவன் |
|---|---|
| முறையாகச் செயற்படுவார். | அத்தியவசியமான நடவடிக்கைகளை கைவிடுவர். |
| உளநெருக்கீடு இன்றி செயற்படுவார். | உளநெருக்கிடையோடு கருமங்களில் ஈடுபடுவர். |
| நேரத்தை உச்ச முறையில் பயன்படுத்துவார். | நேரம் வீணடிக்கப்படும். |

| | |
|---|---|
| நோக்கத்தை அடைந்து கொள்வார். | பின்னடைவு ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம். |
| இலகுவாக சவால்களை வெற்றி கொள்வார் | சவால்களுக்கு முகங்கொடுக்க சிரமப்படுவார் |

**வகுப்பறைச் சுத்தம், பாடசாலைச் சுத்தம் போன்ற பணிகளைச் செய்யும் போது, அதனைத் திட்டமிடுவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் உதவியாக இருத்தல் வேண்டும்.**

வகுப்பறையைத் தூய்மையாகவும் ஒழுங்காகவும் வைத்துக்கொள் வதற்குப் பொருத்தமான முறையில் வேலைத்திட்டமொன்றைத் திட்ட மிடும் போது, கவனிக்க வேண்டிய விடயங்கள்.

- வகுப்பறையில் பயன்படுத்தப்படும் பொருட்களை அறிதல்.
- நிலவுகின்ற குறைபாடுகளைக் கண்டறிந்து அவற்றைக் குறித்துக் கொள்ளல்.
- மிகவும் தூய்மையாகவும் ஒழுங்காகவும் வகுப்பறையை வைத்துக் கொள்வதற்கு ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளல்.
- ஆலோசனையின்படி உடனடியாகச் செய்ய வேண்டியதைத் தீர்மானித்தல்.
- அதன்படி செயற்படுத்துவதற்குப் பொருத்தமான வேலைத் திட்டமொன்றைத் தயாரித்தல்.

**செயற்பாடு - 14**

மேற்குறித்த விடயங்களைக் கருத்திற்கொண்டு, உங்கள் வகுப்பறை முன்பகுதியைக் கவர்ச்சியான முறையில் வைத்துக் கொள்வதற்கான வேலைத் திட்டமொன்றைத் தயாரிக்குக.

பாடசாலையில் அல்லது வகுப்பறையில் பின்வரும் சந்தர்ப்பங்களில் முறையாகத் திட்டமிட்டுச் செயல்படுவதன் மூலம் அச்செயலில் தவறுகள் ஏற்படாதவாறு சிறப்பாகச் செய்யலாம்.

- விளையாட்டு விழாவின் போது
- கலை நிகழ்ச்சிகளின் போது
- பரிசளிப்பு வைபவங்களின் போது
- சிறுவர் தின நிகழ்வின் போது
- சர்வதேச ஆசிரியர் தினத்தின் போது

## பாடசாலைக் கலாசாரம்

பாடசாலையில் காணப்படும் சட்டதிட்டங்கள், சம்பிரதாயங்கள், பழக்க வழக்கங்கள், பாடசாலையின் தனித்துவத்தைப் பிரகாசிக்கச் செய்யும் பாடசாலையின் இலச்சினை போன்றவை பாடசாலையின் கலாசாரத்திற் குரியவையாகும்.

**பாடசாலைக்கு சட்டதிட்டங்கள் அவசியமாவதற்கான காரணங்கள்**

- பாடசாலையினுள் சிறந்த கற்றல் சூழலொன்றை ஏற்படுத்துவதற்கு.
- பாடசாலையை முறையாக நிருவகிப்பதற்கு.
- ஒழுக்கசீலர்களான மாணவர்களை உருவாக்குவதற்கு.
- மாணவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு.
- பாடசாலையின் தனித்துவத்தைப் பாதுகாப்பதற்கு.

மேற்குறிப்பிட்ட விடயங்களைக் கவனத்திற் கொள்ளும்போது பாடசாலை நடைமுறையில் உள்ள சட்டதிட்டங்கள் உங்கள் அனைவரினதும் நன்மைக்காக என்பதை விளங்கிக் கொள்வீர்கள். பாடசாலையின் சட்டதிட்டங்களை ஒழுங்காகப் பின்பற்றுவதற்கு அச் சட்டதிட்டங்கள் பற்றி நீங்கள் நன்றாக அறிந்திருக்க வேண்டும். சட்டதிட்டத்தை மதித்து நடப்பதன் மூலம் உங்கள் கௌரவத்தைப் பாதுகாத்துக் கொள்ளலாம். பாடசாலை மாணவன் என்றவகையில் உங்களுக்குப் பல உரிமைகள் உண்டு அந்த உரிமைகளைப் அனுபவிப்பதற்காகத் தமது கடமைகளை நிறைவேற்றுவது அவசியமாகும். சகோதர மாணவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமானால் பாடசாலையில் காணப்படுகின்ற சட்ட திட்டங்களுக்கேற்ப செயற்படுவது அவசியமாகும். நீங்கள் பாடசாலையின் சட்டதிட்டங்களை மதிப்பீர்களானால் அதுவே பாடசாலையின் சிறப்புக்கு வழிவகுக்கும்.

**மாணவர்கள் தொடர்பாகப் பாடசாலையில் காணப்படுகின்ற பொதுவான சட்ட திட்டங்கள்**

- பாடசாலைக்குத் தினமும் சமுகமளித்தல்.
- பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்னர் பாடசாலைக்குச் சமுகமளித்தல்.
- குறிப்பிட்ட சீருடையில் பாடசாலைக்குச் சமுகமளித்தல்.
- பாடசாலை நேரம் முடியும் வரையில் பாடசாலையிலேயே இருத்தல்.
- நேரசூசிப்படி கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடல்.
- அதிபருக்கும் ஆசிரியருக்கும் கீழ்ப்படிதலும் மரியாதை செலுத்துதலும்.
- தலைமைத்துவத்திற்குக் கீழ்படிதல்.
- பாடசாலையிலுள்ள சம்பிரதாயங்களைப் பாதுகாத்தல்.

***பாடசாலையின் சம்பிரதாயங்கள்***

பாடசாலையால் தொன்றுதொட்டு பேணப்பட்டுவரும் பழக்க வழக் கங்களை ஏற்று நடத்தலும் பின்பற்றுதலும் சம்பிரதாயத்தைப் பின்பற்றல் எனலாம்.

பாடசாலையில் சட்டதிட்டங்களும் சம்பிரதாயங்களும் முக்கிய இடத்தை வகிக்கின்றன. எனவே, பாடசாலையின் சம்பிரதாயங்களை அறிந்து பாதுகாத்துக் கொள்வதோடு அதனைப் பின்பற்றுவதற்கும் பழகிக்கொள்ள வேண்டும். பாடசாலைக்கு வருவதிலிருந்து பாடசாலை கலைந்து செல்லும் வரையும் பாடசாலைக்குரிய சம்பிரதாயங்கள் உள்ளன. குறித்த பாடசாலையொன்றில் சீருடை எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பான சம்பிரதாயங்களும் பேணப்படுகின்றன. பாடசாலை பரிச ளிப்பு விழாவின் போதும் இல்ல விளையாட்டுப் போட்டிகளின்போதும் அவ்வப் பாடசாலைகளுக்கென்று விசேட சம்பிரதாயங்கள் உள்ளன. பாடஆசிரியரோடு கலந்துரையாடி உங்கள் பாடசாலைக்குரிய சம்பிர தாயங்களை அறிந்துகொள்ளுங்கள்.

**சம்பிரதாயங்களைப் பாதுகாப்பதன் அவசியம்**

- மாணவர்களிடையே நற்போதனைகளைக் கட்டியெழுப்புதல்.
- தன்னம்பிக்கையுடைய சமூகமொன்றை உருவாக்குதல்.
- பாடசாலையின் தனித்துவத்தைப் பாதுகாத்தல்.
- எதிர்கால மாணவ சமூகத்திற்கு அவற்றை ஒப்படைத்தல்.

**செயற்பாடு - 15**

1. உங்கள் பாடசாலையின் சட்டதிட்டங்கள் இரண்டினையும் சம்பிர தாயங்கள் இரண்டினையும் எழுதுக.
2. உங்கள் வகுப்புக்குப் பொருத்தமான ஒழுக்கக் கோவை ஒன்றைத் தயாரிக்குக.

## பாடசாலையின் தனித்துவத்தை அடையாளப்படுத்தும் இலச்சினைகள்

**மகுடவாசகம்** (Motto)

பாடசாலையின் மகுடவாசகம் என்பது மாணவர்களினது வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்வதற்கு முன்மாதிரியாக அமையும் வண்ணம் தயாரிக்கப்பட்டிருப்பது விஷேட பண்பாகும்.

உங்கள் பாடசாலையின் மகுடவாசகத்தையும் அதன் கருத்தினையும் அறிந்துக்கொள்ளுங்கள்.

பாடசாலையின் மகுடவாசகத்தை உங்கள் வாழ்க்கையின் முன்மாதிரியாகக் கொள்ளுங்கள். அது உங்கள் வாழ்வை ஒளிமயமானதாக மாற்றுவதற்கு உதவும்.

## செயற்பாடு - 16

1. உங்கள் பாடசாலையின் மகுடவாசகத்தை எழுதுக?
2. அதன் கருத்தைச் சுருக்கமாகக் குறிப்பிடுக?

**பாடசாலை இலச்சினை** (School logo)



உரு 1.20

பாடசாலை இலச்சினையானது, பாடசாலையின் தனித்துவத்தை வெளிப்படுத்தும் மற்றுமொரு முக்கியமான அடையாளமாகும். பாடசாலை இலச்சினையில் நிறங்களும், குறியீடுகளும் பயன்படுத்தப்படுகின்றன. பெரும்பாலான பாடசாலைகளின் இலச்சினையில் விளக்கு, புத்தகம், சூரியன் போன்ற குறியீடுகளைக் காணலாம். உங்கள் பாடசாலை இலச்சினையில் காணப்படும் நிறம், குறியீடு என்பவற்றின் பக்கம் கவனத்தைச் செலுத்துங்கள். இது தொடர்பாக உங்கள் ஆசிரியருடன் கலந்துரையாடுங்கள்.

**பாடசாலை இலச்சினைகள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் சில,**

- பாடசாலையின் கடிதத் தலைப்புகளில்
- பாடசாலைச் சீருடையில்
- பாடசாலையில் வெளியிடப்படும் புத்தகங்கள், சஞ்சிகைகளில்
- பாடசாலைக்குரியது என்பதை உணர்த்துவதற்கு
- பாடசாலையின் அடையாளத்தை உணர்த்துவதற்கு

## செயற்பாடு - 17

1. இலகுவாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய பொருட்களைப் பயன்படுத்தி உங்கள் பாடசாலை இலச்சினையின் மாதிரியொன்றை உருவாக்குக.
2. இலச்சினையில் காணப்படும் நிறம், குறியீடு என்பவற்றால் கருதப் படும் விடயங்களை எழுதுக?
3. உங்கள் பாடசாலை இலச்சினை பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் யாவை?

## பாடசாலைக்கொடி (School Flag)



உரு 1.21

பாடசாலைக் கலாசாரத்தை வெளிப்படுத்தும் மற்றுமோர் அடையாளம் பாடசாலைக்கொடி ஆகும். பாடசாலைக்கொடி வெவ்வேறு நிறங்களையும் குறியீடுகளையும் கொண்டிருக்கும். பாடசாலைக் கொடிகள் பாடசாலை இலட்சினை மற்றும் முன்மாதிரியான வாசகங்கள் என்பவற்றை உள்ளடக்கியிருக்கும்.

பாடசாலைக் கொடியிலுள்ள நிறங்கள், குறியீடுகள் என்பன தத்தமது தனித்துவமான கருத்துக்களை வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கும். உங்கள் பாடசாலைக் கொடியின் நிறங்கள், இலட்சினைகளிலிருந்து வெளிப்படுத்தப்படும் கருத்துக்களைப் பாட ஆசிரியரிடம் கேட்டு அறிந்து கொள்ளுங்கள்.

**பாடசாலைக் கொடி ஏற்றப்படும் சந்தர்ப்பங்கள்**

- காலைக் கூட்டத்தின் போது
- இல்ல விளையாட்டுப் போட்டியின் போது
- பாடசாலையில் நடைபெறும் வேறு விழாக்களின் போது

**பாடசாலைக் கொடி ஏற்றப்படும் போது கடைபிடிக்க வேண்டியவை**

- பாடசாலைக் கொடியைப் பார்த்த வண்ணம் நிமிர்ந்து நிற்றல்.
- பாடசாலைக் கொடியை மரியாதையுடன் ஏற்றுதல்.
- பாடசாலைக் கீதத்தைப் பாடுதல்.

## செயற்பாடு - 18

1. உங்கள் பாடசாலைக் கொடியினைப் பொருத்தமான நிறங்களைப் பயன்படுத்தி வரையுங்கள்.
2. அதில் உள்ளடக்கப்பட்டிருக்கும் நிறங்கள் மற்றும் குறியீடுகளைப் பெயரிட்டு, அவற்றின் மூலம் வெளிப்படுத்தப்படும் கருத்துக்களைச் சுருக்கமாக எழுதுக.

## பாடசாலைக் கீதம்

ஒவ்வொரு பாடசாலைக்கும் பாடசாலைக் கீதம் உள்ளது. அது பாடசாலையின் தனித்துவத்தை வெளிப்படுத்தும் முக்கியமான இலச்சினை ஆகும்.

**பாடசாலை கீதத்தின் மூலம் நிறைவேற்றப்படும் பணிகள்**

- பாடசாலையின் மூலம் சமூகத்துக்கு ஆற்றப்படும் பணிகள் பற்றி மாணவர்களுக்குத் தெரியப்படுத்துதல்.
- மாணவர்களிடையே தமது பாடசாலையின் மீது கௌரவம், அபிமானம், அன்பு போன்றன ஏற்படுதல்.
- பாடசாலையின் அடையாளத்தை வெளிப்படுத்துதல்.

உங்கள் பாடசாலைக் கீதத்தையும் அதன் கருத்தையும் ஞாபகப்படுத்திப் பாருங்கள். பெரும்பாலான பாடசாலைக் கீதங்களில் பாட சாலையானது ''தாய்'' போன்று மதிக்கப்பட்டு இயற்றப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாய் இருக்கும்.

**பாடசாலைக் கீதம் இசைக்கப்படும் சந்தர்ப்பங்கள்**

- பாடசாலை ஆரம்பமாகும் போது.
- பாடசாலையில் நடைபெறும் விசேட வைபவங்களின் போது.
- பாடசாலை இல்ல விளையாட்டின் போது.

உங்கள் பாடசாலையில் பாடசாலைக் கீதம் இசைக்கப்படும் சந்தர்ப் பங்களை நினைவுகூருங்கள்

பாடசாலைக்கீதம் இசைக்கப்படும் போது கடைப்பிடிக்க வேண்டியவை

- பாடசாலைக் கீதத்தை தாளத்திற்கேற்ப பாடுதல்.
- பாடசாலைக் கீதத்துக்கு மதிப்பளிக்கும் வகையில் பாடுதல்.
- சீரான முறையில் நின்று பாடுதல்.
- பாடசாலைச் கீதத்தைப் பாடும்போது எச்செயல்களிலும் ஈடுபடாதிருத்தல்.

நீங்களும் சரியான மெய்நிலைகளைப் பேணி , சீராகவும் தாளத்திற் கேற்பவும் உங்கள் பாடசாலைக் கீதத்தை இசைக்கப் பழகிக் கொள்ளுங்கள்.

**செயற்பாடு - 19**

1. உங்கள் பாடசாலைக் கீதத்தின் பொருளை எழுதுக.
2. உங்கள் பாடசாலைக் கீதத்தின் மூலம் சமாதானத்தைப் பற்றியும், பாடசாலையினால் சமூகம் மற்றும் நாட்டிற்கு நிறைவேற்றப்படும் பணிகள் பற்றியும் வெளிப்படுத்தப்படும் கருத்துகளை எடுத்துக் கூறுக.
3. உங்களுக்கு அண்மையிலுள்ள இரண்டு பாடசாலைகளின் பாடசாலைக் கீதத்தை அறிய முயலுங்கள்.

## பாடசாலையின் நோக்கக் கூற்று (Vision)

பாடசாலை ஒன்றின் நோக்கக் கூற்று கீழே தரப்பட்டுள்ளது. அதனைக் கவனமாக வாசித்து அதன் கருத்தை அறிய முயற்சி செய்யுங்கள்.

**எமது பாடசாலையின் நோக்கக் கூற்று**

''நற்பண்புடனான அறிவும் நல்லாற்றலும் கொண்ட மாணவர் சமூகமொன்றை நாட்டிற்குப் பெற்றுக் கொடுத்தல் ''

உமது பாடசாலையின் நோக்கக் கூற்று மற்றும் அதன் கருத்து பற்றி உமது ஆசிரியருடன் கலந்துரையாடி தெளிவு பெற்றுக் கொள்க. பாடசாலையின் இலட்சியமானது அதன் நோக்கக் கூற்றினூடாக வெளிப்படுத்தப்பட்டிருப்பது உமக்குத் தெளிவாகியிருக்கும். நீங்கள் ஒழுங்காகக் கற்றல் நடவடிக்கைகளை மேற்கொண்டு நாட்டிற்குப் பயனுள்ள நற்பிரசையாக சமூகத்தில் மிளிரும்போது, உங்கள் பாடசாலையின் நோக்கம் நிறைவேற்றப்படும்.

## பாடசாலையின் பணிக்கூற்று (Mission)

உங்கள் பாடசாலையில் பணிக்கூற்று காட்சிப்படுத்தப்பட்டுள்ள இடத்தை ஆசிரியரிடம் கேட்டு நன்கு தெரிந்து கொள்ளுங்கள் பணிக் கூற்றினை நன்கு வாசித்து, உங்கள் அப்பியாசப் புத்தகத்தில் குறித்துக் கொள்ளுங்கள். ஆசிரியரிடம் கேட்டு அதன் கருத்தை அறிந்து கொள்ளுங்கள்.

பாடசாலையின் சேவைகளைப் பெற்றுக் கொள்வது மாணவர்களாகிய நீங்களே! உங்கள் பாடசாலையால் உங்களுக்காக நிறைவேற்றப்படும் பணிகள், பணிக்கூற்றின் மூலம் வெளிப்படுத்தப்படும்.

பணிக்கூற்றுகள் நிறைவேற்றப்படுவதன் மூலம் நாட்டிற்குத் தேவையான நற்பிரசைகளை உருவாக்க முடியும்.

பாடசாலையினால் சமூகத்துக்கு ஆற்றப்படும் பணிகள் எல்லையற்றவை. எனவே, பாடசாலையின் மகத்துவம் பற்றியும் அதன் முக்கியத்துவம் பற்றியும் சான்றோர்களால் முன்வைக்கப்பட்ட வாசகம் ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

''ஒரு பாடசாலை திறக்கப்படுவது ஒரு சிறைச்சாலை மூடப்படுவதற்குச் சமமாகும்''.

பாடசாலையின் மூலம் சமூகத்திற்குத் தேவையான நற்பண்புள்ள பிரசைகள் உருவாக்கப்படுவர் என்பதே இதன் கருத்தாகும்.

## செயற்பாடு - 20

1. உமது ஆசிரியரின் ஆலோசனைப்படி பாடசாலையின் நோக்கக் கூற்றை அறிந்து அதனை உமது அப்பியாசப் புத்தகத்தில் குறித்துக் கொள்ளுங்கள். அதன் கருத்து பற்றிய விபரத்தை அறிய முயலுங்கள்.
2. வேறு ஒரு பாடசாலையில் கல்வி கற்கும் உங்கள் நண்பரிடமிருந்து அவரது பாடசாலையின் நோக்கக் கூற்றை அறிந்து உங்கள் அப்பியாசப் புத்தகத்தில் குறித்துக் கொள்ளுங்கள். அதன் கருத்து பற்றிய விபரத்தை அறிய முயலுங்கள்.

### பாடசாலைச் சீருடை

பாடசாலையின் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் அடையாளங்களில் பாடசாலைச் சீருடையும் ஒன்றாகும்.

அனைத்துப் பாடசாலைகளிலும் மாணவர்களுக்கென நியமமான சீருடை காணப்படுகின்றது. சீருடைக்காக ஆண்டுதோறும் எமது அரசாங்கத்தினால் சீருடைத் துணி இலவசமாக வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு பாடசாலைக்கும் தனித்துவமான சீருடை காணப்படும். இது அப்பாடசாலையின் அடையாளத்தை வெளிப்படுத்துவதற்கு உதவுகிறது. சீருடையைத் தரமாகவும் சீராகவும் தயார்படுத்திக் கொள்வது கட்டாயமாகும். இதன் மூலம் பாடசாலையின், தனித்துவமான அடையாளம், அனைவரும் சமமானவர்கள் போன்ற நியமங்கள் எடுத்துக்காட்டப்படுகின்றன.

சீருடையின் மூலம் வெளிப்படுத்தப்படுவது உங்கள் பாடசாலையின் அடையாளமாகும். எனவே சீருடையை அணிந்திருக்கும் நீங்கள் உங்கள் பாடசாலையின் கௌரவத்தைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் நடந்துகொள்ளல் வேண்டும்.

## செயற்பாடு - 21

உங்கள் பாடசாலையின் சீருடையை வரைக.

## எமது உரிமைகளை அனுபவித்தவாறு அவற்றுடன் இணைந்த கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுற்றுதல்

பாடசாலைச் சமூகத்தின் உறுப்பினர் என்ற வகையில் கீழே தரப்பட்டுள்ள உரிமைகளைப் பெற்றுத் தருவதற்கெனப் பாடசாலையிலுள்ள அனைவரும் செயற்படுவர். பாடசாலைச் சமூகத்தின் உறுப்பினர் என்ற வகையில் உமக்குரிய உரிமைகள் வருமாறு.

- கல்வி கற்பதற்கான உரிமை.
- தமது திறமைகளை விருத்தி செய்து கொள்வதற்கான உரிமை.
- பாதுகாப்பாக இருப்பதற்கான உரிமை.
- சமமாக மதிக்கப்படுவதற்கான உரிமை.
- தமது கருத்துகளை வெளிப்படுத்துவதற்கான உரிமை.
- சகோதர மாணவர்களுடன் பழகுவதற்கான உரிமை.
- தமது அடையாளத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கான உரிமை.

பாடசாலை மாணவர் என்ற வகையில் கற்றல் நடவடிக்கைகளுக்கான வசதிகளைப் பெற்றுக் கொள்ளுவது உங்கள் உரிமையாகும். உங்கள் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் உங்கள் ஆற்றல்களை விருத்தி செய்து கொள்வதற்குமென பல்வேறு வசதிகளை அரசாங்கத்தால் வழங்கப்படுகின்றன. அவையாவன,

- இலவசக் கல்வி.
- இலவசப் பாட நூல்கள்.
- ஆய்வுகூட வசதிகள்.
- இலவச சீருடை
- விளையாட்டு உபகரணங்கள்.
- நூலக வசதிகள்.
- கணினி வசதிகள்.
- மொழிப் பயிற்சிகள்.

உரிமைகளை அனுபவித்தவாறு அவற்றுடன் இணைந்த கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுவது பற்றியும் சிந்தித்தல் வேண்டும். கடமைகளையும் பொறுப்புகளையும் சரியான முறையில் நிறை வேற்றுவதன் மூலம் உங்களுக்குரிய உரிமைகளை மேலும், உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

கல்வியைப் பெற்றுக் கொள்வது உங்களது உரிமையாகும். நன்றாகக் கல்வி கற்றல், ஒழுக்கம் பேணல், சட்டத்தை மதித்து நடத்தல், சக மாணவர்களிடையே சமத்துவத்துடனும், சகவாழ்வுடனும் செயற்படுதல் என்பன உமது கடமையாகும். அதேபோல், சக மாணவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் செயற்படுவதும் உங்களது கடமையும் பொறுப்பும் ஆகும். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவர்களை முறையான நடவடிக்கைகளில் மட்டும் ஈடுபடுத்த முயற்சித்தல் வேண்டும். பாடசாலையினுள் வளங்களை பாதுகாப்பான முறையில் கையாள்வதும் உங்களது கடமையாகும்.

ஆசிரியர்களுக்குக் கீழ்ப்படிந்து நடத்தல் உமது கடமையாகும். பாடசாலையில் பாதுகாப்பாக இருப்பதற்கான உரிமை உள்ளது போல், சக மாணவர்களின் உரிமைகளுக்கும் மதிப்பளிப்பது உங்கள் கடமையாகும்.

நீங்கள் வாழும் சூழலைப் பாதுகாப்பதற்காகச் செயற்படுதலும் உங்களது கடமையாகும். வகுப்பறையைச் சுத்தமாகவும் அழகாகவும் பேணுவதில் நீங்கள் அக்கறையுடன் செயற்படுதல் வேண்டும். இதன் மூலம் கற்றலுக்கு உகந்த பாடசாலைச் சூழலைப் பெற்றுக் கொள்ள முடியும்.

பாடசாலைச் சமூகம் என்பது ஒரு பல்லின சமூகமாகும். இது வெவ்வேறு வயது மட்ட மாணவர்களை உள்ளடக்கியிருக்கும். உங்களை விட வயதில் மூத்தமாணவர்களும் இளையமாணவர்களும் உங்கள் பாடசாலையில் கல்வி கற்பர். அதேபோல், வெவ்வேறு மதத்தைச் சேர்ந்தவர்கள் உங்கள் பாடசாலையில் கல்வி கற்கக்கூடும். அவர்கள் அனைவரையும் ஒரு தாயின் பிள்ளைகளாகக் கருதி சகோதரத்துவத்துடன் பழகுதல் வேண்டும்.

இவ்வாறான வேற்றுமைகள் பல காணப்படினும் பாடசாலைச் சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் சமமான உரிமைகள் உண்டு. அனைவரினது உரிமைகளையும் உறுதிப்படுத்தும் வகையில் செயற்படுதல் உமது கடமையும் பொறுப்பும் ஆகும்.

## செயற்பாடு - 22

- உங்கள் ஆசிரியரின் அறிவுறுத்தலின் படி கீழே தரப்பட்டுள்ள அட்டவணையைப் பூர்த்தி செய்க.
  (உரிமையுடன் இணைந்த கடமை ஒன்று உதாரணமாகத் தரப்பட்டுள்ளது)

| மாணவன் என்ற வகையில் உரிமைகள் | உரிமையுடன் இணைந்த கடமைகள் |
|---|---|
| தமது கருத்துக்களை வெளிப்படுத்தல் | சகமாணவர்களின் கருத்துக் களுக்கு மதிப்பளித்தல் |
| கல்வி கற்றல் | |
| பாடசாலையினுள் பாதுகாப்பாக இருத்தல் | |
| உங்கள் தகைமைகளை விருத்தி செய்து கொள்ளல் | |

### 1.6 ஆசிரியர்களும் மாணவர்களும் தமது கடமைகளை நிறைவேற்றுதல்

ஆசிரியர், மாணவர்களிடையே சிறந்த இடைத்தொடர்புகள் காணப்படுவதால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் வெற்றிகரமாக நடைபெறும். மாணவர்கள் ஆசிரியர்களுக்கான கடமைகளை முறையாக நிறைவேற்றுதல் ஆசிரிய - மாணவத் தொடர்பைச் சிறப்பாகப் பேண வழிவகுக்கும்.

### ஆசிரியர்களுக்கென மாணவர்களால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள்

- கற்றல் நடவடிக்கைகளில் சிறப்பாக ஈடுபடுதல்.
- தேவையான சந்தர்ப்பங்களின் போது உதவி செய்தலும் ஒத்துழைப்பு வழங்குதலும்.
- ஆசிரியர்களின் அறிவுறுத்தல்களையும் ஆலோசனைகளையும் கேட்டுச் செயற்படுதல்.
- ஆசிரியருக்கு மதிப்பளித்து நடத்தல்.
- மரியாதையுடனும் கீழ்ப்படிவுடனும் நடந்து கொள்ளல்.

## மாணவர்களுக்காக ஆசிரியர்களால் நிறைவேற்றப்படும் கடமைகளும் பொறுப்புக்களும்

மாணவர்களுக்குச், சிறந்த கல்வியை வழங்குவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதும் உங்கள் அனைவரையும் நற்பிரசையாக உருவாக்குதலும் ஆசிரியர்களின் பொறுப்பும் கடமையுமாகும். இதற்கென ஆசிரியர்களால் பலதரப்பட்ட ஆலோசனைகளும் அறிவுறுத்தல்களும் வழங்கப்படும். எதிர்காலத்தில் நீங்கள் அனைவரும் சிறப்பான வாழ்வை நடாத்துவதற்கான தகைமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதே உங்கள் ஆசிரியர்களின் எதிர்பார்ப்பாகும்.

அதேபோல் உங்கள் அன்றாட வாழ்க்கையில் நீங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவசியமான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் உங்கள் ஆசிரியர் முன்வைப்பார் அத்துடன் கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போதும் அன்றாட வாழ்க்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போதும் நீங்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிடும். இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கும், வெற்றிகரமாக முகம்கொடுப்பதற்கும் தேவையான வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் உங்கள் ஆசிரியர்கள் உங்களுக்கு வழங்குவர்.

உங்கள் திறமைகளை இனங்கண்டு அவற்றை சமூகத்திற்கு வெளிக் காட்டும் பாரிய பணியை நிறைவேற்றுவது உங்கள் ஆசிரியர்களே. எனவே, ஆசிரியர்களின் கௌரவத்தைப் பேணும் வகையில் செயற்பட்டு அவர்களின் அர்ப்பணிப்புடனான சேவையைப் பெற்று நாட்டின் நற்பிரசையாக உருவாக வேண்டும் என உறுதி கொள்ளுங்கள்.

**மாணவர்களால் சக மாணவர்களுக்காக நிறைவேற்ற வேண்டிய கடமைகள்**

பாடசாலை சமூகத்தின் அங்கத்தவர் என்ற வகையில் மாணவர்கள் தமது சகோதர மாணவர்களுக்காக நிறைவேற்ற வேண்டிய பொறுப்புக்கள் கடமைகள் பக்கம் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

ஒத்துழைப்புடனும் சமத்துவத்துடனும் செயற்படுதல், பண்புள்ள செயற்பாடுகளில் ஈடுபடல், தேவையின் போது உதவி செய்தல், வயதில் குறைந்த சகோதர சகோதரிகளுக்குப் பாதுகாப்பளித்தல், அவர்களுக்கு முன்மாதிரியாக நடந்துகொள்ளல் என்பன பிராதானமானவையாகும்.


**செயற்பாடு - 23**

1. ஆசிரியர்களுக்காக உங்களால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளைப் பட்டியல்படுத்துக.
2. சக மாணவர்களுக்கு உங்களால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளை பட்டியற்படுத்துக.

### 1.7 பாடசாலைக்கும் சமூகத்திற்கும் இடையிலான தொடர்பு

பாடசாலைச் சமூகத்தின் எதிர்பார்புக்களையும் தேவைகளையும் நிறைவேற்றும் சமூகத்திற்கு அத்தியவசியமான நிறுவனமாக கருதப்படுகின்றது.

**பாடசாலைக்கும் சமூகத்துக்குமிடையிலான பல்வேறு தொடர்புகள்**





உரு 1.22

மேலே காட்டப்பட்டுள்ள உருவில் பாடசாலைக்கும் சமூகத்துக்கும் இடையிலுள்ள தொடர்பு காட்டப்பட்டுள்ளது.

பாடசாலைக்கும் சமூகத்துக்கும் இடையிலான பரஸ்பர தொடர்பு காணப்படுவதன் காரணமாகப் பாடசாலையால் சமூகத்துக்கும் சமூகத்தால் பாடசாலைக்கும் பல்வேறு சேவைகள் கிடைக்கப் பெறுகின்றன.

**பாடசாலையின் மூலம் சமூகத்திற்கு ஆற்றப்படும் சேவைகள்**

- நற்பிரசைகளை உருவாக்குதல்.
- மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான தேர்ச்சிகளை விருத்தி செய்தல்.
- எதிர்காலத்திற்கான நல்ல தலைவர்களை உருவாக்குதல்.
- பிள்ளைகளுக்குச் சிறந்த கல்வியை வழங்குதல்
- நல்வாழ்க்கையை நடாத்துவதற்கான வழிகாட்டல்களை வழங்குதல்.
- குழந்தைகளைக் கட்டுப்பாடும் கௌரவமும் மிக்கவர்களாக உருவாக்குதல்.
- பிள்ளைகளின் திறமைகளை வெளிக்காட்டுவதற்கு வழிசெய்தல்.
- சமூத்துக்குத் தகவல்களை வழங்குதல்.




### சமூகத்தினால் பாடசாலைக்கு ஆற்றப்படும் சேவைகள்

- பாடசாலை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கல்.
- பாடசாலைச் சொத்துகளைப் பாதுகாத்தல்.
- பாடசாலையின் பல்வேறு வைபவங்களில் பங்கேற்றல்.
- பிரசைகளின் கலாசார உரிமைகள் மற்றும் சமூகக் கருத்துக்களை பாடசாலைக் கல்வியில் உள்ளடக்க நடவடிக்கை மேற்கொள்ளல்.
- சிறந்த சுகாதாரப் பாதுகாப்பு முறைகள், நவீன கலை கலாசாரங்களையும் தொழினுட்ப முறைகளையும் அறிமுகம் செய்தல்.
- பாடசாலையின் அண்மிய சமூகத்திலுள்ள பல்வேறு அமைப்புக்களின் மூலம் பாடசாலைக்குத் தேவையான உதவிகளைப் பெற்றுக் கொள்ளல்

### பாடசாலைக்கும் சமூகத்திற்கும் இடையே தொடர்புகள் ஏற்படும் வழிமுறைகள் பற்றி அறிந்து கொள்வோம்

தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்ற பாடசாலை மேம்பாட்டு வேலைத்திட்டத்தினூடாக பாடசாலையின் உள்ளக ஊழியர்கள் மற்றும் பாடசாலையுடன் தொடர்புடைய வேறு நபர்கள் பாடசாலையின் அபிவிருத்திக்காக பங்களிப்புச் செய்கின்றனர். அதன் நோக்கங்கள் சில கீழே தரப்பட்டுள்ளது

- அனைத்து மாணவர்களுக்கும் தரமான கல்வியைப் பெற்றுக் கொடுத்தல்.
- பாடசாலைப் பயனாளிகளிடையே ''இது எனது பாடசாலை'' என்ற எண்ணக்கருவை உருவாக்குதல்.

- உச்ச வளப்பயன்பாடு
- மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளை அறிந்து செயற்படுதல்.
- பாடசாலையில் நடைபெறும் செயற்பாடுகளை தேவைக்கேற்ப மாற்றியமைக்க கூடியதாக இருத்தல்.

(இதற்காகப் பாடசாலை அபிவிருத்திக்குழு, பாடசாலை முகாமைத்துவ குழு போன்றன நியமிக்கப்பட்டுள்ளன)

- **பாடசாலை அபிவிருத்தி சங்கம்**

பெற்றோர், பழையமாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் வலயக் கல்விக் காரியாலய உறுப்பினரின் பங்குபற்றலுடன் உருவாக்கப்படும். இதன் தலைவர் பாடசாலையின் அதிபராவார். பாடசாலைக்கும் பொதுமக்களுக்குமிடையிலான தொடர்பை உறுதிப்படுத்தவும் அவர்களுக்கிடையே பரஸ்பர உறவினைப் பேணவும் இது வழிவகுக்கும். தேவையான வளங்களைப் பெற்று அவற்றைப் பயன்படுத்திப் பாடசாலையைக் கட்டியெழுப்புவதே இக்குழுவின் பணியாகும்.

- **பழைய மாணவர் சங்கமும் நலன்விரும்பிகளும்**

ஒரு பாடசாலையானது, அதன் பழைய மாணவர்களுடன் தொடர்ச்சியாகத் தொடர்புகளைப் பேணுவது அப்பாடசாலையின் முன்னேற்றத்திற்கு அத்தியாவசியமானதாகும். இதன் மூலம் பாடசாலை அதிபர் உட்பட ஆசிரியர் குழாத்திற்கும், மாணவர்களுக்குமிடையே பரஸ்பரத் தொடர்பு உருவாகும். பழைய மாணவர்களால் பாடசாலைக் கட்டடங்கள், உபகரணங்கள், மாணவர்களுக்கான மதிய உணவுகள், தேவையானபோது ஆலோசனைகள், பாடசாலையின் விசேட வைபவங்களின் போது ஒத்துழைப்புக்கள் வழங்குதல் போன்ற பல்வேறு நன்மைகளைப் பாடசாலை பெறுகின்றது. எனவே சகல பாடசாலைகளும் இவ்வாறான தொடர்புகளை வளர்த்துக் கொள்ள முயல வேண்டும்.

பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் பாடசாலைக்குத் தேவையான வளங்களைப் பெற்றுக்கொடுப்பதுடன், சிரமதானப் பணிகள் மூலம் பாடசாலையைச் சுத்தப்படுத்தி அழகுபடுத்துவதன் மூலம் தமது பங்களிப்பை வழங்குகின்றனர். இதன் மூலம் பாடசாலைக்கும் சமூகத்திற்குமிடையிலான தொடர்பு வலுவடைகின்றது.

- **மக்கள் பிரதிநிதிகளுடன் தொடர்புகளை வைத்திருத்தல்**

பாடசாலையின் முன்னேற்றத்துக்கு மக்கள் பிரதிநிதிகளின் அனுசரணையோடு அரசிடமிருந்தும் மாகாண சபையிடமிருந்தும் பாடசாலையின் வளர்சிக்குத் தேவையான பணம், உபகரணங்கள் போன்றவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். மக்கள் பிரதிநிதிகளுடனான தொடர்பானது பாடசாலையின் அபிவிருத்திக்கான சந்தர்ப்பத்தை மேலும் அதிகரிக்கும்.

### சமூகத்தினால் பாடசாலைக்கு ஆற்றப்படும் சேவைகள்



உரு 1.23 பாடசாலை சிரமதானம்



உரு 1.24 பாடசாலையில் வைத்தியபரிசோதனை

### பாடசாலையால் சமூகத்துக்கு ஆற்றவேண்டிய சேவைகள்

பாடசாலையானது பாடசாலைச் சமூகத்துடன் சிறந்த ஆளிடைத் தொடர்பினைப் பேணிக்கொள்ளல் வேண்டும். இதற்காகப் பாடசாலை எப்போதும் தயாராக இருக்க வேண்டும். இத்தொடர்பைப்பேணக் குறிப்பாக,

- பாடசாலையின் ஆராதனை மண்டபம், விளையாட்டு மைதானம், கட்டடம் போன்றவற்றை தேவை ஏற்படும்போது, மக்களுக்கு வழங்குதல்.
- சுகாதார முகாம்களை நடாத்துதல்.
- தற்காலத்திற்கேற்ற சுகாதார முறைகள், சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

**பாடசாலையானது சமூகத்திடமிருந்து ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்ளும் விதம்**

1. மக்களிடமிருந்து பெறக்கூடிய வளங்களை வினைத்திறனுடன் பாடசாலையின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தல்.
2. பாடசாலையின் அபிவிருத்திக்குத் தேவையான பல்வேறு தகவல்களை சமூகத்தில் உள்ள திறமையாளர்களிடம் இருந்தும், வளவாளர்களிடமிருந்தும் பெற்று நடைமுறைப்படுத்தல்.



உரு 1.25

உதாரணமாக பிரதே ஆயுர்வேத வைத்தியரை பாடசாலைக்கு வரவழைத்து பாரம்பரிய கைமருத்துவம், ஔடதம் பற்றி மாணவர்களுக்குத் தெரியப்படுத்தல் தொடர்பான ஒரு நிகழ்வினையே படத்தில் காண்கிறீர்கள்.

**பிள்ளை - நேயப் பாடசாலை**

பிள்ளையை மையமாகக் கொண்டு, சுகாதார வசதிகளையும் பாதுகாப்புச் சூழலையும் வழங்குகின்ற பாடசாலையே பிள்ளை நேயப் பாடசாலை எனப்படுகிறது. இங்கு அனைத்து மாணவர்களது உரிமைகளும் பாதுகாப்படுகிறன. இங்கு பிள்ளைகள் வறுமை, விசேட தேவை, தொற்றுநோய்கள் போன்றனவற்றிற்குட்பட்டிருப்பினும், எல்லாப் பிள்ளைகளும், இன மத பேதமின்றி சமமாகக் கவனிக்கப்படுவர். இவ்வாறாகச் சிறுவர்களது அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கின்ற பாடசாலைகளே **பிள்ளை நேயப் பாடசாலைகள்** ஆகும்.

**பிள்ளை நேயப் பாடசாலைச் சூழலின் பண்புகள்**

- நீர் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு வசதிகள் காணப்படல்.
- பாடசாலைச் சூழல் பிள்ளைகள் அனைவரும் மகிழ்ச்சியுடனும் விருப்புடனும் கல்விகற்கும் இடமாக மாற்றப்படல்.
- மாணவர்களிடையே அந்நியோன்யம், சமத்துவம், சகோதரத்துவம் என்பவற்றை வளர்த்தல்.
- பாடசாலைப் பயனாளிகள் பாடசாலையின் நலனுக்காக நடவடிக்கை மேற்கொள்ளல்.
- பாடசாலைப் பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.
- பாடசாலைச் சூழலை அமைதியாகவும் சுத்தமாகவும் பேணுதல்.
- அதிபர் மற்றும் ஆசிரியர்களிடையே பரஸ்பரத் தொடர்பும் சுமுகமான உறவும் பேணப்படல்.
- அதிபர் - மாணவர், ஆசிரியர் - மாணவர்களிடையே பரஸ்பரப் புரிந்துணர்வும் நல்லெண்ணமும் பேணப்படல்.
- பாடசாலை மீது மாணவர்களுக்கு ஈர்ப்பு ஏற்படும்வகையில் அதிபர் உட்பட ஆசிரியர்குழாம் நடந்து கொள்ளல்.

*சகல குழந்தைகளும் தனித்துவம் வாய்ந்தவையே, அவர்களின் தனித்துவமான தகைமைகள் வளர்க்கப்பட வேண்டும். அதன் மூலம் நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான பொறுப்பான மனித வளத்தை உருவாக்கும் தூரநோக்குடன் கூடிய செயற்பாட்டுக்கு, பிள்ளை நேயப் பாடசாலை வழிவகுக்கும்.*

மூலம்: பிள்ளை நேயப் பாடசாலை, ஆரம்பக் கல்விக் கிளை, கல்வி அமைச்சு

## செயற்பாடு - 25

1. உங்கள் பிரதேசத்தில் சூழல் மாசடைதலுக்கு வழிவகுக்கும் மனித நடவடிக்கைகள் பற்றித் தேடியறிந்து அவற்றைத் தடுப்பதற்காக சமூகத்திற்கு அறிவுறுத்தல் வழங்கும் விதமாக துண்டுப் பிரசுரம் ஒன்றைத் தயாரிக்குக.

2. ''பாடசாலையின் முன்னேற்றத்திற்காக சமூகத்திலிருந்து பங்களிப்புச் செய்யக்கூடிய பெற்றுக் கொள்ளக் கூடிய இரு முக்கிய குழுக்கள், பழைய மாணவர் சங்கம் மற்றும் பெற்றோர்கள் ஆவர்.''
   - பழைய மாணவர் சங்கத்தினால் வழங்கப்படும் சேவைகள் 3 தருக.
   - பெற்றோரினால் வழங்கப்படும் சேவைகள் 3 தருக.

**சாராம்சம்**


இவ்வத்தியாயத்தை கற்றதன் மூலம் நீங்கள் அறிந்து கொண்டவை

- சுயகணிப்பீடு மற்றும் திட்டமிடல் என்பன எமது நடத்தையை முன்னேற்ற வழியமைக்கும்.
- பாடசாலைக் கலாசாரமும் அதனைக் கடைபிடிப்பதன் முக்கியத்துவமும்
- பாடசாலை உறுப்பினர் என்ற வகையில் உமது கடமைகள் மற்றும் உரிமைகள் பற்றி அறிந்து கொள்ளுதல்.
- பாடசாலைக்கும் வெளிச் சமூகத்திற்கும் இடையிலான பரஸ்பரத் தொடர்பு அவற்றின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.
- பாடசாலையின் நலனுக்காக வெளிச் சமூகத்திலிருந்து ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பது பற்றித் தெரிந்து கொள்ளல்.

# 2 நாம் வாழும் பிரதேசம்

எமது தாய் நாடாகிய இலங்கை இயற்கை வளம் மிக்க அழகிய தீவாகும். இங்கு காணப்படும் செழிப்பு மிகுந்த நிலம், பெறுமதியான இயற்கை வளங்கள், சிறப்பான காலநிலை, கௌரவமான மனிதர்கள் மற்றும் இதன் புராதன வரலாறு என்பன எம்முள் நல்ல அபிமானத்தை ஏற்படுத்தக் காரணமாகின்றன. நீங்கள் வாழும் பிரதேசத்தைப் பற்றி எண்ணிப் பாருங்கள். அங்குள்ள இயற்கை வளங்களில் ஒன்றிற்கோ அல்லது பலவற்றிற்கோ உரிமையாளராகும் பாக்கியம் உங்களுக்கு கிடைத்திருக்கும்.

**நாம் வாழும் பிரதேசத்தின் அமைவிடமும் பல்வேறு நிருவாக முறைகளும்**




**உரு 2.1**

*இலங்கையின் நிருவாக அலகுகள்*

**கிராம உத்தியோகத்தர்** (Grama Niladari) **பிரிவைப் பற்றித் தெரிந்து கொள்வோம்**

எமது நாட்டின் நிருவாகப்பிரிவுகளுள் மிகச் சிறிய நிருவாக அலகாகக் காணப்படுவது கிராம உத்தியோகத்தர் பிரிவாகும். கிராம உத்தியேகத்தர் பிரிவானது ஒன்று அல்லது பல கிராமங்களை உள்ளடக்கியதாகக் காணப்படும். அதற்குப் பொறுப்பான அதிகாரி கிராம உத்தியோகத்தர் என அழைக்கப்படுகிறார். அவர் சகல விடயங்களிலும் அரசின் பிரதிநிதியாகச் செயற்படுவார். இவர், கிராம மக்களையும், கிராமம் தொடர்பான தகவல்களையும், அரசாங்கத்தோடு பகிர்ந்து கொள்ளும் ஓர் இணைப்பு அதிகாரியாகச் செயற்படுகிறார்.

**செயற்பாடு - 1**

அட்டவணையைப் பூர்த்தி செய்க.

1. உமது வீடு அமைந்துள்ள கிராம அலுவலர் பிரிவின்
   பெயர் :..........................................................................................
   இலக்கம் :..........................................................................................
2. உமது பாடசாலை அமைந்துள்ள கிராம அலுவலர் பிரிவின்
   பெயர் :..........................................................................................
   இலக்கம் :..........................................................................................

**எமது பிரதேசத்தின் பிரதேச செயலாளர் பிரிவு**


கிராம அலுவலர் பிரிவுகள் பல ஒன்றிணைந்து உருவாக்கப்பட்ட நிர்வாக அலகே பிரதேச செயலாளர் பிரிவாகும். அதன் பொறுப்பாளர் பிரதேச செயலாளர் ஆவார். தனது கட்டுபாட்டிலுள்ள சகல கிராம அலுவலர் பிரிவுகளையும் பரிபாலித்தலுடன் அரசின் சகல நடவடிக்கைகளுக்கும் பொறுப்பானவர் பிரதேச செயலாளரே.

செயற்பாடு - 2

*உமது பாடசாலை மற்றும் வீடு அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு யாது? அதனைப் பெயரிடுக.*

### எமது பிரதேசத்துக்குரிய மாவட்டம்

பல பிரதேச செயலாளர் பிரிவுகள் ஒன்றிணைவதன் மூலம் உருவாகும் நிர்வாக அலகு மாவட்டம் எனப்படும். இதன் பொறுப்பாளர் மாவட்டச் செயலாளர் ஆவார். இலங்கையின் நிர்வாக மாவட்டங்கள் 25 ஆகும். நீங்கள் வாழும் பிரதேசமும் இவற்றுள் ஒன்றாகும். இலங்கையின் நிர்வாக மாவட்டங்கள் பற்றி உரு 2.2 இல் காட்டப்பட்டுள்ளது.





*உரு 2.2 இலங்கையின் நிர்வாக மாவட்டங்கள்*

## செயற்பாடு - 3

*நீர் வாழும் பிரதேசத்தக்குரிய மாவட்டத்தை இலங்கை வரைபடத்தில் குறித்துக்காட்டுக.*

***எமது மாகாணம்***

*இலங்கையில் 09 மாகாணங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு மகாணமும் பல மாவட்டங்களை உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது. உரு 2.3 மூலம் இலங்கையின் மாகாணங்கள் பற்றி அறிந்து கொள்ளுங்கள். அதனை நன்கு அவதானிப்பதன் மூலம் உங்களது பிரதேசத்துக்குரிய மாகாணத்தைச் சரியாக இனங்காணுங்கள்.*




*உரு 2.3* **இலங்கையின் மாகாணங்கள்**

## செயற்பாடு - 4

- நீங்கள் இதுவரை கற்ற நிர்வாக அலகுகளை அடிப்படையாகக் கொண்டு உங்கள் பிரதேசத்தின் அமைவிடத்தைச் சரியாக விளக்குக.

### எமது பிரதேசத்திலுள்ள பௌதீக வளங்கள்

பௌதீக வளங்களை இயற்கை வளங்கள், செயற்கை வளங்கள் என இரு வகைப்படுத்தலாம். எமக்கு கிடைக்கும் சூரிய ஒளி, காற்று, நீர், மண், மலை, சமவெளி, காடுகள், கடல், நதி, நீர்வீழ்ச்சி, களப்பு என்பன இயற்கை வளங்களாகும். மனிதர்களால் உருவாக்கப்படும் வளங்கள் செயற்கை வளங்களாகும். கட்டடங்கள், ஆகாய விமானம், வாகனம் போன்ற உபகரணங்கள் என்பன இதில் அடங்கும். உரு 2.4 இன் மூலம் எமக்கு சொந்தமான பௌதீக வளங்கள் சில காட்டப்பட்டுள்ளன. மனித வாழ்வுக்கு அத்தியாவசியமான இப்பௌதீக வளங்களைப் பாதுகாப்பது எமது தலையாய கடமையாகும்.





உரு 2.4 பௌதீக வளங்கள்

நாம் வாழும் பிரதேசத்தில் மேற்கூறப்பட்ட வளங்கள் பலவற்றைக் காணக்கூடியதாக இருக்கும். சூரியஒளி, காற்று, நீர், நிலம், கட்டடம் என்பவை எல்லாப் பிரதேசங்களிலும் கிடைக்கக் கூடிய பொதுவான வளங்களாகும். ஆயினும், குறித்த வளங்கள் சில பிரதேசத்திற்குரியன வாகக் காணப்படுகின்றன. அவை நதிகள், நீர்வீழ்ச்சிகள், காடுகள், மலைகள், சமவெளிகள், கனியவளங்கள் போன்றனவாகும்.

## செயற்பாடு - 5


1. உங்கள் பிரதேசத்தில் காணக்கூடிய பிரதான பௌதீக வளங்கள் தொடர்பான பதிவேடு ஒன்று தயாரிக்குக.
2. நீங்கள் இனங்கண்ட வளங்கள் பற்றிய தகவல்களை உள்ளடக்கி ஆக்கபூர்வமான கையேடு ஒன்றைத் தயாரிக்குக.
3. உங்கள் பிரதேசத்தில் காணக்கூடிய தாவரங்களை நன்கு பரிசீலித்து கீழ் காணப்படும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| தாவரத்தின் பெயர் | விசேட தன்மைகள் |
|---|---|
| 1. ...................................... | ............................ |
| 2. ...................................... | ............................ |
| 3. ...................................... | ............................ |
| 4. ...................................... | ............................ |

*4. உங்கள் பிரதேசத்தில் காணப்படும் விலங்குகளைப் பட்டியற்படுத்துக.*

**பௌதீக வளங்களை மனித தேவைகளுக்காகப் பயன்படுத்துவோம்.**

பௌதீக வளங்களிலிருந்து கிடைக்கப்பெறும் பயன்கள் பல உரு 2.5 மூலம் கீழே காட்டப்பட்டுள்ளன.





உரு 2.5

எம்மைச் சூழவுள்ள பிரதேசத்தில் பௌதீக வளங்கள் சிலவற்றை மனிதத் தேவைகளுக்காகப் பயன்படுத்தும் விதம் உரு 2.5 இன் மூலம் காட்டப்பட்டுள்ளது.



உரு 2.6

தனிநபர் தேவைகள், சமூக தேவைகள் மற்றும் பொருளாதார தேவைகளுக்காகப் பௌதிக வளங்கள் பயன்படுத்தப்படும் விதம் உரு 2.7 இன் மூலம் காட்டப்பட்டுள்ளது.




உரு 2.7

உங்கள் பிரதேசத்தில் காணப்படும் வெவ்வேறு பௌதீக வளங்களை பாவிக்கும் சந்தர்ப்பங்கள் பற்றி எண்ணிப்பாருங்கள். அவற்றை மிகுந்த கவனத்துடனும் சிக்கனமாகவும் பயன்படுத்துதல் முக்கியம் வாய்ந்ததென்பதை நினைவில் கொள்ளுங்கள். ''தேனீ பூவிலிருந்து தேன் எடுப்பதைப் போல்'' இயற்கையால் எமக்கு வழங்கப்பட்டுள்ள வளங்களை அவற்றிற்கு பாதிப்பேற்படாத வகையில் பயன்படுத்துவது மனிதர்களாகிய எமது கடமையாகும். இது சிறப்பாக சுற்றாடலைப் பேணவும் வழிவகுக்கும்.

## செயற்பாடு - 6

உங்கள் பிரதேசத்தில் பயன்படுத்தப்படும் பௌதீக வளங்களைக் கருத்திற் கொண்டு கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையைப் பூர்த்திசெய்க.

| வளங்கள் | அவற்றைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் |
|---|---|
| நிலம் | |
| நீர் | |
| கனிய வளங்கள் | |
| வேறு | |

### பிரதேசத்திலுள்ள வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்தலும் அவற்றைப் பாதுகாத்தலும்

எமது பிரதேசத்தில் காணப்படும் பௌதீக வளங்கள் மனித தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதற்காகப் பயன்படுகின்றன. எனவே சூழலினதும் எமது எதிர்கால சந்ததியினரின் நன்மைக்காகவும் அவற்றை சிக்கனமாகப் பயன்படுத்துவதும் பாதுகாப்பதும் எமது கடமையாகும்.

நிலம், வளி, நீர், நதி, நீர்வீழ்ச்சிகள், காடுகள், வனவிலங்குகள் போன்ற வளங்களைத் தற்கால மனிதன் முறையற்றவாறு பயன்படுத்துவதால் வளங்கள் தொடர்பாகப் பல பிரச்சினைகள் எழுந்துள்ளன. இப்பிரச்சி னைகள் சுற்றாடலுக்கும் மனிதனுக்கும் அச்சுறுத்தலாக அமைகின்றன. எனவே, பௌதீக வளங்களின் மூலம் மனிதர்களுக்குக் கிடைக்கின்ற பயன்கள் பற்றி நன்கு சிந்தித்துப் பார்த்து அவற்றைச் சிக்கனமாகப் பயன்படுத்தி அவற்றைப் பாதுகாப்பதற்கான நல்ல மனப்பாங்கை நாம் அனைவரும் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

### பௌதீக வளங்களைப் பாதுகாக்கும் முறைகள்

- வனங்களைப் பாதுகாத்தல்.
  உதாரணம் - மரங்களை நடுதல்
- வளங்களிலிருந்து உச்ச பயன்பாட்டைப் பெறல்.
  உதாரணம் - மீள் பாவனை, மீள் சுழற்சிக்குட்படுத்தல்

- வளங்கள் வீணாவதைத் தடுத்தல்.
  உதாரணம் - நீர், மின்சாரம், எரிபொருள்
- விரைவில் உக்கல் அடையாத பொருட்களை மண்ணோடு கலக்காதிருத்தல்.
  உதாரணம் - பொலிதீன்.
- பிளாஸ்டிக் பொருட்களை எரிப்பதைத் தவிர்த்தல்.
- கனிய வளங்களை மீள் உருவாக்கல்.
  உதாரணம் - வைரச் சுரங்கங்களை மீள் அமைத்தல், களிமண் குழிகளை, இரத்தினக்கல் சுரங்கங்களை மண்கொண்டு நிரப்புதல்.
- மாற்று வளங்களைப் பயன்படுத்தல்.
  உதாரணம் - அரிமரத்துக்குப் பதிலாக கொங்கிறீட், பிளாஸ்டிக் முதலானவற்றைப் பயன்படுத்தல்.

**செயற்பாடு - 7**

1. உங்கள் பிரதேசத்தில் காணப்படும் பௌதீக வளம் ஒன்றைத் தெரிவு செய்து, அதன் பாதுகாப்பிற்கு மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் பற்றிக் கலந்துரையாடுக.
2. நீங்கள் கலந்துரையாடிப் பெற்ற முடிவுகளுக்கமைய செயற்படும் முறையை விபரிக்கும் சுவரொட்டி ஒன்றைத் தயார்செய்க.

### எங்கள் மனித வளம்

எமது பிரதேசத்தில் வாழும் மனிதர்களும் எமக்கு வளமே. மனிதனின் அறிவு, திறன் மற்றும் உடல் சார்ந்த ஆற்றல்களின் மூலம் மனித வளங்கள் உருவாகியுள்ளன. எமது பிரதேசத்தில் இத்தகைய மனித வளங்கள் பலவற்றை இனங்காணக்கூடியதாய் இருக்கும். விவசாயிகள், ஆசிரியர்கள், வைத்தியர்கள், தாதிகள்,மேசன், தச்சன், பொறியியலாளர் உட்பட ஏனைய அலுவலர்கள், அரச ஊழியர்கள், ஆராய்ச்சியாளர்கள், விஞ்ஞானிகள், அழகியல் நிபுணர்கள், ஊடகவியலாளர்கள் போன்றோர் விசேட மனித வளங்களாகும்.

## செயற்பாடு 8

1. கீழே தரப்பட்டுள்ள படங்களில் காணப்படுகின்ற மனித வளத்தை இனங்கண்டு பெயரிடுக.



உரு 2.8

2. உங்கள் பிரதேசத்தில் உள்ள மனித வளம் பற்றிய அட்டவணை ஒன்றினைத் தயாரிக்குக.
3. நீங்கள் குறிப்பிட்ட மனித வளத்தினால் கிடைக்கப் பெறும் நன்மைகளை ஒழுங்குபடுத்தி முன்வைக்குக.

### மனித வளங்களின் தரத்தை மேம்படுத்தல்

மனிதன் இயல்பாகவே விசேடமான பல ஆற்றல்களைகொண்டுள்ளான். அவையாவன அறிவாற்றல், உடல் சார்ந்த ஆற்றல்கள், சமூகவாற்றல் என்பனவாகும். மனிதனுக்குரிய ஆற்றல்களை வளர்த்துக் கொள்ளவும் அவற்றில் ஒழுங்காகத் தேர்ச்சி பெறவும் பயிற்சி அவசியமாகும். இதற்கென வெவ்வேறுபட்ட கற்கை நெறிகள், பயிற்சிப் பட்டறைகள் இயங்கி வருகின்றன. இதன் மூலம் தனிநபர் ஆற்றல்களை வளர்த்துக் கொண்டு, எதிர்காலத்தில் தனக்கென ஒரு தொழிலை உருவாக்கிக் கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளன.

மனித வளத்தை மேம்படுத்துவதற்கான பயிற்சியின் மூலம் ஏற்படும் நன்மைகள் கீழே கோட்டுப்படத்தின் மூலம் காட்டப்பட்டுள்ளது.

**மனித வளப் பயிற்சியின் மூலம்**

↓

ஆற்றல்களை மேலும் வளர்த்துக் கொள்ளல்

↓

தொழிற்றகைமையை ஏற்படுத்திக் கொள்ளல்

↓

தொழிலை மேலும் சிறப்பாக நடாத்துதல்

↓

தொழிலின் மூலம் முன்னேற்றமடைதல்

↓

பொருளாதார முன்னேற்றம்

↓

நாட்டின் அபிவிருத்தி

உரு 2.9

### உங்கள் பிரதேசத்தின் பொருளாதார நடவடிக்கைகள்

உங்கள் பிரதேசத்தின் வாழ்வாதாரமாக மக்கள் பல்வேறு தொழில்களில் ஈடுபடுகின்றனர். இவை பெரும்பாலும் உங்கள் பிரதேசத்துடன் பின்னிப்பிணைந்துள்ளன. நிலத்தை அடிப்படையாகக் கொண்டு விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களும் உங்கள் பிரதேசத்தில் இருக்கலாம். குறித்த பிரதேசத்தினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் கைத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவோரும் இருப்பர். இத் தொழில்கள் மூலமாகப் பல்வேறு உற்பத்திப் பொருட்கள் சந்தைக்கு வழங்கப்படுகின்றன. மிருகவளர்ப்பு, வியாபாரம் இன்னும் பல தொழில்களில் ஈடுபடுவோரும் உங்கள் பிரதேசத்தில் இருக்கலாம். இதனைக் கருத்திற் கொண்டு உங்கள் பிரதே சத்தின் பொருளாதார நடவடிக்கைகளை எண்ணிப்பாருங்கள்.

**செயற்பாடு 9**

1. உங்கள் பிரதேசத்தில் காணப்படும் தொழில் அபிவிருத்தி பயிற்சி நிலையங்களை இனங்காண்க.
2. அத்தகைய நிறுவனங்களில் நடைபெறும் பயிற்சிகளை உள்ளடக்கிய அட்டவணை ஒன்றைத் தயாரிக்குக.

3. மேற்கூறிய தகவல்களை உள்ளடக்கியதாகச் சுவரொட்டி ஒன்றைத் தயாரித்து வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்
4. பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக


| பிரதேச வளங்கள் | உற்பத்திப்பொருள் | தொழில் |
|---|---|---|
| உ+ம்: களிமண் | செங்கல் | செங்கல் தயாரித்தல் |
| 1. | | |
| 2. | | |
| 3. | | |

**பிரதேச மக்களுடன் ஒற்றுமையாக வாழ்தல்**

ஒற்றுமையாக வாழ்தல் மனிதனின் விசேட பண்பாகும். மனிதன் ஒற்றுமையாக வாழ்ந்தமையாலேயே இன்று முன்னேற்றம் அடைந் துள்ளான். இதன் அடிப்படையில் ஒழுக்கமுள்ள இளைஞர்கள் உருவாக் கப்படுவர். எமது நாட்டின் வரலாற்றைச் சற்று எண்ணிப் பாருங்கள். அதில் ஒற்றுமையுடன் செயற்படும் பண்பானது தெட்டத் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது.

ஒற்றுமையான செயற்பாடுகளுக்காக உதாரணமாக:
குளங்கள், அணைக்கட்டுகள், வழிபாட்டுத்தலங்கள்அமைத்தல், அன்னதான நிகழ்ச்சிகள், சமய நிகழ்வுகள், திருமண வைபவங்கள், மரணச் சடங்குகள், சிரமதானம், நிருவாக நடவடிக்கைகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

மனிதன் சமூகப் பிராணியாக இருப்பதனால் அவனால் தனியாக வாழ முடியாது. இதனால் ஒற்றுமையுடன் செயற்படுதல் அத்தியவசியமாகும்.



உரு 2.10

1. தனிநபர்
2. குடும்பம்
3. அயலவர்
4. கிராமம்/நகரம்
5. நாடு
6. உலகம்

மேலே காட்டப்பட்டுள்ள உருவின்படி ஒற்றுமை, சகவாழ்வு விரிவடைந்து செல்கின்ற நிலையை விளங்கிக் கொள்ளலாம்.










உரு 2.11
*மக்கள் ஒற்றுமையாகச் செயற்படும் சந்தர்ப்பங்கள்*


## செயற்பாடு 10

1. *நீங்கள் வாழும்பிரதேசத்தில் மக்கள் ஒற்றுமையாகச் செயற்படும் சந்தர்ப்பங்கள் 3 தருக.*

2. *அவற்றுள் ஏதேனும் ஒன்றைத் தெரிவு செய்து நண்பர்களுடன் இணைந்து குறுநாடகம் ஒன்றைத் தயாரித்து வகுப்பறையில் நடித்துக்காட்டுக.*

3. *உங்கள் வகுப்பு மாணவர்கள் ஒன்றிணைந்து பாடசாலையின் நலனுக்காக ஒற்றுமையுடன் ஏதேனும் ஒரு செயற் பாட்டில் ஈடுபடுங்கள். இதனால் உங்களுக்குக் கிடைக்கப் பெற்ற அனுபவங்கள் பற்றி வகுப்பு மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.*

**ஒற்றுமையாகச் செயற்படுவதால் கிடைக்கும் நன்மைகள்**




உரு 2.12

**செயற்பாடு 11**

- ஒற்றுமையாகச் செயற்படுவதன் மூலம் உங்களிடம் விருத்தியடையும் பண்புகள் பற்றி வகுப்பறையில் கலந்துரையாடுக.

## எமக்கு உதவுவோர்

நாம் சமூகத்தில் வாழ்வதற்கும் எமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கும் பல்வேறு நபர்கள் மற்றும் நிறுவனங்களின் பங்களிப்பு அவசியமாகும். இவ்வாறான பல்வேறு தனியாட்களும் அமைப்புகளும் சமூகத்தில் காணப்படுகின்றன.

## செயற்பாடு 12

1. உமது பிரதேச மக்களுக்காக வெவ்வேறு சேவைகளை வழங்கும் அரச அலுவலர்களின் பெயர்களைப் பட்டியற்படுத்துக.

2. தெரிவுசெய்த அலுவலர்கள் சிலரினால் ஆற்றப்படும் சேவைகள் பற்றி சுவரொட்டி ஒன்றைத் தயாரிக்குக.

3. கீழேதரப்பட்டுள்ளவை உங்களுக்கு வெவ்வேறு சேவைகள் பற்றிய விபரமாகும். அதனை நன்கு வாசித்து அச் சேவைகளை ஆற்றும் அரச அலுவலர்களின் பெயரை எழுதுக.

i. கிராம மக்களின் வதிவிடத்தை உறுதிப்படுத்துதல், அரசாங்கத்தால் வழங்கப்படும் உதவிப் பணத்தை விநியோகித்தல், பிரதேசத்தில் நடைபெறும் சட்ட விரோதச் செயல்களுக்கெதிராக நடவடிக்கை மேற்கொள்ளல். கிராம வாசிகள் தொடர்பான தகவல்களைத் திரட்டல் போன்ற கருமங்களை உங்களுக்காக ஆற்றுபவர் யார்?.......
.........................

ii. தொற்று நோய்க்கட்டுப்பாடு, மாணவர்களின் சுகாதாரப் பரிசோதனை, மருத்துவப் பரிசோதனை மற்றும் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தல், தடுப்பூசி ஏற்றல் போன்ற பணிகளை ஆற்றுபவர் யார்?....................................

iii. பிரதேச மக்களின் உதவிப் பணத்தை வழங்குவதற்கான நட வடிக்கைகளை மேற்கொள்ளல், ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றலுக்கு ஆவனசெய்தல், கிராம அபிவிருத்தித் திட்டங்கள் என்பவற்றை செயற்படுத்துபவர் யார்? ............................
...........................

iv. உங்களுக்கான தபால், பொதி விநியோகித்தல், தந்திகள் விநியோகித்தல், தேர்தல் வாக்குச்சீட்டை விநியோகித்தல் போன்ற நடவடிக்கைகளில் உதவி செய்பவர் யார்? .....................................

V. அரச சட்டதிட்டங்களைப் பாதுகாத்தல், சமாதானத்தை பேணிப் பாதுகாத்தல், பிரதேசத்தின் சட்டவிரோதச் செயல்களைத் தடுத்தல், அவசர விபத்துகளுக்கான சிகிச்சை வழங்கல் போன்ற நடவடிக்கைகளினூடு உதவி புரிபவர் யார்? ...........................................

## எமக்கு உதவி புரியும் நிறுவனங்கள்

பொதுமக்களின் தனிப்பட்ட மற்றும் அரச தேவைகளை நிறை வேற்றுவதற்காகப் பலதரப்பட்ட அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் இயங்கிவருகின்றன. அவற்றுள் குறிப்பிட்ட நிறுவனங்கள் சிலவற்றின் சேவைகள் பற்றி நாம் ஆராய்வோம்.

### பிரதேச செயலாளர் காரியாலயம்

பிரதேசத்தில் வாழும் மக்களின் அரச மட்டத்திலான தேவைகள் அனைத்தையும் இதன் மூலம் நிறைவேற்றிக் கொள்ள முடியும். அவற்றுள் சில வருமாறு.

- பிறப்புச் சான்றிதழை வழங்கல்
- கிராம அலுவலர் சான்றிதழை உறுதிப்படுத்தல்
- அனுமதிப் பத்திரங்கள் வழங்கல் (License)
  உதாரணம் - மரம் வெட்டுதல், அரச நிலம்,சூழல் பாதுகாப்பு, வாகனம் என்பவற்றின் அனுமதிப்பத்திரம்.
- ஓய்வூதியப் பணத்தை பெற்றுக் கொடுத்தல்
- அடையாள அட்டையைப் பெற்றுக் கொடுத்தல்
- நிவாரண உதவி வழங்கல்

### செயற்பாடு 13

- உங்கள் குடும்ப அங்கத்தவர்கள் பிதேச செயலாளர் காரியாலயத்தில் பெற்றுக் கொண்ட சேவைகளைக் கேட்டறிந்து அவற்றை உங்கள் அப்பியாசப் புத்தகத்தில் குறித்துக் கொள்ளுங்கள்.

## உள்ளூராட்சி நிறுவனங்கள்

i. ***மாநகர சபை***

நகரமயமாக்கப்பட்ட சுற்றாடல் தொடர்பான அதிகாரப் பிரதேசம் மாநாகரசபையாகும். இவ்வாறான பல மாநகர சபைகள் எமது நாட்டில் இயங்குகின்றன. அவையாவன; கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், குருணாகல், நுவரெலியா, அக்கரைப்பற்று, கல்முனை, தெஹிவளை - கல்கிஸ்ஸ, மற்றும் கடுவெல என்பன அவற்றுள் சிலவாகும். இதன் பொறுப்பாளர் **நகரபிதா** ஆவார். மாநகர சபையால் எமக்கு ஆற்றப்படும் சேவைகள் சில கீழ்தரப்பட்டுள்ளன.

- பாதைகளைச் சுத்தம் செய்தல், பராமரிமத்தல்.
- நீர் வழங்கல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- குப்பைகூழங்களை அகற்றல்.
- பொதுச் சந்தை மற்றும் பொதுமக்களின் சுகாதாரப் பாதுகாப்பு என்பவற்றைப் பேணல்.
- நூலகம் , பூங்கா மற்றும் விளையாட்டு மைதானம் என்பவற்றை பராமரித்தல்.
- பொதுச் சொத்துக்களை உருவாக்கலும் பேணிப் பாதுகாத்தலும்.
- தெரு விளக்குகளைப் பராமரித்தல்.

### செயற்பாடு 14

1. உங்கள் பிரதேசத்திற்கு அருகாமையில் உள்ள மாநகர சபையின் பெயரை எழுதுக.
2. கீழ்காட்டப்பட்டுள்ள சேவைகளில் மாநகர சபையால் ஆற்றப்படும் சேவைகளை இனங்கண்டு சரியாயின் (✓) என்று அடையாளமிடுக.

| | |
|---|---|
| போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தித் தருதல். | ☐ |
| நகரத்தினுள் உள்ள பாதைகளை சுத்தம் செய்தலும் பராமரித்தலும் | ☐ |
| குப்பைகூழங்களை அகற்றல் | ☐ |

கட்டிடங்களை உருவாக்கல் ☐

பொதுச் சந்தைத் தொகுதி, நகர பூங்கா, நூலகம் என்பவற்றை நடாத்துதல் ☐

பொது இடங்களுக்கான நீர் விநியோகத்தை ஏற்படுத்துதல் ☐

ii. ***நகர சபை***

சனத்தொகைச் செறிவு குறைவாக இருப்பினும் கூட, நகர மயமாக்கலுக்குட்பட்ட பிரதேசம் நகர சபையாகும். இதன் பிரதானி **தலைவர்** ஆவார். உங்களுக்குரிய பிரதேசத்தில் காணப்படும் நகர சபையால் ஆற்றப்படும் சேவைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- மக்களுக்கான சுகாதார சேவைகளை வழங்குதல்.
- நூலகம், விளையாட்டு மைதானம், பூங்கா, பொது மலசலகூடம் என்பவற்றைப் பராமரித்தல்.
- நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புத் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- பொதுக்கட்டடங்களை நிர்வகித்தலும், பராமரித்தலும்.
- குப்பை கூழங்களை வெளியேற்றல், நகரத்தைச் சுத்தப்படுத்துதல்.

iii. ***பிரதேச சபை***

நகர சபையினுள் உள்ளடக்கப்படாத கிராமிய பிதேசங்கள் மற்றும் நடுத்தரமான நகரப்பிரதேசங்கள் பிரதேச சபைக்கு உரியனவாகும். இதன் பிரதானி **தவிசாளர்** ஆவார். பிரதேச சபையினால் ஆற்றப்படும் சேவைகள் வருமாறு.

- தமது பிரதேசத்தினுள் தெருக்களை அமைத்தல் அவற்றைப் பராமரித்தல்.
- குளியல் நிலையங்கள், வியாபார மத்தியஸ்தானங்களை நடாத்திச் செல்லல்.
- குப்பைகூழங்களை அகற்றுதல்,
- வீதிகளைச் சுத்தம் செய்தலும் வீதி விளக்குகளைப் பராமரித்தலும்.

- வீடு கட்டுவதற்கான அனுமதியை வழங்குதல்
- சமூக நலன்புரிச் சேவைகளை வழங்குதல்.

**செயற்பாடு 15**

- உங்கள் வீட்டிற்கோ பாடசாலைக்கோ அருகாமையில் உள்ள உள்ளூராட்சி நிறுவனத்தால் ஆற்றப்படும் சேவைகள் தொடர்பாகத் தேடி ஆராய்ந்து கீழ்க் காட்டப்பட்டவற்றைப் பூர்த்தி செய்க.
  பிரதேச சபையின் பெயர்:..............................
  கீழே தரப்பட்டுள்ள சேவைகள் பிரதேச மக்களுக்கு வழங்கப்படுகின்றதாயின் ( ✓ ) எனவும் இல்லையெனின் ( ✗ ) எனவும் அடையாளமிடுக.
- பாதைகளைச் சுத்தம் செய்தல், பராமரித்தல் ( )
- குப்பைகூழங்களை அகற்றல் ( )
- வரிப்பணத்தை வசூலித்தல் ( )
- வீதிகள், பொது இடங்களைப் பராமரித்துப் பேணல் ( )
- நூலகம், பாலர் பாடசாலைகளை நடாத்துதல் ( )
- கடைகளுக்கான வரிப்பணத்தை வசூலித்தல் ( )

**வைத்தியசாலை**

பிரதேச மக்களின் சுகாதாரப் பாதுகாப்பிற்காக 24 மணிநேரமும் சேவை வழங்கும் பிரதான நிறுவனம் வைத்தியசாலை ஆகும். நோய்த் தொற்றுக்குள்ளானவர்களையும் அவசர விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களையும் குணப்படுத்துவதற்காக வைத்தியர்கள், தாதிகள் உட்பட சகல அலுவலர்களும்சேவையாற்றுவர். அரச வைத்தியசாலைகளில் சகல சேவைகளும் எமக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன. எனினும் இச்சேவைகளை இலவசமாக வழங்குவதற்காக அரசாங்கம் பாரிய செலவுகளைத் தாங்கிக் கொள்கின்றது.



உரு 2.13

### சமய வழிபாட்டுத் தலங்கள்

எமது நாட்டில் வெவ்வேறு இன, மதத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்கின்றனர். இதனால், வெவ்வேறு மத வழிபாட்டுத் தலங்களை எமது அயற் பிரதே சங்களில் காணலாம். எமது நாட்டில் காணப்படும் மதவழிபாட்டுத்தலங்கள் உரு 2.14 இல் காட்டப்பட்டுள்ளன.



உரு 2.14 பல்வேறு வணக்கஸ்தலங்கள்

### சமய வழிபாட்டுத் தலங்களால் ஆற்றப்படும் சேவைகள்


- சமய அறிவை வழங்குதல்.
- ஒழுக்கவிழுமியம்,கருணை, இரக்கம், அன்பு, பொறுமை போன்ற பண்புகளை விருத்தி செய்தல்.
- மதவழிபாடுகள், பிரார்த்தனைகளை மேற்கொள்ளல்
- இனங்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துதல்
- மனிதனின் ஆன்மீகப் பண்புகளை மேம்படுத்துதல்.
- மக்களின் நலனுக்கு முக்கியத்துவமளித்துச் செயற்படல்
- விசேட நிகழ்வுகளின்போது தலைமைத்துவம் வழங்கல்

## செயற்பாடு 16

1. உங்கள் பிரதேசத்தில் காணப்படும் வெவ்வேறு சமய வழிபாட்டுத் தலங்களைப் பட்டியற்படுத்துக.
2. இச் சமய வழிபாட்டுத் தலங்களால் ஆற்றப்படும் சேவைகளை எழுதுக.
3. உங்கள் வகுப்பு மாணவர்களுடன் ஒன்று சேர்ந்து சமய வழிபாட்டுத் தலத்தைச் சுத்தம் செய்தல் அல்லது, அங்குள்ள ஏதேனும் ஒரு தேவையை நிறைவேற்றுவதற்கான சிரமதானம் ஒன்றை ஒழுங்கு செய்யுங்கள்.

**சங்கங்களும் கழகங்களும்**

பொது மக்களின் சமூக, பொருளாதார, கலாசார மற்றும் சூழல் தேவைகளை நிறைவேற்றுவதற்காகப் பல சங்கங்களும் கழகங்களும் அமைக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றன. இவை அரசாங்க, அரச சார்பற்ற சங்கங்கள், எனப் பிரிக்கலாம். இவற்றுள் சில கீழே தரப்பட்டுள்ளன.




உரு 2 .15

இச்சகல சங்கங்களின் அதிகாரிகள் மற்றும் அங்கத்தவர்கள் தமது பிரதேச மக்களின் பொதுத் தேவைகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வர். இவற்றினூடாக பிரதேச மக்களிடையே பரஸ்பர தொடர்பையும் சுமூகமான நட்புறவையும் மேம்படுத்தல், ஐக்கியத்துடன் செயற்படல், பொதுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கல் போன்ற பல்வேறு பணிகள் ஆற்றப்படுகின்றன.

### செயற்பாடு 17

1. உங்கள் பிரதேச மக்கள் ஒன்றிணைந்து உருவாக்கியுள்ள சங்கங்களின் பெயர்களை எழுதுக.
2. அவற்றுள் ஏதேனும் ஒன்றைத் தெரிவு செய்து அதன் மூலம் மக்களுக்கு ஆற்றப்படும் சேவைகளைக் குறிப்பிடுக.

**பிரதேசத்திலுள்ள சங்கங்கள், கழகங்களினால் ஆற்றப்படும் சேவைகள்**

| சங்கங்கள் | ஆற்றப்படும் சேவைகள் |
|---|---|
| கூட்டுறவுச் சங்கம் | பொருட்களின் மலிவு விற்பனை, விவசாயப் பொருட்களை வாங்கி விற்றல் |
| கமத் தொழிற் சங்கம் | ஆலோசனை வழங்கல், உதவித்தொகை பெற்றுத்தரல்/நலன்புரி சேவைகளை வழங்கல் |
| மீனவர் சங்கம் | விலைக்கு வாங்கல், நலன்புரி சேவைகளை வழங்கல் |
| கிராம அபிவிருத்திச் சங்கம் | பிரதேசத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் |
| மரண உதவிச் சங்கம் | மரண உதவி சேவைகள், நலன்புரி சேவைகள் வழங்கல் |
| விளையாட்டுக் கழகம் | விளையாட்டுப் போட்டிகளை ஒழுங்கமைத்தலும் நடாத்தலும் போட்டிகளை நடாத்துதல். |

## செயற்பாடு 18

1. உங்கள் ஆசிரியருடன் கலந்தாலோசித்து உங்கள் வகுப்பு மாணவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து ''சிறுவர் கழகம்'' ஒன்றை உருவாக்குக.
2. நீங்கள் உருவாக்கிய சிறுவர் கழகத்தினூடாக சகோதர மாணவ மாணவியரின் திறமைகள், ஆற்றல்களை விருத்தி செய்வதற்கான நிகழ்ச்சி ஒன்றை நடாத்துக.

### எமக்கு சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் கடமைகள்

- தமது சேவைகளை உரிய முறையில் வழங்குதல்
- வினைத்திறனுடன் கடமையாற்றல்
- சரியான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குதல்
- பாரபட்சமின்றிச் செயற்படுதல்
- நியாயமாகச் செயற்படல்
- பொதுமக்களுடன் நற்புறவுடன் செயற்படல்
- இலஞ்சம், மோசடிகளிலிருந்து தவிர்ந்து கொள்ளல்.

### சேவையைப் பெற்றுக் கொள்பவர்களின் கடமைகள்

- வரிப்பணத்தை முறையாகச் செலுத்துதல்.
- சேவை வழங்குனர்களுக்கான ஒத்துழைப்பை முறையாக வழங்கல்.
- ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களை ஒழுங்காகப் பின்பற்றல்.
- சேவை வழங்கும் நிறுவனம் மற்றும் அதன் சொத்துக்களைப் பாதுகாத்தல்
- முறையற்ற வகையில் சேவைகளைப் பெற்றுக் கொள்ளாதிருத்தல்.
- சேவை வழங்குபவருடன் நற்புறவுடன் செயற்படல்.
- அவர்கள் வழங்கும் சேவைகளுக்கு மதிப்பளித்தலும் நன்றி செலுத்தலும்.

## செயற்பாடு 19

உங்கள் பிரதேசத்திற்குச் சேவை வழங்கும் நிறுவனம் ஒன்றைத் தெரிவு செய்து, அதன் மூலம் கிடைக்கும் சேவைகளுக்காக உங்களால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள் பற்றிக் கலந்துரையாடுக.

**சாராம்சம்**

- நீங்கள் இலங்கைப் பிரசை என்ற வகையில் உங்கள் கிராம உத்தியோகத்தர்பிரிவு, பிரதேச செயலாளர் பிரிவு, மாவட்டம், மாகாணம் என்பவற்றை அறிந்து கொண்டிருப்பீர்கள்.
- பிரதேசத்தில் காணப்படுகின்ற பௌதீக வளங்களையும், அவற்றை சிக்கனமாகப் பயன்படுத்துவதன் அவசியத்தையும் விளங்கிக் கொண்டிருப்பீர்கள்.
- பிரதேசத்திலுள்ள மனித வளம் பெறுமதி மிக்கதாகும். அதன் பண்பு சார் தன்மையினை பயிற்சியின் மூலம் விருத்தி செய்யலாம். பிரதேசத்தின் பொருளாதாரத்தை விவசாயம், கைத்தொழில், சேவைகள் என்று வகைப்படுத்தலாம். இவை பெரும்பாலும் பிரதேசத்தின் மனிதவளம், பௌதீகவளம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டது என்பதை விளங்கிக் கொண்டிருப்பீர்கள்.
- பிரதேச மக்களின் சமத்துவமானது, குடும்பத்தினதும், பிரதேசத்தினதும் வளர்ச்சிக்குக் காரணமாக அமையும். இவை பல்வேறு சந்தர்ப்பங்களில் வேலைகளை இலகுவாக்குவதோடு, பல்வேறு பயன்களையும் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவுள்ளன.
- பிரதேச மக்களுக்கு உதவுவதற்குப் பல்வேறு, அமைப்புக்கள், சமய நிறுவனங்கள், அரச நிறுவனங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள் என்பன முன்னிற்கின்றன. இவற்றில் அரச அதிகாரிகள், தனிநபர்கள் பல வழிகளில் தொடர்புபட்டிருக்கின்றனர். இந்நிறுவனங்கள் குறித்த பிரதேச மக்களின் சமூகப் பொருளாதார, ஆன்மீக விருத்திக்கு வழிகோலுகின்றன. என்பதை இவ்வலகின் மூலமாக விளங்கிக் கொண்டிருப்பீர்கள்.

# 3 நற்பிரசை

நற்பிரசையாக வாழ்வதற்கு தேவையான பண்புகளை விருத்தி செய்து கொள்வது தனிநபரினதும் சமூகத்தினதும் பொறுப்பாகும். அதற்காக வளர்த்துக்கொள்ள வேண்டிய குணங்களுள் கௌரவமான சொற்பிரயோகம், நன்னடத்தை, ஒழுக்கம் என்பன உள்ளடங்கும். சமூகத்தில் நல்லவைகளோடு கெட்டவைகளும் உள்ளன. வாழ்க்கைக்கு நல்லவைகளை சேர்த்துக் கொள்வது நற்பிரசை ஒன்றின் பண்பாகும். தாய் நாட்டுக்குரிய வளங்களையும் பொதுச்சொத்துக்களையும் பாதுகாத்து தாய் நாட்டின் அபிமானத்தை காப்பாற்றுவது நற்பிரசையொருவரின் கடமையாகும். இவை தவிர சட்டத்தையும் ஒழுங்கையும் மதிக்கக்கூடிய நற்பண்புகளை வளர்த்துக்கொள்வதுடன் வாழ்க்கையில் அதனைப் பின்பற்றவும் பழகிக் கொள்வதன் மூலம் நற்பிரசைகள் வாழும் நாடு இலங்கை என உலகிற்கு எடுத்துக்காட்டலாம்.

## 3.1 கௌரவமான மொழியைப் பயன்படுத்துவோம் (பண்பான மொழி நடையைப் பயன்படுத்துவோம்)

வகுப்பறையிலும் பாடசாலையிலும் நண்பர்களுடன் பழகுவதற்கு உங்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கும். அவ்வாறே, வீட்டிலும் வெளி சமூகத்திலும் பலரோடு பழகுவதற்கான சந்தர்பங்கள் உள்ளன. நீங்கள் பழகுகின்றவர்களைப் பற்றிச் சிறிது சிந்தித்துப் பாருங்கள். முதலில் நீங்கள் ஒருவரை ஒருவர் அறிமுகம் செய்து கொண்டதை எண்ணிப் பாருங்கள். அவர்களின் ஊர், பெயர், வயது, சகோதர சகோதரிகள் பற்றிய தகவல்கள் போன்ற தனிப்பட்ட விபரங்களை நீங்கள் விசாரித்திருக்கலாம். அவ்வாறே அவர்களும் உங்களின் தகவல்களை விசாரித்திருப்பர். அச்சந்தர்ப்பத்தில் நீங்கள் அவர்களோடு அன்பான வார்த்தைகளில் உரையாடியது நினைவிருக்கலாம்.

அவர்களும் உங்களுடன் அன்பாகவும் மரியாதையுடனும் உரையாடியதால் உங்கள் இருவருக்குமிடையில் பிணைப்பு ஏற்பட்டிருக்கலாம். அவ்வாறு பேசியிராவிட்டால், உங்கள் இருவருக்கிடையில் வெறுப்பு ஏற்பட்டிருக்கலாம். அப்போது, உங்களுக்கிருப்பது குறைந்தளவான நண்பர்களே. நீங்கள் நண்பர்களுக்கிடையில் நல்ல நண்பனாக இருக்கவும் குடும்பத்தில் புரிந்துணர்வுமிக்க ஒரு உறுப்பினராக செயற்படவும் மரியாதைமிக்க உரையாடலைப் பயன்படுத்த வேண்டும்.

## மரியாதைமிக்க உரையாடலின் பண்புகள்

- அடக்கமாக உரையாடுவார்.
- பண்பான வார்த்தைகளைப் பயன்படுத்துவார்.
- அன்பு வெளிப்படக்கூடிய பொருத்தமான தொனியில் உரையாடுவார்.
- சரியாகவும் தெளிவாகவும் கருத்துக்களை வெளிப்படுத்துவார்.
- பிறரை கௌரவமாக மதிப்பார்.
- சரியான நிலையில் இருந்துகொண்டு பேசுவார்.
- பிறரின் கருத்துக்களைச் செவிமடுத்து, பொறுமையாகப் பேசுவார்.
- அனைவரும் விரும்பக்கூடியவாறு பேசுவார்.
- சரளமாகப் பேசுவார்.
- முகத்தைப் பார்த்துப் பேசுவார்.
- காலம், இடம், சூழ்நிலைகளைப் புரிந்துகொண்டு பேசுவார்.

நீங்கள் யாருடன், எங்கு, எச்சூழ்நிலையில் பேசுகின்றீர்கள் என்ற தெளிவான அறிவு உங்களிடம் இருந்தால் நீங்கள் கௌரவமான மொழியை பயன்படுத்தலாம்.

**இடத்துக்கும், நபருக்கும் ஏற்ப மொழியைப் பயன்படுத்த வேண்டும்**

**i. சந்தர்ப்பத்திற்கேற்ப**

- மங்களகரமான விழாக்கள் மற்றும் வரவேற்புசார் விழாக்கள்
- விளையாட்டு விழாக்கள்
- துன்பகரமான விழாச் சந்தர்ப்பங்கள்
- விவாத, உரையாடல் நிகழ்வுகள்
- பொதுத் தொடர்பாடல் சந்தர்ப்பங்கள்

(வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை, சஞ்சிகை, ஒலிபெருக்கி)

**ii. இடத்திற்கேற்ப**

- மதஸ்தலங்கள்(விகாரை, கோவில்,பள்ளிவாசல், தேவாலயம்)
- வீடு, பாடசாலை, வீதிகள், பேரூந்து, புகையிரதம்

**iii. நபர்களுக்கேற்ப**

- மதகுருமார்
- தாய் தந்தையர்
- ஆசிரியர்கள்
- நண்பர்கள்
- விருந்தினர்கள்
- முதியோர்

கௌரவமான மொழியைப் பயன்படுத்துவதால் பல்வேறு நன்மைகள் கிடைக்கின்றன. அதேவேளை கௌரவமான மொழியைப் பயன் படுத்தாவிட்டால் ஏற்படும் தீய விளைவுகளும் அதிகமாகும். கீழுள்ள அட்டவணையை வாசித்து நீங்களும் அவ்வாறான அனுபவத்தைப் பெற்றுள்ளீர்களா? என்பதை நினைத்துப் பாருங்கள்.

| கௌரவமான மொழியைப் பயன்படுத்துவதன் நன்மைகள் | அகௌரவமான மொழியைப் பயன்படுத்துவதன் தீமைகள் |
|---|---|
| • சமூகத்தில் கௌரவம் கிடைக்கும் | • நல்லவர்களின் உறவு முறியும் |
| • நட்பு வளர்க்கப்படும் | • சமூகத்தால்புறக்கணிக்கப்படல் |
| • தலைமைத்துவப் பண்பினைப் பெற்றுக்கொள்வார் | • நண்பர்கள் குறைதல் |
| • பிறரின் பாராட்டைப் பெறலாம் | • பொருளாதார நஷ்டம் ஏற்படல் |
| • நற் பிரசைகளின் தொடர்பு அதிகரிக்கும் | • தலைமைத்துவம் கிடைக்கின்ற வாய்ப்புகள் குறையும் |
| • தலைமைத்துவம் கிடைக்கும் | |
| • சமூகத்தால் சிறந்த ஒருவராக மதிக்கப்படுவார் | |

சுடு சொற்கள் சொல்லமாட்டேன்
ஏச்சு இழிமொழிகள் சொல்லமாட்டேன்
பொருளில்லா பேச்சுகளைப் பேசமாட்டேன்
அளவுக்கு அதிகமாயும் பேசமாட்டேன்

**( சிரித் மல்தம - எம். எல். சில்வா)**

## செயற்பாடு 1

கீழ்வரும் சந்தர்ப்பங்களுக்கேற்ப கௌரவமாகக் கருத்துப் பரிமாற்றம் செய்யும் முறையினை வெளிப்படுத்தும் வகையில் ஒரு நாடகத்தினை எழுதி வகுப்பில் நடித்துக் காட்டுக.

- மதஸ்தலத்துக்குச் சென்று மதப் பெரியாருடன் உரையாடும் சந்தர்ப்பம்.
- நீண்ட காலத்தின் பின் ஒரு நண்பனைத் திடீரென சந்தித்த சந்தர்ப்பம்.
- ஒரு போட்டியின்போது மத்தியஸ்தம் தொடர்பாக ஏற்பட்ட தெளிவின்மை காரணமாகப் போட்டி நடுவருடன் உரையாடும் சந்தர்ப்பம்.

## 3.2 பிறரின் கருத்துக்களுக்கு மதிப்பளித்துப் பொதுவான உடன்பாட்டிற்கு வருவோம்

சமூகத்தில் நாம் தனியாக வாழ முடியாது. அதனால், பல்வேறு நபர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளவும், கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும் வேண்டிய தேவை நமக்கு உண்டு. நாம் ஒருவருக்கொருவர் கருத்துப் பரிமாற்றம் செய்யும் போது, மற்றவரின் கருத்துகளுக்கு நன்றாகச் செவிமடுத்தால் அவர்களைப் பற்றி நன்கு புரிந்து கொள்ளலாம். நமது கருத்துகளை மற்றவருக்குச் சிறப்பாக வெளிப்படுத்தலும் அவர்களது கருத்துக்களை செவிமடுப்பதற்கு இடமளித்தலும் மிகவும் முக்கியமாகும். கவனமாகச் செவிமடுப்பதால் கருத்தை வெளிப்படுத்துபவருக்கு மற்ற நபர் பற்றிய நல்லபிப்பிராயம் ஏற்படும். கருத்துப் பரிமாற்றத்தின் போது, தனது கருத்துக்கு எதிரான ஒரு விமர்சனம் முன்வைக்கப்படலாம், என்றாலும் அதை ஏற்றுக் கொள்வதற்குப் போதுமான மனப்பக்குவம் உங்களிடம் இருக்க வேண்டும். எதேனுமொரு விடயம் தொடர்பாக உங்களுக்குத் தெரியாத பல விடயங்கள் மற்றவர்களுக்குத் தெரிந்திருக்கலாம். அவ்வாறான விடயங்களில் நீங்கள் கொண்டுள்ள கருத்தை விடப் புதிய பயனுள்ள கருத்தை உண்டாக்குவதற்கு உங்களால் முடியும். அது அன்றாட வாழ்க்கைக்குப் பயனுடையதாகும். அவ்வாறே, பிறருடன் சிறந்த தொடர்பைக் கொண்டிருப்பதற்குப் புதிய கருத்துப்பரிமாற்றம் மிக முக்கியமாகும். நுணுக்கமாக செவிமடுக்காவிட்டால் சரியான விளக்கம் கிடைக்கமாட்டாது. பிழையான புரிதலின் காரணமாக சில வேளை மோதல் நிலைமைக்கும் ஆளாகலாம். என்றாலும் பேச்சுவார்த்தை ஊடாக உடன்பாட்டுக்கு வருவது தனிப்பட்டதும் சமூகரீதியிலுமான விருத்திக்கு அடிகோலும்.

- செவிமடுத்தல் என்பது கேட்டுக் கொண்டிருப்பது
- நுணுக்கமாகச் செவிமடுத்தல் என்பது கவனமாகவும் ஆழமாகவும் கேட்டுக் கொண்டிருப்பது

நுணுக்கமாகச் செவிமடுக்கின்ற நபர் கீழ்வரும் துலங்கல்களில் ஒன்றை அல்லது பலதை வெளிப்படுத்துவார்.

உதாரணம் : கேள்வி கேட்டல், விடையளித்தல், அபிப்பிராயம் தெரிவிதல் மற்றும் அங்கீகரித்தல்.

| நுணுக்கமாகச் செவிமடுத்தல் | நுணுக்கமாகச் செவிமடுக்காமை |
|---|---|
| • கிடைக்கப் பெறும் தகவல் களைச் சரியாகப் புரிந்து கொள்ளலாம் | • கிடைக்கப்பெறும் தகவல் களைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியாது |
| • தகவல்களுக்கேற்ப பிரதிபலிப்பைக் காட்டுவார்கள் | • தகவல்களுக்கேற்ப பிரதிபலிப்பைக் காட்டமாட்டார்கள் |
| • தன்னைப் பற்றியும் பிறரைப் பற்றியும் நம்பிக்கை ஏற்படும் | • சந்தேகமும் நம்பிக்கையின்மையும் ஏற்பட இடமுண்டு |
| • சிறந்த சமூகத்தொடர்பு கட்டியெழுப்பப்படும் | • சமூகத் தொடர்பு கட்டியெழுப்பப்பட மாட்டாது |
| • அனைவரும் இணக்கப் பாட்டிற்கு வர சந்தர்ப்பம் உண்டு | • இணக்கப்பாட்டிற்கான சந்தர்ப்பம் குறைவு |
| • சமூகத் தொடர்பினால் இணைந்து வாழலாம். | • சமூகத் தொடர்பு குறைவதால் தனிமையில் இருக்க நேரிடலாம் |
| • கலந்துரையாடல் மூலம் தீர்மானங்களுக்கு வருவதால் மோதல்கள் ஏற்படாமல் இருக்க வாய்ப்புண்டு | • உடன்பாட்டிற்குப் பதிலாக முரண்பாடு ஏற்பட வாய்ப்புண்டு |

**நுணுக்கமாகச் செவிமடுத்தலில்போது கவனத்திற் கொள்ள வேண்டியவை**

- தெளிவான மொழிப் பிரயோகத்தைப் பாவித்தல்
- கவனமாகச் செவிமடுத்தல்
- விளங்கிக் கொள்ளும் வகையில் செவிமடுத்தல்

**பயனுள்ள தொடர்பாடல் நிகழ்வதற்கு விருத்திசெய்யப்பட வேண்டிய திறன்கள்**

- தனது கருத்தைத் தெளிவாகவும் பொருத்தமாகவும் முன்வைத்தல்.
- சரியான கருத்தை மதித்தலும் ஏற்றுகொள்ளுதலும்.
- பிறரின் கருத்துகளைப் பொறுமையோடு செவிமடுத்தல்.
- பிறரின் கருத்துகளை ஏற்றுக் கொள்ளல்.
- பொருந்தாத கருத்துக்களை பயனுள்ள பேச்சுவார்த்தை மூலம் ஏற்றுக் கொள்ளச் செய்தல்.
- ஏனையோருக்கு கருத்துகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- இணக்கப்பாட்டிற்கு வர முயற்சித்தல்.
- பொருத்தமான சந்தர்ப்பத்தில் தனது கருத்தை முன்வைத்தல்.
- பகிரங்கமாகக் கருத்துக்களை முன்வைத்தல்

## செயற்பாடு 2

1. நுணுக்கமாகச் செவிமடுக்காமையால் நீங்கள் அனுபவித்த அசௌரியமொன்றைச் சுருக்கமாக எழுதுக.
2. நுணுக்கமாகச் செவிமடுக்கின்றமையினால் உங்களுக்குக் கிடைக்கும் நன்மைகளைப் பட்டியல்படுத்துக.
3. ‘‘கப்பல் பார்க்கப் போன சேவகனின் கதையை’’ மூத்தோரிடமிருந்து அறிந்து கொள்க. சேவகனின் செவிமடுத்தல் தொடர்பாக உங்களின் கருத்தை முன்வைக்குக.

## 3.3 சிறந்த ஒழுக்கப்பண்புடன் செயற்படுவோம்




*உரு 3.1*

**நிகழ்வு :** *பஸ் வண்டியும் புகையிரதமும் மோதியதால் ஏற்பட்ட விபத்து*

**திகதி :** *2005. 04. 25*

**இடம் :** *குருநாகல் அளவ்வ வீதியில் அளவ்வ நகரத்துக்கு அருகில் யாங்கல்மோதர புகையிரதக் கடவை விபத்தில் அன்றைய தினம் இறந்தவர்களின் எண்ணிக்கை நாற்பத்தொன்று*

**அங்கவீனமானவர்களின் எண்ணிக்கை:** *முப்பத்தைந்துக்கும் அதிகம்.*

**விபத்துக்குக் காரணம் :** *மூடப்பட்டிருந்த புகையிரதக் கடவைக்குள் பஸ் வண்டி போவதற்கு முயற்சித்தமை.*

**தண்டனை :** *சாரதிக்கும் நடத்துநருக்கும் ஆயுள் தண்டனை வழங்கப் பட்டமை*

இலங்கையில் ஏற்படுகின்ற வீதி விபத்துக்கள் பற்றிய தகவல்களைப் பலமுறை நீங்கள் கேட்டிருப்பீர்கள். தினமும் இது போன்ற விபத் துகள் பற்றி ஊடகங்கள் வாயிலாகவும் நேரடியாகவும் கண்டும் கேட்டும் இருக்கின்றீர்கள். இவ்வாறான விபத்துக்களுக்கு கவனமின்மையும் கட்டுப்பாடின்மையும் காரணமாகின்றன. மேலே உரு 3.1 இல் விவரிக்கப்பட்ட வாகன விபத்து சாரதியின் தேவையற்ற அவச ரத்தினாலும் சட்டத்தை மதிக்காமையாலும் ஏற்பட்டதாகும் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதனால், ஏற்பட்ட உயிரிழப்பைப் பணத்தால் மதிப்பிட முடியாது. சில குடும்பங்களில் தனக் கென்றிருந்த ஒரே ஒரு குழந்தையும் இறந்ததாகத் தெரிய வந்தது.

அவ்வாறே தாய், தந்தையரும் இறந்ததால் குடும்பங்களில் பல குழந்தைகள் அநாதைகளாயின. அவ்விபத்தில் இறந்ததும் அங்கவீனமானதும் நமது நாட்டின் பெறுமதிமிக்க சில மனிதர்களாகும். சமூகத்தின் ஒருவருடைய செயற்பாடு முழு சமூகத்திற்கும் பல்வேறு வழிகளில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பது இதிலிருந்து தெளிவாகிறது. அதனால் எல்லோரும் சிறந்த ஒழுக்கக் கட்டுப்பாட்டுடன் வாழ்வது முழு சமூகத்திற்கும் சிறந்ததாகும்.

**நன்னடத்தையும் ஒழுக்கக் கட்டுப்பாடும்**

ஒழுக்கம் என்பது, சமூகத்தின் எதிர்பார்ப்புக்கேற்ப செயற்படுவதும், சட்டதிட்டங்களைமதித்தலுமாகும். ஒழுக்கம் என்பது விதிமுறைகளின்படி செயற்படுதலாகும். ஒருவருக்கொருவர் மதிப்பளித்தல், அன்புசெலுத்தல், ஒருவரது தவறை ஏற்றுக்கொள்ளுதல், மன்னிப்புக்கோரல் என்பன ஏற்படுவது ஒழுக்கமும் நன்னடத்தையும் இருப்பதனாலாகும்.

**நன்னடத்தை, ஒழுக்கக் கட்டுப்பாடு என்பவற்றை விருத்தி செய்யத் தேவையான பண்புகள்**

- சட்ட திட்டங்களைப் பின்பற்றல்
- ஒருவருக்கொருவர் மரியாதை செலுத்துதல்
- நற்பண்புகளை வளர்த்துக் கொள்ளல்
- மனிதநேயம்
- ஒத்துழைப்பும், நட்பும்
- நியாயத்தை மதித்தல்
- கீழ்ப்படிதல்
- பொறுமையைப் பேணல்
- பரஸ்பரம் விட்டுக் கொடுத்தல்
- சத்தியத்தை மதித்தலும் பேணுதலும்

## குடும்பத்திலும், சமூகத்திலும் ஒழுக்கம் மற்றும் நன்னடத்தை உடையவர்களாக இருப்போம்

### குடும்பத்தில்

- குடும்பத்தில் சகோதர சகோதரிகளுடன் நட்புடனும், சமத்துவத்துடனும் நடந்து கொள்ளல்.
- பெற்றோருக்குக் கீழ்படிதல், மதித்தல், ஒத்துழைப்பு வழங்கல், செவிமடுத்தல்.
- வீட்டிலுள்ள முதியவர்களுக்கு மரியாதை செலுத்தல்.
- மரியாதையாகப் பேசுதல்.
- ஒழுக்கமாகப் பழகுதல்.
- முதியவர்களின் உரையாடலில் தேவையின்றி குறுக்கிடுவதைத் தவிர்த்தல்.
- வானொலி, தொலைக்காட்சி, இணையப் பாவனை, தொலைபேசி உரையாடல் போன்றவற்றின்போது முறையாகச் செயற்படல்

### சமூகத்தில்

- சமூகத்தில் எளியவர்களுக்கும் அங்கவீனர்களுக்கும் முதியவர்களுக்கும் உதவி செய்தல்.
- பொதுச் சொத்துக்களைக் கவனமாகப் பாவித்தல்.
- சகல மதங்களுக்கும் மதிப்பளித்தல்
- ஒருவருக்கொருவர் மதிப்பளித்தல்.
- பல்வேறு சமய நிகழ்வுகளில் கௌரவமாக நடந்து கொள்ளல்
- இடத்துக்குப் பொருத்தமாகப் பழகுவதோடு பொருத்தமான உடையைத் தெரிவு செய்தல்.
- பல்வேறு நிகழ்வுகளில் (தேசிய, மங்கல, அமங்கல) ஒழுக்கமாக நடந்து கொள்ளல்.

### வீதிகளில்

- வீதி ஒழுங்கைப் பேணுதல்.
- தமதும் பிறரதும் பாதுகாப்பைக் கவனத்தில் கொண்டு வீதியை பாவித்தல்.
- வீதியைப் பொதுச் சொத்தாகக் கருதிப் பாவித்தல்.
- பொறுமையுடன் செயற்படல்.
- பிறருக்கு முன் மாதிரியாக நடத்தல்.
- ஒழுக்கமாக நடந்து தனது கௌரவத்தைப் பாதுகாத்தல்.

### பாடசாலையில்

- கல்வியில் கவனம் செலுத்துதல்.
- பாடசாலைச் சொத்துக்களைப் பாதுகாத்தல்.
- பாடசாலையின் கௌரவத்தைப் பாதுகாத்தல்.
- பாடசாலை சட்டதிட்டங்களை மதித்தல்.
- ஆசிரியர்களுக்கு கீழ்படிதலும் அவர்களுக்கு மதிப்பளித்தலும்.
- பாடசாலைக் கொடிக்கும் தேசியக் கொடிக்கும் கௌரவமளித்தல்.
- பாடசாலை வளங்களைப் பாதுகாத்தல்.
- அடுத்தவருடன் ஒழுக்கமாகப் பழகுதல்

**சிறந்த ஒழுக்க மாண்புகளைப் பேணுவதன் முக்கியத்துவம்**

- தனது மதிப்பு மரியாதையைப் பாதுகாத்தல்.
- மகிழ்ச்சியாகவும் எளிமையாகவும் வாழ்தல்.
- பிறரின் கௌரவத்துக்கும் அன்புக்கும் பாத்திரமாதல்.
- சமயங்களுக்கிடையில் ஒற்றுமையைக் கட்டி எழுப்புதல்.
- சமூகத்தோடு தொடர்புடைய சிறந்த பிரசையாக இருத்தல்.
- ஒவ்வொருவருக்குமிடையில் நம்பிக்கையை உறுதிப்படுத்தல்.
- வாகன விபத்துக்களுக்கும் திடீர் விபத்துக்களுக்கும் ஆளாகாதிருத்தல்.
- தண்டனைக்கும் அவமானத்துக்கும் ஆளாகாதிருத்தல்.
- அமைதியான சமூக சூழலை உருவாக்குதல்
- சமூகக் கட்டுக்கோப்பையும் நற்பண்புகளையும் மதிக்கின்ற சமூகமாக உருவாகுதல்.
- சமூகப் பிணக்குகள் குறைவடைதல்.

**செயற்பாடு 3**

1. பாடசாலை, வீதி, வீடு ஆகிய இடங்களில் மிகவும் ஒழுக்கமாகவும், நன்னடத்தையாகவும் நடந்து கொள்ள வேண்டிய முறையினைப் பட்டியல் படுத்துக.

## 3.4 நல்லவற்றையும் தீயவற்றையும் இனங்காண்போம்

நீங்கள் வாழும் சமூகத்தில் நல்ல மற்றும் தீய செயல்கள் பரவிக் காணப்படுகின்றன. நாம் பழகும் நபர்களுள் நல்லவர்கள் மட்டுமன்றி தீயவர்களும் இருப்பார்கள். நல்லவர்களோடு பழகுவதால் நல்ல பிரதிபலன் ஏற்படும். தீயவர்களுடன் பழகுவதால் தீய பிரதிபலன் கிடைக்கும். சில வேளைகளில் ஒருவரிடமே நல்ல, தீய விடயங்களும் காணப்படுகின்றன. உங்களைச் சுற்றியுள்ளவற்றை நன்கு ஆராய்ந்து செயற்படுவதனூடாக எதிரிகாலத்தை வளமாக்க உங்களுக்கு முடியும்.

உங்கள் வாழ்க்கைக்கு முக்கியமான நல்லவை எவை? நீங்கள் கைவிட வேண்டிய தீயவை எவை? என்பதை விளங்கிக் கொள்வோம்.

| சமூகத்தில் காணப்பட வேண்டிய சிறந்த செயற்பாடுகள் | அதனால் கிடைக்கும் பயன்கள் |
|---|---|
| கல்வி கற்றல். | அறிவு கிடைக்கும்.<br>புத்திஜீவியாகலாம்.<br>சிறந்த வாழ்க்கைக்கான அடித்தளம் கிடைக்கும். |
| சமயத்தைப் பின்பற்றுதலும் அதன் படி செயற்படுதலும். | ஒழுக்கமாக வாழ முடியும்.<br>உளவியல் ரீதியில் உற்சாகம் ஏற்படும்.<br>விரும்பத்தக்கவனாகுதல். |
| சரியான சுகாதாரப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்தல். | ஆரோக்கியமானவனாக இருத்தல். |
| பொருத்தமான ஆடையைத் தெரிவு செய்தல். | சமூகத்தின் பாரட்டுகளுக்கு உள்ளாதல் மன மகிழ்ச்சியுடன் இருத்தல். |
| தொடர்பாடல் ஊடகம் (தொலைபேசி, இணையம், அச்சு ஊடகம்) என்பவற்றை இனங்கண்டு பாவித்தல். | நேரம் மீதப்படல்.<br>அறிவும் பொழுதுபோக்கும் கிடைத்தல்.<br>சிந்திக்கும் ஆற்றல் அதிகரித்தல்.<br>அறிவு புதுபிக்கப்படுதல். |
| துன்பத்தின்போது கைவிடாத, தோல்வியின்போது தைரியமூட்டுகின்ற, வெற்றியின் போது மகிழ்வடைகின்ற சிறந்த பண்புள்ள நண்பர்களுடன் பழகுதல் | சுக துக்கங்களைப் பகிர்ந்து கொள்ளலாம்.<br>முன் மாதிரியும் அறிவுரையும் கிடைக்கும்.<br>பாதுகாப்புக் கிடைக்கும்.<br>சமூகப் பாராட்டுக் கிடைக்கும். |

**சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்படாத நடவடிக்கைகள்**

- பாடசாலையில் இருந்து இடைவிலகுதல்.
- பொருத்தமற்ற நண்பர்களின் சவகாசம்.
- வியாபார மோசடிகளில் ஈடுபடுதல்.
- மூடநம்பிக்கையுடன் செயற்படுதல்.
- வேண்டுமென்றே ஒழுக்கக்கேடான விடயங்களில் ஈடுபடுதல்.
- சட்டரீதியற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.
- கலாசாரத்துக்குப் பொருத்தமில்லாத வாழ்க்கை முறையில் வாழல்.
- பொருத்தமற்ற உணவுப் பழக்கம்.
- முறைகேடான ஊடக மற்றும் சமூக விரோத வலைத்தளப் பாவனை.
- தவறான வழிகளில் வருமானம் ஈட்டல்
- போதைவஸ்து பாவிப்போருடனான சகவாசம்.

அனைத்திலும் நன்மையும் தீமையும் பொதிந்துள்ளன. உதாரணமாகத் தொலைபேசியை நமக்கு பயன்மிக்க ஒரு கருவியாக பாவிக்கலாம். அதே கருவியை தேவையற்ற விதத்தில் பாவிப்பதால் மோசமான பிரதிபலன் கிடைக்கப் பெறுகின்றது. அது போன்றே கணினி, வானொலி, சினிமா ஆகிய அனைத்தையும் சிறப்பாக பாவிப்பதற்கும் அதில் தேவையற்றதை ஒதுக்கவும் முடியும். சந்தையில் உள்ள உணவு வகைகள் எமது உள்ளம் கவரும் வகையில் இருந்தாலும் அதிலுள்ள தரம், சுகாதாரப் பாதுகாப்பு என்பன உங்கள் உடம்புக்கு ஏற்புடையதா என்பதில் கவனம் செலுத்த வேண்டும். சமூகத்திலுள்ள பொருத்தமற்ற சில விடயங்கள் உங்களினதும் சமூகத்தினதும் நலனில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை மனதிற் கொண்டு செயற்பட வேண்டும்.

## செயற்பாடு 4

சிறந்த செயற்பாடுகளைச் செய்வதனால் ஏற்படும் நன்மைகளையும் சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்படாத செயற்பாடுகளைச் செய்வதனால் ஏற்படும் தீமைகளையும் அட்டவணைப்படுத்துக.

| சமூகத்தில் காணப்படுகின்ற சிறந்த செயற்பாடுகள் | சிறந்த செயற்பாடுகளால் ஏற்படும் நன்மைகள் | சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்படாத செயற்பாடுகள் | ஏற்றுக் கொள்ளப்படாத செயற்பாடுகளினால் ஏற்படும் தீமைகள் |
|---|---|---|---|
| 1. புத்தகம் வாசித்தல் | | | |
| 2. கவிதை எழுதுதல் | | | |
| 3. புதிய உற்பத்திகள் | | | |
| 4. விளையாடுதல் | | | |
| 5. முத்திரை சேகரித்தல் | | | |
| 6. இணையத்தளப் பாவனை | | | |
| 7. தொலைகாட்சிப் பாவனை | | | |
| 8. உள்நாட்டிலுள்ளவற்றை மதித்தல் | | | |
| 9. தேசிய மரபுரிமைகளைப் பாதுகாத்தல் | | | |

## 3.5 சமூக மரபுகளையும் சட்டதிட்டங்களையும் மதிப்போம்

நமது சமூக வாழ்வில் பல்வேறு சந்தர்ப்பங்கள் தொடர்பாக நிகழ்கின்ற சம்பிரதாயங்கள் போலவே சிறந்த நிருவாகத்தைக் கொண்டு நடாத்துவதற்குப் பல சட்டங்களும் உள்ளன. இந்த 2 பிரிவுகளிலும் சமூகத்தின் சிறப்பும், தனி நபர்களது சிறப்பும் தங்கி உள்ளன. பாட சாலைக் கொடியை ஏற்றுகின்ற சந்தர்ப்பத்திலும், பாடசாலைக் கீதத்தைப் பாடும் போதும், தேசிய கீதத்தைப் பாடும் போதும் நாம் அனைவரும் அதற்கு மதிப்பளிக்க வேண்டும். ஏனெனில் அது நமது சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சம்பிரதாயமாக இருப்பதாலாகும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் நாம் அனைவரும் சமூக சம்பிரதாயங்களையும், சட்டதிட்டங்களையும் மதிக்கின்றவர்களாகச் செயற்படுகின்றோம்.

வடமத்திய மாகாணத்தில் நவோதய மகாவித்தியாலயத்தில் 6 ஆம் வகுப்பு மாணவர்கள் ''சமூக சம்பிரதாயங்களையும் சட்டதிட்டங்களையும் மதிப்போம்'' என்ற தலைப்பின் கீழ் ஒரு வினா விடை செயற்பாடொன்றை நடாத்தினார்கள்.

இச் செயலமர்வில் மாணவர்களை **சூரியன், சந்திரன்** என்று இரு குழுக்களாகப் பிரித்து குடியியற் கல்வி, வரலாறு ஆகிய பாட ஆசிரியர்களால் வழிநடாத்தப்பட்டது.

சூரியன் குழு

சந்திரன் குழு



*சம்பிரதாயம் என்றால் என்ன? உதாரணம் 3 எழுதுக.*



தொன்று தொட்டு நிகழ்ந்து வருகின்றதும் சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டதுமான பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் என்பவற்றைச் சம்பிரதாயம் என்கின்றோம்

உதாரணம்

1. தமது சமூகத்திலுள்ள பழக்க வழக்கங்களை மதித்தல்
2. முதியோரை மதித்தல்
3. தமது கலாசாரப் பாரம்பரியங்களைப் பாதுகாத்தல்



அப்படியானால் சட்டம் என்று எதைச் சொல்வீர்கள்? உதாரணம் சில தருக.



தனியார் மற்றும் பொது சமூக சிறப்புக்காக பிரசைகளுடைய வெளிநடத்தைகளை நிருவகிக்க அரசால் கொண்டு வரப்பட்டுள்ள நிபந்தனைகளை 'சட்டம்' என அறிமுகப்படுத்த முடியும்.

உதாரணமாக: வீதிச்சட்டம், குற்றவியல் சட்டம் என்பன. எல்லா சட்டங்களுக்கும் தண்டனைகள் உள்ளன. சட்டம் எல்லோருக்கும் பொதுவானது.



சட்டங்களுக்குத் தண்டனைகள் உள்ளதாகச் சொன்னீர்களே, அப்படியாயின் தண்டனைகள் என்றால் என்ன?

தண்டனைகள் என்பது ஒருவர் சட்டத்தினை மீறும் போது நீதிமன்றத்தினால் அவருக்கு எதிராக விதிக்கப்படும் வரையறுக்கப்பட்ட ஆணையாகும்.





அவ்வாறெனில் சட்டத்தைப் பின்பற்றுவதால் நன்மைகளும் இருக்கும் தானே?



ஆம்   சட்டத்தினைப் பின்பற்றும்போது

1. சட்டத்தை மதிக்கின்ற சமூகம் உருவாகும்
2. அமைதியான சமூகச் சூழல் உருவாகும்
3. மக்கள் சட்டத்தின முன் சமமாக மதிக்கப்படுவர்

சட்டம்பற்றியும், சட்டத்தை மீறுவோருக்கான தண்டனை பற்றியும் கூறிய நீங்கள் பழக்க வழக்கம் பற்றியும் எனக்குச் சொல்லித்தருகிறீர்களா?





பழக்கவழக்கமென்பது, எம்மால் பின்பற்றப்படுகின்ற செயல்களாகும். இச் செயல்கள் கால சூழ்நிலைக்கேற்ப நாம் நடந்துகொள்ளும் விதத்தின் மூலம் இருபக்க விளைவுகளை ஏற்படுத்தும். அது சமூகத்தின் பார்வையில் சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ அமையலாம்.

உதாரணம் :

மதச் செயற்பாடுகள். பெற்றோரையும், ஆசிரியர்களையும் மதித்தல், நாகரீகமாகப் பேசுதல் போன்ற நல்ல விளைவுகளை ஏற்படுத்துவன பழக்கவழங்களாகும். நகம் கடித்தல், ஒத்துக்கேட்டல், பொருத்தமற்ற ஆடைகளை அணிதல் என்பன தீய பழக்க வழக்கங்களாகும்.



மரபுகளைப் பின்பற்றுவதால் எமக்கு ஏற்படும் நன்மைகள் 4 கூறுக.



1. அமைதியான சூழல் ஏற்படும்
2. அன்னியோன்னிய மதிப்பு ஏற்படும். பரஸ்பர புரிந்துணர்வு ஏற்படும்.
3. ஒவ்வொருவருக்கிடையிலும் அன்பும் நம்பிக்கையும் ஏற்படும்
4. பல்கலாசாரப் புரிந்துணர்வு ஏற்படும்

**அனைவரும் வினாவிடைப் போட்டியில் பங்கு பற்றினார்கள். அனைவரதும் விடைகளும் சரியாக இருந்தன. இந்தப் போட்டியில் இரு குழுக்களும் சமமான புள்ளிகளைப் பெற்றுள்ளதால் இரு குழுக்களும் வெற்றி பெற்றுள்ளன. அந்தப் போட்டியின் மூலம் சமூகத்தில் காணப்படும் சம்பிரதாயம், சட்டதிட்டங்கள் பற்றியும் அறிவைப் பெற்றிருப்பீர்கள்.**

சமூகத்தின் சம்பிரதாயங்களுக்கு மதிப்பளித்து அவற்றை பேணுவது நம் சகலரினதும் பொறுப்பாகும் அது சமூகத்தின் உயர்வுக்கும் காரணமாக அமையும்.

**செயற்பாடு 5**

1. சாரதிகளும், பாதசாரிகளும் பின்பற்ற வேண்டிய வீதிப்பாதுகாப்புச் சட்டம் தொடர்பான ஒரு கையேடு தயாரிக்க.
2. வீட்டிலும், பாடசாலையிலும் பின்பற்றுகின்ற சம்பிரதாயங்களைப் பட்டியல்படுத்துக.

## வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துவோம்

இயற்கை எமக்கு அளித்துள்ளவற்றை வளமாக இனங்காணலாம். நாம் பயன்படுத்துகின்ற வளங்கள்.

- சூரிய வெளிச்சம்
- காற்று
- நீர்
- காடுகள்
- கடல்
- பூமி
- கனிய வளம்
- வனவிலங்குகள்
- மலைகள்

இவ் இயற்கை வளம் மனித வாழ்வு நிலைத்திருப்பதற்கும் எமது அயற்சூழல் நிலைத்திருப்பதற்கும் உதவுகின்றது. அத்தோடு எமது பல்வேறு தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள சூழலிலுள்ள பல்வகையான வளங்களை பயன்படுத்துகின்றோம். காற்று, நீர், சூரிய ஒளி என்பன எமது உயிர்வாழ்விற்கு இன்றியமையாத இயற்கை வளங்களாகும்.

பூமி, காடுகள், கனிய வளம் என்பனவற்றைப் பயன்படுத்தி நமக்குத் தேவையான பலவற்றை உற்பத்தி செய்கின்றோம். உங்கள் தேவையை நிறைவேற்ற வீட்டிலும் பாடசாலையிலும் பயன்படுத்துகின்ற பல்வேறு உபகரணங்கள் பற்றி சிந்தித்துப் பாருங்கள். இவை அனைத்தும் சூழலிலுள்ள வளங்களைப் பயன்படுத்தி மனிதனால் உற்பத்தி செய்யப்பட்டவை ஆகும்.

உதாரணம் :

மரப் பொருட்கள்
கண்ணாடிப் பொருட்கள்
பீங்கான் பொருட்கள்
ஓடு, செங்கல்

இப்படத்திலுள்ள மோட்டார் வாகனம், கதிரைகள் என்பவற்றை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள வளங்கள் பற்றி சிந்தித்துப் பாருங்கள்.






உரு 3.2

## வளங்களை ஏன் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும்?

நாம் பயன்படுத்துகின்ற அதிகமான வளங்கள் குறைவடையக் கூடியவை என்பது உங்களுக்கு தெரியுமா?

நீர் எமக்கு அவசியமான ஒரு வளம் ஆகும். குடிப்பதற்கும், குளிப்பதற்கும் ஏனைய அன்றாடத் தேவைகளுக்கும் மேலும் உணவுப் பயிர் உற்பத்தி கைத்தொழில் உற்பத்தி எனப் பல்வேறு தேவைகளுக்கு நீர் பயன்படுகிறது. உலகில் அதிகமான பகுதி நீரால் சூழப்பட்டிருந்தாலும் குடிப்பதற்குப் பொருத்தமான நீர் மிகக் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றது. மனிதர்களின் பல்வேறு செயற்பாடுகளின் காரணமாக நீர் மாசடையும் சந்தர்ப்பங்களை தினமும் எமக்கு அறியக் கூடியதாகவுள்ளது. ஆனாலும் அவை பூமியில் தோன்றுவதற்கு ஆயிரக்கணக்கான வருடங்கள் எடுக்கும். அதனால் நாம் நீரை சிக்கனமாகப் பயன்படுத்தவும் மாசடைவதைத் தடுப்பதற்கும் ஆர்வம் காட்ட வேண்டும்.

நிலமானது மட்டுப்படுத்தப்பட்ட ஒரு வளமாகக் காணப்படுகின்றது. மலைகள், சதுப்புநிலம் என்பன தவிர மனிதன் குடியிருப்பதற்கும், உணவுப் பயிர் உற்பத்தி செய்வதற்கும், ஏனைய தேவைகளுக்கும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே நிலம் காணப்படுகின்றது.

எமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளப் பயன்படுத்தப்படும் கனிய வளம், தங்கம், நிலக்கரி, இரும்பு, செம்பு, மணல், களிமண் ஆகிய வளங்களும் மிகவும் அரிதானவையே. அது போலவே அவ் வளங்களைப் பயன்படுத்தும்போது, அவை குறைவடையும். இதனை எளிய உதாரணத்தின் மூலம் தெளிவுபடுத்தலாம். மோட்டார் வாகனத்துக்கு எரிபொருள் நிரப்பும்போது எரிக்கப்படுகின்ற எரிபொருள் எந்த வகையிலும் மீளக்கிடைக்காது. நிலக்கரி போன்றவைகளும் அவ்வாறே குறைவடையும். இதனால், அந்த வளங்களை சிக்கனமாகப் பாவிக்க வேண்டும்.

கைத்தொழில் துறையில் ஏற்படுகின்ற முன்னேற்றமும் வளப் பயன்பாட்டினை அதிகரிக்கச் செய்கிறது. மேலும் மக்கள் தொகைப் பெருக்கம் மனிதத் தேவையினை அதிகரிக்கச் செய்கிறது. இதனால் வளப்பயன்பாடும் அதிகரிக்கின்றது.

பூமியில் வளங்கள் சமமாகக் காணப்படுவதில்லை. தற்போது, இலங்கையில் எண்ணெய் வளம் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. எனினும் நிலக்கரி இலங்கையில் இது வரையிலும் கண்டுபிடிக்கப்படவில்லை இதனால், சில வளங்கள் வேறு நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட வேண்டியுள்ளது. இதற்குப் பெருந்தொகைப் பணமும் செலவாகிறது.

எமது தேவைகளை நிறைவேற்றும்போது, வளங்களைச் சிக்கனமாகப் பாவிக்கப் பழகிக் கொள்ள வேண்டும். அவ்வாறே எதிர்கால சந்ததிக்கும் அவற்றை சேமித்து வைப்பதும் நமது கடமையும் பொறுப்பும் ஆகும்.

வளங்களின் வீண்விரயத்தைத் தவிர்ப்பதற்கு, பாடசாலை மாணவன் என்ற வகையில் உங்களால் பங்களிப்புச் செய்யக் கூடிய முறைகள்.

| **வளம்** | **வீண்விரயத்தை தவிர்க்க உங்களால் முடியுமானவைகள்** |
|---|---|
| நீர் | • தேவையான அளவுக்கு நீர்க் குழாயை திறத்தல்<br>• நீர்க்குழாயை பாவித்த பிறகு நன்றாக மூடி விடல்<br>• கழுவுவதற்கு நீரை எடுக்கும்போது பாத்திரத்தைப் பாவித்தல் |
| மின்சாரம் | • பாவிக்கப்படாத சந்தர்ப்பத்தில் மின் உபகரணங்களில் மின் இணைப்பைத் துண்டித்து விடல்.<br>• மின் அழுத்தி பாவிக்கும்போது முடியுமானவரை ஒரே தடவையில் உடுப்புகளை அழுத்துதல்<br>• செயற்திறன் கூடிய மின் குமிழ்களைப் பாவித்தல் |
| மேசை, கதிரை போன்ற பாடசாலை உபகரணங்கள் | • துருப்பிடிக்காமல் இருக்க நிறப் பூச்சுக்களைப் பூசுதல்<br>• நீரில் நனையாது, ஈரலிப்பு ஏற்படாவண்ணம் பாதுகாத்தல் |

**வளங்களின் வீண்விரயத்தைத் தடுப்பதால் ஏற்படும் நன்மைகள்**

- பணம் மீதப்படல்
- எதிர்கால சந்ததிக்கு அவர்களின் தேவையை நிறைவேற்றுவதற்காக வளங்களைச் சேமித்தல்
- சூழலுக்கு ஏற்படும் இழப்புகளைக் கட்டுப்படுத்தல்

**செயற்பாடு 6**

கீழ்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க

| **உங்கள் வீட்டில் பாவிக்கப்படும் உபகரணங்கள் 3 தருக.** | **அதை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள வளங்கள்** |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |

## 3.7 பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்போம்

அன்றாட வாழ்க்கையில் எமது பல்வேறு தேவைகளை நிறைவேற்ற வேண்டி ஏற்படும். உணவு, வீடு, உடை, காற்று என்பன எமது அடிப்படைத் தேவைகள். கல்வி கற்றல், நோய்க்குச் சிகிச்சை பெறுதல், பயணம் செய்தல், ஓய்வைக் கழித்தல் என்பனவும் எமது தேவைகளாகும். இந்தத் தேவைகளை நிறைவேற்ற நீங்கள் கடைப்பிடிக்கும் வேலை ஒழுங்கினை சற்று சிந்தித்துப்பாருங்கள். நீங்கள் கல்விகற்பதற்காகப் பாடசாலை அமைக்கப்பட்டுள்ளது. சிகிச்சை பெறுவதற்காக வைத்திய சாலையும், போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக பஸ் சேவையும் நடத்தப்படுகின்றது. ஓய்வைக் கழிப்பதற்காக பல்வேறு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இவ்விதமாக உங்கள் பல்வேறு தேவைகளை நிறைவேற்ற அமைக்கப்பட்டுள்ள நிறுவனங்களையும், நடத்துகின்ற சேவைகளையும் நினைத்துப் பாருங்கள்.

அவ்வாறான சேவைகளுக்குரிய கட்டடங்கள், உபகரணங்கள், இயந்திரங்கள் என்பன பொதுச் சொத்துகளாகும்.

அனைத்துப் பிரசைகளுடைய பங்களிப்பில் உருவாக்கப்பட்டதும், அனைத்துப் பிரசைகளுக்கும் பொதுப் பயன்பாட்டைப் பெறக் கூடியதுமான சேவை நிலையங்களும் அவற்றுக்குரிய உபகரணங்களும் பொதுச் சொத்துகளாகும்.

**பொதுச் சொத்துக்களின் தன்மைகள்**

- மக்களின் நலனையும் மக்களுக்காகச் சேவை செய்வதையும் நோக்காகக் கொண்டு செயற்படுதல்.
- இலாப நோக்கம் கருதாது அரசாங்கத்தால் வழங்கப்படுதல்.
- பொதுவாக அனைவராலும் பாவிக்க முடியுமாக இருத்தல்.



உரு 3.4



உரு 3.5

உங்கள் பாடசாலையிலுள்ள கட்டடங்கள், மேசைகள், கதிரைகள், கணினி இயந்திரங்கள், நூலகப் புத்தகங்கள், ஆய்வுக்கூட உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள் ஆகிய அனைத்தும் பொதுச்சொத்துக்கள் ஆகும். அவை உங்கள் கற்றல் தேவைகளை நிறைவேற்ற அரசால் வழங்கப்பட்டவைகளாகும். உங்கள் கல்வித் தேவைக்காகவும் உங்கள் திறமைகளை விருத்தி செய்வதற்காகவும் இவற்றைப் பயன்படுத்துகின்ற உரிமை உங்களுக்குண்டு. அது போலவே அவற்றைக் கவனமாகப் பயன்படுத்தி, எதிர்கால மாணவ சமூகத்திற்கு அந்த வளங்களைக் கொடுப்பது உங்கள் பொறுப்பும் கடமையும் ஆகும். இப்பாட நூலும் கூட பொதுச்சொத்தேயாகும். இதனை கவனமாகப் பயன்படுத்தி மீண்டும் உங்கள் சகோதர மாணவர்கள் பயன்படுத்தும் வகையில் கையளிப்பது உங்கள் பொறுப்பாகும்.

ஒரு வைத்தியசாலையில் உள்ள கட்டடங்கள், உபகரணங்கள் மற்றும் பல்வேறு பொருட்கள் எங்களுக்குச் சேவை வழங்கப் பயன்படுகின்ற பொதுச்சொத்துக்களாகும். அவற்றை பாதுகாப்பதும் அந்த இடத்தைச் சுத்தமாக வைத்திருப்பதும் அதிலிருந்து சேவையினைப் பெறுபவர்களின் கடமையாகும். இலங்கையில் வீதி நவீனமயப்படுத்தலுக்கும், அதிவேக நெடுஞ்சாலை அமைப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. விரைவாகவும் பாதுகாப்பாகவும் பயணம் மேற்கொள்ளவும் பொருள்களைக் கொண்டு செல்வதற்கும் வசதிகளை ஏற்படுத்துவது அதன் நோக்கமாகும்.

பிரதான பாதையிலுள்ள பாதுகாப்பு வேலி, பாதை, சமிக்ஞைப் பதாகைகள் ஆகியன அமைக்கப்பட்டிருப்பது பாதையைப் பயன்படுத்துபவர்களின் பாதுகாப்புக் கருதியாகும். அவற்றை பாதுகாப்பது நாட்டு மக்கள் என்ற வகையில் எம் எல்லோருடைய கடமையாகும்.

அதுபோலவே பிரதான பாதைகளில் போக்குவரத்தினைத் தடை செய்யும் வண்ணம் வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுவதை அனுமதிக்க முடியாது. மேலும் வீதியைப் பயன்படுத்தும் சாரதிகளும், பாதசாரிகளும் தங்களுடைய பாதுகாப்பையும் ஏனையவர்களுடைய பாதுகாப்பையும் விசேடமாக கவனத்தில் கொள்ள வேண்டும். நம் அன்றாடத் தேவைகளை வசதியாக நிறைவேற்றிக் கொள்ள மின் சக்தியைப் பயன்படுத்துகிறோம். மின் உற்பத்தி நிலையம், மின்சாரம் வழங்கப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் ஆகியவற்றை பாதுகாப்பதும் அனைவரினதும் கடமையாகும்.

பஸ் வண்டிகள், பஸ் தரிப்பிடம், புகையிரத நிலையங்கள், விளையாட்டு மைதானங்கள், சிறுவர் பூங்கா, நூலகங்கள் ஆகியவைகளும் பொதுச் சொத்துக்களே. அந்தச் சொத்துக்களைப் பாதுகாப்பதிலும் அந்த இடங்களைச் சுத்தமாக வைத்திருப்பதிலும் சிறந்த பிரசை என்ற வகையில் பங்களிப்புச் செய்ய வேண்டும். கிராமப் பகுதிகளில் பொதுத் தேவைகளை நிறைவேற்ற பொதுக் கிணறுகள், குழாய்க் கிணறுகள், குளங்கள் மற்றும் நீர்பாசன வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக சமூகத்தின் பொதுத் தேவைகளை நிறைவேற்ற வசதியாக அவற்றிற்குரிய உடைமைகள் பலவும் இருக்கலாம். அவற்றை பாதுகாப்பாகப் பயன்படுத்துவது ஒவ்வொரு நற்பிரஜைக்குமுரிய குணாம்சமாகும்.

### பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்பதால் ஏற்படும் பயன்கள்

- மக்களுக்குத் தேவையான சேவைகளைச் சிறப்பாக வழங்க முடியும்.
- புதுப்பித்தலுக்கும் நிர்வகித்தலுக்குமான செலவு மீதப்படுத்தப்படுவதால் அந்தப் பணத்தை நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்த முடியும்.
- சிறந்த வாழ்க்கை அமைப்பைப் பெறத் தேவையான வசதிகளை முன்னேற்ற முடியும்.
- அவற்றை எதிர்கால சந்ததிக்கும் பயன்படுத்தக் கூடியதாக பாதுகாக்க முடியும்.

### பொதுச் சொத்துகளைப் பாதுகாப்பதற்குப் பின்பற்றக் கூடிய வழிவகைகள்

- பொதுச் சொத்துகளை பாதுகாப்பது எம் எல்லோருடைய பொறுப்பும் கடமையும் என்ற அடிப்படையில் செயற்படுதல்
- பொதுச் சொத்துகளைத் தவறான முறையில் பயன்படுத்துவதிலிருந்து தவிர்ந்திருத்தல்
- பயன்படுத்தும்போது உடைதல், சிதைவடைவதிலிருந்து பாதுகாத்தல்.
- பொதுச் சொத்துகளுக்குச் சேதம் விளைவிக்கும் சந்தர்ப்பங்களை அறிந்து கொண்டால் அது பற்றி குறித்த நிறுவனங்களுக்குத் தெரிவித்தல்
- பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிப்பது சட்டப்படி தண்டனைக்குரிய குற்றம் என்பதால் அவற்றை பாதுகாக்க நடவடிக்கை எடுத்தல்
- பொதுச் சொத்துக்களின் முக்கியத்துவத்தை ஏனையவர்களுக்கு தெரியப்படுத்தல்.
- ஏனையவர்களுக்கு உபயோகிப்பதற்கு சந்தரப்பம் வழங்குதல்
- பொதுச்சொத்துக்களை தனிப்பட்ட முறையில் கையாளாமல் இருத்தல்.

**செயற்பாடு 7**


*1. கீழ்வரும் அட்டவணையில் I, II, III, IV என உள்ள தலைப்புகளை நன்றாக வாசித்து அட்டவணையைப் பூரணப்படுத்துக.*

| நிரல் I | நிரல் II | நிரல் III | நிரல் IV |
|---|---|---|---|
| நீங்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொதுச் சொத்துக்கள் | பொதுச் சொத்துக்களால் உங்களுக்குக் கிடைக்கும் சேவைகள் | பொதுச் சொத்துக்கள் சேதமடைந்தால் உங்களுக்கேற்படும் பாதிப்புக்கள் | பொதுச் சொத்துக்களைப் பாதுகாக்க உங்களால் எடுக்கக் கூடிய நடவடிக்கை |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

2. பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை உணர்த்துகின்ற சுவரொட்டியொன்று வடிவமைக்க.
3. பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படும் சந்தர்ப்பங்களில் அது பற்றி அறிவிக்கக் கூடிய பொது நிறுவனங்களின் தொலைபேசி இலக்கக் கோவையினை தயாரிக்குக.
4. உங்கள் பாடசாலையின் நீர்க்குழாயிலிருந்து நீர்க் கசிவை அறிந்து அவற்றைத் தவிர்ப்பதற்குரிய முறைகளை உங்களின் குடியியல் கல்விக்குப் பொறுப்பான ஆசிரியருக்குத் தெரிவிக்கவும்.
5. பாடசாலையில் தெரிவு செய்யப்பட்ட இடத்தில் பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தை அறிந்து அதைக் குறைப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றித் தெரிவிக்கவும்.

**சூழலைப் பாதுகாப்போம்**

எம்மைச் சுற்றியுள்ள அனைத்தும் எமது சூழலாகும். கடல், நீர் வீழ்ச்சி, நதிகள், வன விலங்குகள், வளிக்கோலம் இயற்கையாக வளர்ந்துள்ள மரங்கள் என்பன இயற்கைச் சூழலுக்குரியனவாகும். இவை இயற்கையின் கொடைகளாகும் அவை மனிதனின் தலையீடுகள் இன்றி உருவானவைகள். **மனிதனின் தலையீடின்றி இயற்கையாகவே உருவான சூழல் பௌதீகச் சூழலாகும்.** பௌதீகச் சூழலுக்குரிய அழகான சில இடங்கள் இங்கு தரப்பட்டுள்ளன.



உரு 3.6

மனிதனும் சூழலின் ஒரு அங்கமாகும். சுற்றுச் சூழலில் மனிதனால் ஏற்படுத்தப்பட்ட பலவற்றை உங்களால் காண முடியும். பூங்கா, கட்டிடம், தெருக்கள், குட்டைகள், குளங்கள் என்பவற்றைக் குறிப்பிடலாம். அவற்றை உருவாக்கப்பட்ட சூழல் என்பர்.

## மனித தலையீட்டுடன் நிர்மாணிக்கப்பட்டவை ஆக்கப்பட்ட சூழலுக்குரியனவாகும்

இவ்வாறாக நிர்மாணிக்கப்பட்டவற்றுள் சில பின்வறுமாறு



உரு 3.7

எமது தேவைகளை நிறைவேற்றுவதற்காக நாம் சூழலையும் அதிலுள்ள வளங்களையும் பயன்படுத்துகின்றோம். மக்கள் தொகைப் பெருக்கம், தேவைகளின் அதிகரிப்பு என்பவற்றால் சூழலுக்கு எம்மால் உள்ள அச்சுறுத்தல் அதிகரித்துச் செல்கிறது.

இதனால் நீர், நிலம் வளிமண்டலம் என்பவற்றை உள்ளடக்கிய சூழல் பெருமளவில் பாதிப்பு அடைகின்றது. சூழல் மாசடைதலுக்குக் காரணிகளாக அமைகின்ற சிலவற்றை நோக்கலாம்.

| சூழல் பகுதி | மாசடைதலுக்கான காரணம் |
|---|---|
| நீர் | • கழிவுப் பொருட்கள் நீரில் கலத்தல்<br>• பயிர்ச் செய்கைக்கு அதிக இரசாயனப் பசளை பாவித்தல்<br>• கிருமி நாசினிப் பாவனை |
| நிலம் | • கழிவுப் பொருட்கள் முறையற்ற விதத்தில் வெளியேற்றுதல்<br>• பயிர்ச்செய்கைக்கு இரசாயனப் பசளை பாவித்தல்<br>• கிருமி நாசினிப் பாவனை<br>• காடுகளை அழித்தல் |
| வளி மண்டலம் | • தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் புகை<br>• வாகனங்களிலிருந்து வெளியாகும் புகை |
| ஒலி | • ஒலி பெருக்கியிலிருந்து வெளியாகும் அதிக சத்தம்<br>• வாகனத்தின் ஊதுகுழல் சத்தம்<br>• வெடிப்புக்களால் ஏற்படும் சத்தம் |









உரு 3.8

சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக நீங்கள் பலமுறை கேட்டிருப்பீர்கள். மனிதனால் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகளால் குடிப்பதற்குச் சுத்தமான நீரை வழங்குவதில் கூட தற்காலத்தில் சிக்கலாக உள்ளது. மாசடைந்த நீரைப் பாவிப்பதால் பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன. நீர் மாசடைவதால் மீன்கள் உட்பட நீர்வாழ் உயிரினங் களும் அழிகின்றன.

வளி மண்டலம் மாசடைவதால் பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன. வளி மண்டலத்தின் வெப்பம் அதிகரித்தல், ஓசோன் படையில் துளை விழுதல் போன்ற பயங்கர விளைவுகளுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படும்.

## ஒரு சிறந்த பிரசை என்ற வகையில் சூழலைப் பாதுகாக்க பங்களிப்புச் செய்யக் கூடிய வழிவகைகள்

- சூழல் தொடர்பாக விழிப்பாக இருத்தல்.
- கழிவுப் பொருட்கள் நீரில் கலத்தலைத் தடுத்தல்.
- நீர்த் தேக்கங்களைச் சுத்தமாக வைத்திருக்க உதவியாயிருத்தல்.
- இரசாயனப் பசளைக்குப் பதிலாக இயற்கைப் பசளையைப் பயன்படுத்தல்.
- கிருமி நாசினிகளுக்குப் பதிலாக உள்நாட்டு முறைகளைப் பின்பற்றுதல்
- சூழலுக்குக் கேடு விளைவிக்கும் கழிவுப் பொருட்களைப் பொருத் தமான முகாமைத்துவத்தின் ஊடாக வெளியேற்றுதல்.

  உதாரணம் : பாவனையிலிருந்து நீக்கப்பட்ட கணினி உதிரிப் பாகங்கள் எரிந்த மின் குமிழ், கையடக்கத் தொலைபேசி, மின்கலம் போன்றன.
- நிலத்தில் திட்டமிடப்படாமல் கழிவுப் பொருட்களை அகற்று வதிலிருந்து தவிர்ந்திருத்தல்.
- கழிவுப் பொருட்களை மீள் சுழற்சி செய்வதற்காகத் தரப்பட்ட வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.
- உக்கிப் போகின்ற கழிவுப் பொருட்களை இயற்கைப் பசளைக்காகப் பயன்படுத்துதல்.
- ஒலிபெருக்கி, வானொலி ஆகியவற்றைப் பயன்படுத்தும்போது பிறருக்கு இடைஞ்சல் ஏற்படாதவாறு பயன்படுத்துதல்.

சூழலின் பங்குதாரர்கள் என்ற வகையில் சூழல் பாதுகாப்புக்கு பங்களிப்புச் செய்வது அனைவரதும் கடமையும் பொறுப்புமாகும். அவ்வாறு செய்வ தால் அழகான ஒரு சூழலில் வாழ முடியும். அத்தோடு அந்த அழகிய இரம்மியமான சூழலை எதிர்காலத்திற்கு விட்டுச் செல்ல எமக்கு முடியுமாக இருக்கும்.

**செயற்பாடு 8**

1. பாடசாலைச் சூழலில் அபிவிருத்தி செய்ய வேண்டிய இடத்தைத் தெரிவு செய்து, அந்த இடத்தை ஒழுங்குபடுத்துவதற்கான திட்டத்தை முன் வைக்கவும்.
2. உங்கள் ஆசிரியர் அல்லது ஆசிரியையின் அறிவுறுத்தலைப் பெற்று சக மாணவர்களின் ஒத்துழைப்போடு அந்தத் திட்டத்தைச் செயன் முறைப்படுத்த நடவடிக்கை எடுக்கவும்.

### எமது சுதேசத்துவத்தை பெருமையுடன் பாதுகாப்போம்

''எமது தாய் நாடு'' என்ற பெயரில் நடைபெற்ற ரூபவாஹினிக் கலந்துரையாடல் ஒன்றில் சொல்லப்பட்ட சில கருத்துக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

''இலங்கை ஒரு ஆச்சரியமான நாடு. பனி படருவதைத் தவிர உலகின் எந்தவொரு நாட்டிலும் உள்ள காலநிலை இலங்கையில் உள்ளது. அதனால் குளிர்ப் பிரதேசங்களில் விளையும் எந்தப் பயிரையும் நுவரெலியப் பிரதேசத்தில் செய்கை பண்ண முடியும். யாழ்ப்பாணம், மன்னார் பிரதேசங் களில் வெப்பமான காலநிலை உள்ளது. ஏனைய பிரதேசங்களில் இடை வெப்பக் காலநிலை நிலவுகிறது. நதிகள், வாய்க்கால், குளம் குட்டைகள் மட்டுமன்றி பல நீர் வீழ்ச்சிகளும் காணப்படுகின்றன.''

''அமெரிக்காவின் நியுயோர்க் நகரத்தில் இருந்து 30 கிலோமீற்றர் தூரம் வரை பச்சை நிறத்திலான ஒரு மரத்தையேனும் காணமுடியாது. அதற்கப்பால் உள்ள மர இலைகளும் வருடத்தின் பாதியில்தான் பச்சை நிறம் ஆகும்.

வருடம் முழுவதும் அவர்களுக்கு வெயில் உள்ள பகற்பொழுது கிடைப்பதில்லை. அந்த நாட்டவர்களுக்கு பச்சை நிறம் நிரம்பிய நமது நாட்டைப் பார்க்கும்போது கண்களால் நம்ப முடிவதில்லை.''

''சில நாடுகளில் அதிக வெப்பத்தால் உயிரினங்கள் இறக்கின்றன. அதே போல், அதிக குளிரினாலும் இறக்கிறார்கள். ஆனால் நமது நாட்டில் அளவுக்கதிகமான வெப்பமும் பொறுக்க முடியாத குளிரும் இல்லை. மனிதர்கள் இறந்து விடும் கால நிலையும் கிடையாது. மனிதர்களை வாழவைக்கின்ற காலநிலை மட்டுமே உள்ளது.''

''நமது நாட்டில் வாழை, பப்பாசி, திராட்சை போன்ற எல்லாப் பழங்களும் வருடம் முழுவதும் கிடைக்கும். தென்னை, கமுகு மரங்களில் எல்லா நாளும் காய்கள் இருக்கும். எல்லா நாளும் ஒவ்வொரு நிமிடமும் குருவிகளின் சப்தத்தைக் கேட்க முடியும். கறுவா, ஏலம், கராம்பு, தென்னை, இறப்பர், கொக்கோ, மிளகு, வெற்றிலை எல்லா காலத்திலும் பயிரிட முடியும். இங்குள்ள முழுக் காடுமே மருந்துக் களஞ்சியம் எனலாம். மாணிக்கம், இல்மனைட், பொசுபேட் போன்ற கனியப் பொருட்கள் இருக்கின்ற பொன் நிலம் எமக்கு இருக்கிறது. எனவே நாம் பிறந்திருப்பது இத்தனை வளங்களும் கொண்ட ஒரு பொன் விளையும் பூமியிலாகும்.''

எமது முன்னோர்கள் செய்த அரிய படைப்புகள் ஏராளம். அந்த படைப்புகளை நவீன தொழினுட்பம் நிறைந்த இந்த நாட்களில் கூட உலகம் கண்டு புதுமைப்படுகிறது. உதாரணம் அரசர்களால் நிர்மணிக்கப்பட்ட பண்டைய குளங்கள்.

இலங்கையின் இயற்கை வளங்கள், நாடுபூராகவும் பரவிக் காணப்படுகிறன என்பதனை வர்ணிக்கும் ஒரு பாடலை நாம் பாடி மகிழ்வோம்.

இலங்கை என்பது நம் தாய் திருநாடு எழில் மிகுந்த
இயற்கை வளம் நிறைந்த நந்நாடு மாணிக்க முத்துகளும்
மாண்புறு காட்சிகளும் மனதைக் கவர்ந்திடும் நாடு

யாழ்ப்பாணம் என்று சொன்னால் தேன்சுவை ஊறும்
பனைவளமும் புகையிலையும் ஒன்றாக வளரும் கந்தனின்
நல்லூர் கண்டு கடல் வளம் நிறைய உண்டு கரை வளம்
பெருகுது அங்கு

கோணேஸ்வரர் கோயில் கொண்ட திருமலையூரில்
இராவணேசன் ஞாபகமும் வருகுது அங்கே
கன்னியா வெந்நீர் ஊற்றும் கலங்கரை ஒளி விளக்கும்
இயற்கை துறைமுகந்தானே

மீன்பாடும் தேன்நாடு கிழக்கிலே உண்டு
வீரநகர் வன்னியிலே வேளாண்மை உண்டு
மடுமலை நாயகியும் மன்னாரில் பவனி வரும்
மங்காத காட்சியும் உண்டு

நுவரெலியா பொகவதந்தலா அற்றன் சாமிமலை
தேயிலையாய் பொன் விளையும் பூம்பொழில் சோலை
சிவனொளி பாதமலை தலதா மாளிகையும்
தெரிந்திடும் மாமலை நாட்டில்

சீகிரியா பொலநறுவை அநுராபுரமும்
தம்புள்ள வில்பத்து கதை பல சொல்லும்
கந்தளாய் இனித்திடுதே கல்லோயா மயக்கிடுதே
கண்களால் காண அழைக்குதே


தலைநகராம் கொழும்பின் நாகரிகமும் கண்டு
மின்மினியோ மினிமினியோ காட்சிகள் உண்டு
காணாத புதுமைகளைக் காணலாம் மாநகரில்
பாரீர் கொழும்பு நகரையே

நன்றி: ஏ.இ. மனோகரன்



உரு 3.9

அநுராதபுரத்தில் கலாவாவியின் அருகில் அமைந்துள்ள 39 அடி உயரமும் 10 அடி அகலமும் கொண்ட அவுக்கண புத்தர் சிலை உலகிலுள்ள மிகச் சிறப்பு மிக்க கலைப் படைப்பாகும். பெருங்கல்லைக் கூரிய கல் ஆயுதத்தால் வெட்டி, செதுக்கி, கருங்கல்லுக்கு உயிரோட்டம் வழங்கும் அளவுக்கு சிற்ப ஞானம் உள்ள கலைஞர்கள் இலங்கையில் வாழ்ந்துள்ளனர். இலங்கை மக்களின் வணக்க வழிபாடுகளுக்கும், கௌரவத்துக்கும் பாத்திரமான அவுக்கண புத்தர் சிலையைப் போலவே, அனுராதபுரத்தில் மகாமேக வனத்தில் அமைந்துள்ள சமாதிச்சிலை, சந்திரவட்டக்கல், உட்பட பல கலைப்படைப்புகள் எம்மிடம் உள்ளன.



உரு 3.10



உரு 3.11

உலக மரபுரிமைகளாகக் கணிக்கப்படுகின்ற சீகிரிய அபிமானம்மிக்க கடந்த காலத்தை நினைவூட்டுகின்ற நினைவுப்படிவங்கள் ஆகும். அன்று இலங்கையர்களிடம் இருந்த நீர்பாசன தொழில் நுட்ப அறிவானது, நவீன தொழில் நுட்பத்துக்கு முன்னால் தோற்றுவிடவில்லை என்பதற்கு

ஏராளமான சான்றுகள் உள்ளன. வரண்ட பிரதேச மக்களின் வாழ்வில் விவசாயம் உட்பட, ஏனைய பல தேவைகளுக்காக அமைக்கப்பட்ட வாவிகள், பெரும் சமுத்திரங்களைத் தோற்கடிக்கக் கூடியதாகும். கலாவாவி, பராக்கிரம சமுத்திரம், மின்னேரிய போன்ற வாவிகள் இதற்கு உதாரணங்களாகும். அது போன்ற ஆயிரக்கணக்கான வாவிகள் எமது நாட்டுக்குள் காணப்படுவது நமது முன்னோர்களின் தொழில் நுட்ப அறிவு மற்றும் இரு கரங்களின் சக்தி ஆகியவற்றை எடுத்துக்காட்டுகிறது. கலா வாவியிலிருந்து திசா வாவி வரை நீரைக் கொண்டு செல்கின்ற ஜய கங்கை, நீர்ப்பாசனத் தொழில் நுட்பத்தின் அரிய பாடப்படும். 17 மைல் நீளமும் 40 அடி அகலமும் கொண்ட ஜய கங்கையின் சரிவு ஒரு மைலுக்கு 6 அங்குல மத்திய சரிவாகும். அந்த தொழில்நுட்பம் மிக்க படைப்புகளின் உரிமையாளர்கள் நாங்களே. அது போன்ற தேசிய மரபுரிமைகளை அன்று போல இன்றும் படைப்பதும் பாதுகாப்பதும் எமக்குரிய பொறுப்பாகும்.

**தேசிய சலாசாரம் :**

- மதங்களும் மத வைபவங்களும்.
- மத ரீதியில் உருவாக்கப்பட்ட விசேட கலைப்படைப்புக்கள்
  உதாரணம் - வழிப்பாட்டுத் தலங்கள், சிலைகள்
- இலக்கிய புத்தகங்கள், கிராமிய இலக்கியங்கள்
- தேசிய வைத்தியம், தேசிய பழக்க வழக்கம்.
- நீர்வள நாகரிகமும் அதற்குரிய வாவிகளும் அணைக்கட்டுகளும்.



உரு 3.12

**தேசிய வளங்கள்**

- கனிய வளங்கள்
  (தங்கம், மாணிக்கம், களிமண், மணல், பொஸ்பேட் என்பன)
- மிருகங்கள், நீர் வீழ்ச்சிகள், வித விதமான மலர்கள் மற்றும் விசேட தாவரங்கள்
- தானியங்களும் மரக்கறியும்
- பழ வகைகள்
- வேறு பயிர்ச் செய்கைகள்
- இயற்கைத் துறைமுகம்



உரு 3.13

**தேசிய உற்பத்தி**

- புடைவை
- பீங்கான் பொருட்கள், செங்கல் ஓடுகள்
- பித்தளைப் பொருட்கள், மரப் பொருட்கள்
- முகமூடிகள்
- பன் பொருட்கள் (ஓலை)
- பலகார வகைகள்
- தேசிய நிர்மாணங்கள்



உரு 3.14

தேசியத்தையும் தேசிய மரபுரிமைகளையும் இனங்காண்பதால் நமது நாட்டின் வளங்களின் முக்கியத்துவம் நமக்குப் புரியும். நமது உற்பத்திகளை மதிப்பதற்கு நாம் அவற்றைப் பற்றிய தெளிவைப் பெற வேண்டும். எமது அன்றாட உணவிலும் பாவனையிலும் தேசிய உற்பத்திகளுக்கு முன்னுரிமை அளிப்பது கடமையாகும். உதாரணம் கோதுமை உணவுகளைத் தவிர்த்தலும் அரிசிமாவு உணவுகளை அன்றாடம் பயன்படுத்தலும்.

**தேசிய உற்பத்தியும் தேசிய வளங்களையும் மதிப்பதிலுள்ள முக்கியத்துவமும்**

- தேசம் பற்றிய அபிமானத்தை ஏற்படுத்திக் கொள்வது
- தேசிய வளங்களை முடிந்தவரை பயன்படுத்தக் கூடியதாக இருத்தல்
- தேசியவளங்களைக் கொண்ட உற்பத்திகளில் ஈடுபடுலும், அதன் வாயிலாக பிரதேசத்தின் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதலும்.
- வெளிநாடுகளுக்குச் செல்கின்ற பணத்தை உள் நாட்டில் மீதப்படுத்தல்.
- புதிய உணவு வகைகளின் உற்பத்திகள் அதிகரித்தல்.
- இலங்கைப் பாவனையாளர்களுக்குக் குறைந்த விலையில் பொருட் களைப் பெறக் கூடியதாக இருத்தல்.
- பொருட்களின் நம்பிக்கைத் தன்மையை உறுதிப்படுத்தல்.
- உற்பத்தியாளருக்கும் பாவனையாளருக்கும் தேசிய உற்பத்தி பற்றிய அபிமானம் ஏற்படுதல்.

ஒரு நாட்டைக் கட்டி எழுப்புவதற்கு இலங்கையர்கள் என்ற அடிப்படையில் நாம் நமது தேசியத்தை மதித்து நடப்பதன் முக்கியத்துவத்தை நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள். நாம் பெற்ற மரபுரிமைகளை கடந்த காலத்திலிருந்து பிந்திய சந்ததிக்கும் சொந்தமாக்கிக் கொடுப்பதற்கும் அவற்றைப் பாதுகாப்பதற்கும் நீங்கள் முன்னுரிமை வழங்குவீர்கள். அது அனைத்துப் பிரசைகளினதும் பொறுப்பாகும்.

**இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தின் முன்னோடித் தலைவராக இருந்த மகாத்மா காந்தி அவர்கள் இந்தியாவில் உற்பத்தி செய்த ஆடைகளை மட்டும் பயன்படுத்தி தேசியத்தை மதிப்பதன் முன்மாதிரியாகத் திகழ்ந்தார்.**

**அபிமானம் என்பது உள்ளத்தில் ஏற்படுகின்ற நல்லெண்ணம் மட்டுமின்றி அது தொடர்பாகச் செய்கின்ற செயற்பாடுமாகும்.**

**சாராம்சம்**

இந்தப் பாட அலகை நன்றாகக் கற்ற நீங்கள் சிறந்த நற்பிரசையாக சமூகத்தில் வாழ்வதற்குத் தேவையான நல்ல பல குணாதிசயங்களை மென் மேலும் விருத்தி செய்து கொள்வதற்குரிய பல விடயங்களை அவதானித்திருப்பீர்கள்.

- நாம் பேசுகின்ற வார்த்தைகள் பண்பானதாகவும், மரியாதையானதாகவும் இருத்தல் வேண்டும்.
- பிறரின் கருத்துகளுக்கு மதிப்பளித்து, கலந்துரையாடி முடிவுகளை எடுத்தல் வேண்டும்.
- ஒழுக்கமாகவும் பிறரைத் துன்புறுத்தாதவாறு தமது கடமைகளை செய்தல் வேண்டும்.
- நல்லவற்றையும் தீயவற்றையும் அறிந்து கொள்ளல் வேண்டும்.
- சம்பிரதாயங்கள், சட்டதிட்டங்களுக்கு மதிப்பளித்தல் வேண்டும். எமக்குக் கிடைக்கின்ற வளங்களை சிக்கனமாக பயன்படுத்தல் வேண்டும். பொதுச் சொத்துக்களை பாதுகாக்க வேண்டும்.
- எமது சுற்றாடலைப்பாதுகாக்க வேண்டும். எமது நாட்டிலுள்ளவைகளுக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும்.
- எமது நாட்டின் அரும் பொக்கிஷங்களைப் பாதுகாக்க வேண்டும்.